மஞ்சரி

பிப்ரவரி, 1958
ஹேவிளம்பி - மாசி
40 நயா பைசா

சிலந்தி உலகம்

கண்ணீர் விடும் சிலை

அன்புக் கலை
(ஆங்கிலக் கதை)

விளம்பரப் பெண்
(தெலுங்குக் கதை)

குன்றும் இன்பம்

நிழல் கட்டுக்கு அடங்காதது. சூரிய ஒளியைச் சிறு நிழல் கூட நூறு மடங்காகத் துரத்திச் செல்கிறது. அதுபோல, துன்பமும் இன்பமும் தனித்தனியானவை என்றாலும், எல்லையில்லாத துன்பத்தால் இன்பம் குன்றிவிடுகிறது.

—ராஜதரங்கிணி.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேஞபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள் :
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-
பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும்.
பிரதி விலை 40 நயா பைசா (6½ அணு). வருஷ சந்தா ரூ
(ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மா
என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மார்
தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா
குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலு
கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: பிப்ரவரி 1958 [இதழ் 2

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

காஷ்மீர்ச் சதுரங்கம்: காஷ்மீர்ப் பிரச்னை மிகவும் சுலபமாகத் தீர்ந்துவிடக் கூடியது. ஆனால், அது உலக வல்லரசுகளின் சதுரங்கக் காய்களுள் ஒன்றாகும்படி நாம் இடங் கொடுத்ததுதான் இவ்வளவு சிக்கலுக்கும் காரணம். இப்போது பழைய கிராஹாம் மறுபடியும் வந்திருக்கிறார். பாகிஸ்தான் சர்க்காருடனும் பாரத சர்க்காருடனும் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு, அவர் பெரிதாய் எதையும் சாதித்து விடுவார் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. இதே சமயம் பழைய ஷேக் அப்துல்லா சாகேப், புதிய அப்துல்லாவாக மாறிச் சிறையிலிருந்து வெளிப்பட்டிருக்கிறார். அவரைக் காஷ்மீரின் பக்ஷி குலாம் சர்க்கார் இந்தச் சமயம் பார்த்து வெளியிட்டது அதன் துணிவைக் காட்டுகிறது. 1953 ஆகஸ்ட் 9-இல் அப்துல்லா சிறைப்பட்டார். அதற்கு முன் அவர் காஷ்மீரின் முதல் மந்திரி பதவி வகித்து வந்தார். 'காஷ்மீர்ச் சிங்கம்' என்று விடுதலை இயக்கக் காலத்தில் பெயர் வாங்கியவர் ஷேக் அப்துல்லா. ''தம் குடும்பத்தில் ஒருவனாக நேரு என்னைப் பாவித்து நடத்தினார்'' என்று இன்றும் அவர் சொல்லுகிறார். அப்படிப்பட்டவர் சிறையிருந்த மனக்கசப்புக் காரணமாகவோ என்னவோ, வகுப்புவாதி போல் இன்று பேசத் தொடங்கியிருக்கிறார். வகுப்புவாதத்தால் பாகிஸ்தான் பிரிவினையின்போது நாடு பட்ட அவதியையும் வேதனையையும் எண்ணிப் பார்க்கவில்லை அப்துல்லா. காஷ்மீர்ப் பிரச்னை இனியும் இப்படியே தீராதிருந்து வந்தால், பெருந் தொல்லைகளுக்கு இடமாகும். பாரதத்துக்கு மட்டும் அல்ல; பாகிஸ்தானுக்குந்தான் தொல்லை. பிரச்னை இதுவரைக்கும் தீராததற்கு, பாகிஸ்தானின் பிடிவாத புத்தியே காரணம். அது சட்டம் பேசினால், இந்தியாவும் சட்டந்தான் பேசவேண்டியிருக்கிறது. சரித்திர ரீதியான பல காரணங்களையும் இன்றைய நிலைமைகளையும் சீர்தூக்கிப் பார்த்தால், பாகிஸ்தானில் இணைந்த பகுதி பாகிஸ்தானிலும் இந்தியாவில் இணைந்த பகுதி இந்தியாவிலும் இருக்கவிடுவதுதான் பிரச்னைக்குச் சுலபமான தீர்வாயிருக்கும். இப்படி ஏதாவது ஒரு பரிகாரம் காண, தங்களுக்குள்ளே பாகிஸ்தான் சர்க்காரும் பாரத சர்க்காரும் பேச்சுவார்த்தை நடத்த முடியாத நிலைமையை உண்டாக்கியது பாகிஸ்தான். இனியாவது தன் பிடிவாத புத்தியை விட்டுச் சமரசத்துக்கு உண்மையிலே தான் தயார் என்பதைப் பாகிஸ்தான் குறிப்பிடுமானால், பாரத சர்க்கார் உடனே மகிழ்ச்சியுடன் இணங்கத் தயங்காது. பாகிஸ்தான் என்ன செய்யப் போகிறதோ!

ஹிந்தியும் ராஜாஜியும்: சுமார் ஒரு வருஷத்துக்கு முன்னே, இந்தத் தலைப்புடன் 'மஞ்சரி'யில் ஒரு தலையங்கம் வந்தது நண்பர்களுக்கு நினைவிருக்கும். இந்திய மொழிப் பிரச்னைக்குப் பரிகாரம் காணும்

பேரியக்கத்தை நடத்த வல்ல தனித் தலைவர் ராஜாஜிதான் என்றும் இதை அவர் மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம். இன்று ராஜாஜி அந்தப் பேரியக்கத்தைத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். 'ஆங்கிலமே கால கெடு இல்லாமல், மத்திய சர்க்காரின் துரைத்தன மொழியாக இருக்க வேண்டும்; இந்த ஏற்பாட்டை மாற்ற வேண்டுமானால், உரிய காலத்தில் அதைச் செய்ய வருங்காலச் சந்ததிக்கு விட்டு விடவேண்டும்'-இதுதான் ராஜாஜியின் கட்சி. அகில இந்தியக் காங்கிரஸ் சமீபத்தில் கூடி நிறைவேற்றிய தீர்மானம் இதை ஏற்கவில்லை. 1965-இல் ஹிந்தி வந்துவிடத்தான் வேண்டுமாம்; அதோடு கூட இருக்க ஆங்கிலத்துக்கும் இடம் கொடுப்பார்களாம்! இந்தத் தீர்மானம் எந்த விதத்திலும் திருப்தி தருவதல்ல; இதனால் பல பெரிய உபத்திரவங்கள் நேரும். கட்டாயப்படுத்தி யார்மீதும் ஹிந்தியைத் திணிக்கப் போவதில்லை என்று அவர்கள் சொல்லும் உறுதிமொழி யெல்லாம், இந்தத் தீர்மானத்துக்கு எதிரே அர்த்தமற்றுப் போகின்றன. கட்டாயம் என்றால், தடிக்கம்பை வைத்துக்கொண்டு மண்டைக்கு மேலே ஓங்க வேண்டுமா என்ன? மறைமுகமான கட்டாயந்தானே இது? எனவேதான், ராஜாஜி இதை எதிர்க்கிறார். தென்னாடு-தமிழ் நாடு மட்டுமல்ல, ஆந்திரமும் கன்னடமும் கேரளமுமே-அவருக்குக் கடமைப்பட்டிருக்கின்றன. அவர் மேற்கொண்ட இயக்கம் வெற்றிபெற வேண்டும்.

உழைப்பவருக்கு உதவி: சிறு தொழில்களைப் புரிய விரும்புவோருக்கு 1,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையில் கடன் உதவ, நடை முதல் வருஷத்தில் பத்துக் கோடி ரூபாய் செலவழிக்க மத்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். இது பாராட்டுதலுக்கு உரிய விஷயம். சிறு தொழில் போர்டின் கூட்டத்தில், யூனியன் தொழில் மந்திரி மனுபாய் ஷா இந்தத் திட்டம் பற்றித் தெரிவித்த போது, ராஜ்ய சர்க்கார் பிரதிநிதிகளுக்குச் சில யோசனைகள் கூறினார். யூனியன் சர்க்கார் தரும் இந்த நிதியைச் சிறு தொழிலில் ஈடுபட்ட மக்களுக்கு உதவும் போது, மாகாண சர்க்கார்கள் தாராளம் காட்டவேண்டும் என்று சொன்னார். ''நாம் நம்பிக்கை காட்டினால் மட்டுமே, மற்றவரும் நம்மிடம் நம்பிக்கையாக நடப்பார்கள். சின்ன நிலையில் உள்ள மனிதன் ஒரு போதும் உங்களைக் கைவிடமாட்டான். அவன் ஒருவன்தான் சற்றும் நம்பிக்கைத் துரோகம் செய்யாமல் நடப்பவன். என்னுடைய நீண்டகால அநுபவத்திலிருந்து இதைச் சொல்லுகிறேன். சின்ன நிலையில் உள்ள, ஆனால் ஆற்றலும் சுறுசுறுப்பும் உடைய எத்தனையோ மனிதர்களிடம் பழகிய அநுபவம் எனக்கு உண்டு.'' அருமையான சொல்; அறிவு பொதிந்த சொல்!

அதிருஷ்டம்

''ஒரு தளபதிக்கு வேண்டிய மிக முக்கியமான யோக்கியதை என்ன?'' என்று மகா நெப்போலியனை யாரோ கேட்டார்கள்.

''அதிருஷ்டம்'' என்று அவர் சட்டென்று பதில் சொன்னார்.

வெற்றிமாலை சூட அதிருஷ்டம் எப்போதும் தேவைதான். ஆனால், அதிருஷ்டத்தை அணைந்துகொள்ளுவது எப்படி என்று தெரிந்தவன் பக்கமே அது வந்து காத்திருக்கும்.

—கோலின் ஆர். கூட், 'தி டெய்லி டெலிகிராஃப்'.

கூலி வேலை செய்ய மாட்டார்கள், யானை பிடிப்பார்கள் - இப்படிப்பட்ட மலசர் -

மலைவாழ் மக்கள்

பிலோ இருதயநாத்

மலசர்களைக் காண வேண்டுமானால் பொள்ளாச்சியிலிருந்து பஸ் மார்க்கமாக வால்பாறை போகும் வழியில், நீர்வீழ்ச்சி என்னும் இடத்தில் இறங்கிச் செல்ல வேண்டும். அங்கே சுமார் 600 அடி கீழே கீழ்ப் பூனச்சி (கீழ்ப் பூனுஞ்சி) என்ற கடுமையான யானைக்காட்டின் மத்தியில் தைரியமாக இவர்கள் வாழ்வதைக் காணலாம்.

இவர்களின் தாயகம் மறையூர் என்றும், கேரளம் என்றும் கூறுகிறார்கள். இவர்கள் நான்கு பக்கங்களிலும் இருக்கும் மலை உச்சியிலும் அடிவாரத்திலும் சிதறுண்டு வாழ்கிறார்கள். இவர்களைக் காணப் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களே சிறந்த மாதங்கள். மற்ற மாதங்களில் இங்கே அட்டைப் பூச்சிகளின் தொல்லையும், யானைகளால் ஆபத்தும் உண்டாகக் கூடும். மலசரில் வேறு சிலர் கொச்சி, திருவாங்கூர் எல்லைகளில் இருக்கும் காடுகளில் வசிக்கிறார்கள். இவர்களில் நாட்டு மலசர், கொங்கு மலசர் என்று இரு பிரிவுகள் உண்டு.

மலை உச்சி மலசர், மத்திய மலை மலசர், மலையடிவார மலசர் என்று இவர்கள் வாழும் பகுதிகளைக் கொண்டு மூன்று பிரிவாக இப்படிப் பிரிந்து வாழ்ந்தாலும், இவர்களுக்குள் பெண் கொடுக்கல் வாங்கல் உண்டு. மலை உச்சியிலும் அடர்ந்த காடுகளிலும் பாறைக் குகையிலும் அடிவாரத்திலும் மலசர் வாழ்கிறார்கள். அவர்கள் குடியிருக்கும் இடத்துக்குப் பாடி அல்லது பாட்டி என்று பெயர். பாடியில் சுமார் ஐந்து முதல் நாற்பது குடிசைகள் வரையில் இருக்கின்றன. அந்தக்



சுவர் கட்டவும் படுக்கவும் பயன் படும் மூங்கில் பாய்

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 22-7-'57), சென்னை.



மலச மங்கை

குடிசைகளின் மத்தியில் இருக்கும் சந்துக்குச் சாலை என்று பெயர். தேன் சேகரிக்கவும், புதிய புதிய நிலங்களில் பயிர் செய்யவும் இவர்கள் அடிக்கடி இடம் விட்டு இடம் மாறுவதால், தங்கள் குடிசைகளை அடிக்கடி மாற்ற ஏற்றாற்போல் அமைத்துக்கொள்ளுகிறார்கள்.

முற்றிய அகலமான மூங்கிலை இரண்டாகப் பிளந்து, நடுக்கணுக்களை நீக்கி, அதை அப்படியே பாய் போல் விரித்துச் சுவராகவும் கூரையாகவும் வைக்கிறார்கள். காட்டில் கிடைக்கும் சில இலைகளை மேலே வைத்துக் கட்டுகிறார்கள். மூங்கில் சுவர்களின் மேல், செம்மண்ணைப் பூசிக் கெட்டிப் படுத்துகிறார்கள். அந்தப் பிளந்த மூங்கிலையே உட்காரவும் படுக்கவும் உபயோகிக்கிறார்கள். குடிசை கட்டுவதற்குக் காட்டு நார்களை உபயோகப்படுத்துகிறார்கள். மூங்கிலைக் கணுக் கிழித்து அதன்மேல் ஏறிக் குடிசைகளைக் கட்டுகிறார்கள். இன்னும் சிலர் காட்டு விலங்குகளின் உபத்திரவத்துக்கு அஞ்சி, மலைச்சரிவில் பெரிய மரக்கிளைகளுடன் கழிகளை இணைத்துக் கட்டிய குடிசையின் மேல் பலவித இலைகளை வேய்ந்து குடிசை இருப்பதே தெரியாமல் செய்து வாழ்கிறார்கள். குடிசைக்குச் செல்ல ஏணியை உபயோகிக்கிறார்கள். இத்தனை ஆபத்துக்களில் வாழ்ந்தாலும், சந்தோஷமாகவேதான் இருக்கிறார்கள்.

அந்நியர் வந்தால் உட்கார ஒரு திண்ணை வெளியிலும், படுப்பதற்கு ஒரு திண்ணை குடிசைக்கு உள்ளும், குளிர் காயக் கட்டைகள் எரிப்பதற்குத் தனியிடம் ஒன்றும் குடிசையில் இருக்கின்றன. அடிக்கடி சாணத்தால் குடிசைகளை மெழுகிச் சுத்தமாக இவர்கள் வைத்திருக்கிறார்கள்.

மலசர் கறுத்த மேனியும் பரட்டைத் தலையும் சுமார் ஐந்தடி உயரமுமாக இருக்கிறார்கள். சாதாரண நாட்களிலும் விசேஷ நாட்களிலும், வேஷ்டியும் தலைப்பாகையும் அணிகிறார்கள். ஆண்களில் சிலர் கையில் பித்தளைக் காப்பு அணிந்திருக்கிறார்கள். அரிவாளும் கடப்பாரையும் இவர்களின் முக்கிய ஆயுதம். எங்கே சென்றாலும், இவை இரண்டையுந்தான் எடுத்துச் செல்கிறார்கள்.

மலசப் பெண்களை மலைச்சி என்கிறார்கள். மலைச்சிகள் சாதாரணமாக நம் பெண்களைப் போன்ற உயரம் உடையவர்கள். நூல் புடைவை கட்டுகிறார்கள். கையில் பித்தளைக் காப்பும், காலில் பித்தளை வளையும், காதில் சுருள் ஓலையும் அணிந்திருக்கிறார்கள். கோழி வளர்ப்பு, வீட்டு வேலை, சிறுவயல் வேலை, தோட்ட வேலை இவை எல்லாம் செய்கிறார்கள்.

ஆண்கள் தலைமயிரை மூடி முண்டாசு கட்டுகிறார்கள். பெண்கள் கோடாலிக் கொண்டை போட்டு மலர் சூடுகிறார்கள்.

குழந்தை பிறந்த ஏழாவது நாள் குழந்தைக்கு நாமகரணம் செய்கிறார்கள். அடுத்த பௌர்ணமியில் ஏணையில் போடுவதுண்டு. பித்தளை நகைகளைத்தான் அதிகமாகக் குழந்தைகளுக்கு அணிவிக்கிறார்கள். தங்களுக்குக் குழந்தைகள் இல்லை என்றால், தம்பி, மாமன், அக்காள் இவர்களின் குழந்தைகளை எடுத்து வளர்ப்பதுண்டு.

ருதுவாகும் பெண் தன் குடிசையைவிட்டுச் சிறிது தூரத்தில் தனிக் குடிசை கட்டி, அதில் ஏழு நாட்கள் இருந்து, எட்டாம் நாள் குளிப்பாள். அவள் இருந்த குடிசையையும் தீயிட்டுக் கொளுத்திவிடுவார்கள். அவள்

கோடி உடுத்துவாள். சக்திக்குத் தகுந்தாற்போல் விருந்து வைத்து, சாமை, ராகி, சோளம் முதலியவற்றைப் பிடி சுற்றி எறிந்துவிட்டு, அவளை வீட்டுக்குள் அழைத்துக் கொள்ளுகிறார்கள்.

விசேஷமான நாட்களிலும் திருமண நாட்களிலும் பிணத்தின் முன்னிலையிலும், ஆண்களும் பெண்களும் சேர்ந்து வாத்தியங்கள் வாசித்து நடனமாடுவதுண்டு. வாத்தியங்கள் எல்லாம் மூங்கிலில் செய்தவை. தங்களைக் காண வரும் மக்கள் தங்குவதற்கென்றே தனிக் குடிசைகளை இவர்கள் கட்டியிருக்கிறார்கள். தங்களிடம் இருக்கும் ஆகாரங்களில் நமக்கு எவை வேண்டுமோ அவற்றைக் கொடுக்கிறார்கள். இரவில் விளக்கேற்றுவதில்லை. அதற்குப் பதிலாக நெருப்புக் கட்டைகளைத்தான் உபயோகிக்கிறார்கள். இரவும் பகலும் எரியும் நெருப்பில் இரண்டு மூன்று அம்பின் முனைகளை வைத்திருப்பார்கள். கொடிய மிருகங்கள் வந்தால் எய்து கொல்லுவதற்காகவே இந்த ஏற்பாடு.

ஆண்கள் இரண்டு மூன்று திருமணங்கள் வரையில் செய்துகொள்ளலாம். திருமணம் பிறைக்கு முன் பகலில் நடைபெறும். அன்று எந்த விதமான இறைச்சியையும் சமைக்கக்கூடாது. விவாகம் பத்து வயசில் பெற்றோர்களின் பொறுப்பில் நடக்கும். பையனையும் பெண்ணையும் தூக்கியும் மடியில் வைத்துக்கொண்டும் செய்து வைப்பார்கள். அவர்கள் பெரியவர்களான பின், ஒருவரை ஒருவர் விரும்பாவிட்டால், பஞ்சாயத்து மூலம் விடுதலை பெறலாம். ஆனால் இப்படி இதுவரையில் யாருக்கும் நடந்ததில்லையாம்.

பெரியவர்களின் அநுமதி இல்லாமல் காதல் கொள்வது குற்றம். பெண் வீட்டாருக்கும் பிள்ளை வீட்டாருக்கும் சிறிய தொகை அபராதம் போட்டு, பிறகு அவர்கள் இருவருக்குமே திருமணம் செய்து வைப்பார்கள். எந்தத் திருமணமாக இருந்தாலும், சடங்கு ஒன்று தான். மணமான மங்கையை ஒரு வாலிபன் காதல் செய்தால், முதல்

மங்கையரின் உலக்கை இடி நடனம்



தேன் எடுக்கும் மலசன்



மலசர் கூட்டம்

திருமணத்தின் செலவு முழுவதையும் அவள் தன் காதலனிடமிருந்து வாங்கிப் பழைய கணவனுக்குத் தரவேண்டும். தான் பெற்ற குழந்தைகளைத் தன்னுடன் அழைத்துவர முடியாது. அவை தகப்பனிடமே இருக்கும். ஒருவனே இரண்டு சகோதரிகளைத் திருமணம் செய்துகொள்ளலாம்.

திருமணத்துக்கு ஆண்கள் கோடி வேட்டியும் தலைப்பாகையும், பெண்கள் கோடிப் புடைவையும் அணிவார்கள். காலையில் பையனைப் பெண் வீட்டின் முன் போட்டிருக்கும் பந்தலில் உட்கார வைப்பார்கள். பந்தலிலிருந்து பெண் வீட்டுக்குள் பையன் வந்ததும், ரூபாய் பன்னிரண்டரையும் 'மாமிக்கூறை' என்று ஒரு புடைவையும் பெண்ணுக்கு ஒரு கோடிப்புடைவையும் முறத்தில் வைத்து, மாமியார் கையில் கொடுத்து, 'பெண்ணைப் பெற்ற தோஷம்' என்று சொல்லி வணங்க வேண்டும்.

திருமணத்துக்கு வெள்ளியிலோ பித்தளையிலோ பொட்டுத் தாலி என்று நாலணு அளவு ஒரு தாலி செய்து மஞ்சள், கயிற்றில் கோத்துப் பெண்ணின் கழுத்தில் மாமி கட்டவேண்டும்.

திருமணத்தன்று குல தெய்வத்துக்கு யாதொரு பலியும் கொடுப்பதில்லை.

பஞ்சாயத்தார், பூசாரி, தலைவன் இவர்கள் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும். மணம் முடிந்ததும் பெண்ணின் நடுக் கால் விரலில் பித்தளை வளையம் (மோதிரம்) அணிவிக்கிறார்கள். அதற்கு 'மெட்டி' என்று பெயர்.

மலைச்சி விதவையானல், அவள் மறுமணம் செய்துகொள்ளலாம். விதவை நெற்றியில் பொட்டும், கொண்டையில் பூவும் வைக்கக் கூடாது. விதவைக்கும் பகலில் தான் திருமணம் நடைபெறும். மணக்கும் விருப்பத்துடன் விதவைகளைக் காண மற்ற ஊர்களிலுள்ள வாலிபர்கள், பஞ்சாயத்தாரிடம் அநுமதி பெற்று வருவதுண்டு, ஏவனுவது அவளைத் திருமணம் செய்துகொள்வதோ தன் ஆதரவில் வைத்துக்கொள்வதோ உண்டு. விதவையின் குழந்தைகள் விதவையுடன்தான் செல்லும்.

தம்பதிகளுக்குள் நேர்ந்த சண்டையாலும் பெண்ணின் துன்மார்க்கத்தாலும் விவாக விலக்கு ஏற்படுவது உண்டு. ஊரிலுள்ள பூசாரியும் தலைவரும் கூடி, மனைவியையும் கணவனையும் வைத்துக்கொண்டு, குற்றம் யாருடையதென்று விசாரித்துத் தண்டனை விதிப்பார்கள். பெண்ணின் நடத்தை காரணமாகப் புருஷன் வேண்டாம் என்று கூறினல், அவளைத் தாயகம் அனுப்புவார்கள். எந்தக் காரணத்தை முன்னிட்டும், கணவன் மறுபடியும் அவளைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. ஆனல் மற்றவர்கள் மணக்கலாம். அவள் பெற்ற குழந்தைகள் அவளிடமேதான் இருக்கவேண்டும்.

மலேரியாக் காய்ச்சலும், கால் கை, வீக்கமுந்தான் இவர்களைப் பாதிக்கின்றன. வியாதி வந்தால், சில வேர்களை ஒன்ருகச் சேர்த்துக் 'கழாயம்' போட்டுக் குடிக்கிருர்கள்.

பெண்ணின் பிரசவத்துக்கென்று தனிக் குடிசை கட்டி, அதில் பெண்ணை வைத்து வயசான மங்கைகள் கவனிப்பார்கள். தனிக் குடிசையில் இருந்தவள் கடைசி நாளன்று குளித்த பிறகு, குடிசையைக் கொளுத்திவிட்டுத் தன் குடிசைக்குப் போவாள். அதுவரையில் கணவன்தான் குடிசைக்கு வெளியில் அவளுக்கு உணவு கொண்டு போய் வைப்பான்.

காட்டுக் கிழங்குகள்தான் இவர்களுக்கு முக்கிய உணவு. என்ருலும், எல்லா உணவும் எல்லா இறைச்சியும் சாப்பிடுவார்கள். திங்கட்கிழமையிலும், சனிக்கிழமையிலும், சூரிய கிரகணத்திலும் இறைச்சி சாப்பிடமாட்டார்கள். காலையில் பழையதோ கஞ்சியோ குடித்துச் சென்ருல், மறுபடியும் மாலையில்தான் குடிசைக்கு வருவார்கள். இரவில் நன்ருகச் சமைத்துச் சாப்பிடுவார்கள். அடிக்

கடி எல்லாரும் கூடி 'நிலாச் சோறு' சாப்பிடுவது உண்டு.

யானை பிடிக்கவும் அதைப் பழக்கவும் அரசாங்கத்துக்கு இவர்கள் உதவி செய்கிறார்கள். சிலர் பக்கத்தில் இருக்கும் வயல்களில் கூலிக்கு வேலை செய்கிறார்கள். தங்களுக்குக் கிடைத்த நிலத்தில் வேளாண்மையும் செய்வதுண்டு.

கோழி வளர்ப்பது, ஆகாரத்துக்காக விலை வைத்துப் பறவைகள் பிடிப்பது, தோட்டத்தில் காய்கறி பயிர் செய்வது இந்த வேலைகளைப் பெண்கள் செய்கிறார்கள். பொதுவாக மலசர்கள் கூலி வேலை செய்ய மாட்டார்கள். காட்டில் கிடைக்கும் தேன், கிழங்கு, பாம்புத் தோல் இவற்றைக் கொண்டு வந்து விற்றுப் பிழைப்பவர்களும் உண்டு. சிலர் வேட்டையாடுவது உண்டு.

மரத்திலோ பாறையிலோ தேனை ஒருவன் கண்டதும் ஏதாவதோர் அடையாளம் வைத்து விடுவான். அந்த அடையாளத்தை மற்றவன் கண்டால், தேனை எடுக்க முயல மாட்டான். அடையாளம் வைத்தவனே மறுநாள் முதுகில் மண்ணெண்ணெய் டின்னோ, மூங்கில் குழாயோ கட்டிக்கொண்டு அங்கே செல்வான். மூங்கிலைக் கணுக்கணுவாக வெட்டி மரத்தில் சாய்த்து, மூங்கில் கணுக்களில் காலை வைத்து ஏறித் தேனை எடுத்து, முதுகில் உள்ள டின்னிலோ மூங்கில் குழாயிலோ நிரப்பிக்கொண்டு, வேகமாகக் கீழே இறங்கிவிடுவான். பாறைத் தேன் எடுப்பதில் எல்லா ஆதிவாசிகளும், ஒரே முறையையும் ஒரே பழக்கத்தையுந்தான் கையாளுகிறார்கள். தேனுக்காக இரவில் காட்டில் மரத்தின்மேல் தூங்குவதும் உண்டு.

காட்டில் கோடரியால் வெட்டி வேலை செய்வதிலும், சுமைகளை மலை உச்சிக்குத் தூக்கிச் செய்வதிலும், காட்டு இலாகா அதிகாரிகளுக்கு உதவி செய்வதிலும் இவர்கள் மிகவும் சமர்த்தர்கள். மலையடிவாரத்தில் இருக்கும் மலசர்கள் சிலருக்கு, சில முதலாளிகள் இலவசமாகக் குடிசை கட்டிக் கொள்ள நிலம் கொடுத்து, தங்கள் வயல்களில் பயிர் வேலை செய்ய அமர்த்திக்கொண்டு, வாரக் கூலியோ நெல்லோ கொடுக்கிறார்கள். இப்படி எஜமானர்களிடம் கூலிக்கு வேலை செய்யும் மலசர்களை மற்ற மலசர்கள் 'மண்ணடி' என்று அழைக்கிறார்கள்.

சிலர் தண்ணீரை ஓடையில் தேக்கி, அதில் மயக்கம் தரும் வேர்களையும் இலைகளையும் அரைத்துக் கரைக்கிறார்கள். மயக்கம் வந்து மீன்கள் மிதந்ததும் அவற்றைப் பிடித்து, அவற்றின் மயக்கம் நீங்கியதும் சமைப்பார்கள்.

மலசர்களின் தலைவனை 'மூப்பன்' என்று அழைக்கிறார்கள். அநுபவமும், நேர்மையும் உள்ளவனைப் பார்த்துத் தலைவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஊரில் ஏதாவது குற்றம் நிகழ்ந்தால், பெரியவர்கள் கூடி வட்டமாக உட்கார்ந்து பஞ்சாயத்துப் பேசித் தீர்மானித்து அபராதம் விதிப்பார்கள். தலைவன் நடுநிலை வகிக்க வேண்டும். ஒரு பாடிக்குத் தலைவனும் ஒரு பூசாரியும் இருக்கிறார்கள். பஞ்சாயத்தார் விதிக்கும் அபராதத்தைக் கோயில் செலவுக்கு வைத்துக்கொள்ளுவார்கள்.

மாரியையும் மாகாளியையும் பல காட்டுத் தெய்வங்களையும் வழிபடுகிறார்கள். வீரபத்திரன், பத்திரகாளி என்ற இரு தெய்வங்களை மரத்தடியில் திண்ணை கட்டி வைத்து வணங்குவார்கள். இவற்றுக்குத் தேங்காய், பழம் வைத்து, கோழி பலியிட்டுப் படைப்பார்கள். பெண்களும் கோயிலுக்குள் போகலாம். வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமைகளில் வார பூஜை போடுவதுண்டு.

'மண்டல பூஜை' என்று கார்த்திகை மாதம் முதல் தேதியிலிருந்து, மார்கழி மாதம் 15-ஆம் தேதி வரையில், பூஜை நடத்திக் கொண்டாடுவார்கள். மாசி, பங்குனி மாதங்களில் பிறைக்குப் பின் பொங்கலிட்டுத் தெய்வங்களுக்குப் பூஜை போடுவார்கள். சில தெய்வங்களுக்குக் கோழியும் செம்மறியாடும் பலி இடுவார்கள். யானை,

அல்லது புலியிடமிருந்து ஆபத்துக்கள் வராதிருக்க, 'மல்லன்' என்ற தெய்வத்துக்கு மரத்தடியில் பூஜை போடுகிறார்கள். இத்தனை பூஜைகளோடு, சங்கராந்தி, விஷு, ஓணம் போன்ற விழா நாட்களையும் கொண்டாடுகிறார்கள். மலசர்கள் உண்மையில் சத்தியமும் தெய்வ பக்தியும் உடையவர்கள். எந்தப் பணி செய்தாலும், பக்தியோடு செய்வார்கள். பேய், பிசாசு, சூனியம் இவற்றில் நம்பிக்கை உடையவர்கள்.

ஒவ்வொரு மலசரிடமும் ஒவ்வொரு குல தெய்வம் வாசம் செய்கிறதென்ற நம்பிக்கையால், இவர்கள் ஒருவரை ஒருவர் கொலை புரிவதோ, கத்தியால் காயப்படுத்துவதோ இல்லை. அப்படிச் செய்தால் தங்களிடம் இருக்கும் குல தெய்வமே தங்களைக் காயப்படுத்தி விடுமென்ற நம்பிக்கை உண்டு.

கஷ்டங்கள் வந்தால், பெரிய முறத்தில் இரும்புச் சங்கிலியைப் போட்டு, ஆகாயத்தைப் பார்த்தபடி இப்படியும் அப்படியும் ஆட்டுகிறார்கள். ஆட்டுகிறவனுக்கு 'அருள்' வந்து, வரப்போகும் கஷ்டங்களையும் மகிழ்ச்சிகளையும் சொல்லுகிறான்: பிறகு சாமியாட்டம் ஆடுகிறான்.

இவர்கள் பேசுவது திருந்தாமொழியான 'தூதம்' என்ற பழைய பாஷை: அதையே இன்று சற்று மாறுபாடான கொச்சைத் தமிழாக மாற்றி வேகமாகப் பேசுகிறார்கள். இன்று இவர்கள் தமிழ் எழுதவும் வாசிக்கவும் பழகுகிறார்கள். தமிழ் பேசும்போது சற்று இழுத்து இழுத்துப் பேசுகிறார்கள்.

மலசர் என்ற பதத்துக்கு மலை அரசர் என்பது பொருள். இவர்களின் ஜனத்தொகை சுமார் பத்தாயிரத்துக்குமேல் இருக்கும். இவர்கள் ஓணம் பண்டிகையைக் கொண்டாடுவதால், மலையாளத்திலிருந்து சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்திருக்கவேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள்.

நல்ல தைரியமும் கூர்மையான பார்வையும் புத்திக் கூர்மையும் உடைய இவர்களுக்குக் கல்வி இல்லாமையே ஒரு பெருங்குறை. இவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தால், இன்னும் சில ஆண்டுக்குள் நல்ல நிலைக்கு வருவார்கள் என்பது திண்ணம்.

குருடரின் லாபம்

பிரிட்டிஷ் அயல்நாட்டு விவகார மந்திரியா யிருந்த வைக்கவுண்ட் கிரே மிகவும் கீர்த்தி பெற்றவர். கடைசிக் காலத்தில் அவருக்குக் கண் பார்வை போய்விட்டது. இதன்மேல் உப்பிய 'ப்ரேல்' என்ற புள்ளி எழுத்துக்களை அவர் கற்றுக்கொண்டு, புஸ்தகங்களைப் படித்தார்.

''குருடாய்ப் போனதில் ஒரு லாபம் இருக்கிறது: மாரிக் காலத்தில் புஸ்தகத்தைப் போர்வைக்குள்ளேயே வைத்துக்கொண்டு நெருடிப் படிக்க முடிகிறது; குளிரில் விறைக்கக் கையை வெளியே நீட்ட வேண்டியதில்லை'' என்று அவர் சொன்னார்.

—வைக்கவுண்ட் ஸாமுவேல், 'மெம்வார்ஸ்'.

சரியான தருணம்

ஆஸ்பத்திரி காண்டீனில் இரண்டு வாலிப டாக்டர்கள் சந்தித்தார்கள். அவர்களில் ஒருவன் மற்றவனிடம் சொன்னான்: ''கடைசி ஆப்பரேஷனைச் சரியான சமயத்தில் செய்தேன். சில மணி நேரம் சென்றிருந்தால், அது இல்லாமலே அவள் பிழைத்திருப்பாள்.''

—இ. எஃப். டி.

பூ பௌதிக ஆண்டு

★

பூமியையும் வாயு மண்டலத்தையும் வான வெளியையும் பற்றிய எத்தனையோ விஷயங்கள் இன்னமும் விஞ்ஞானி களுக்குப் பெரிய புதிராயிருக்கின்றன. அவற்றை ஆராய உலகத்து விஞ்ஞானிகளெல்லாம் இந்த ஆண்டில் முயன்று வருகிறார்கள். அந்த முயற்சிபற்றிய இந்தக் கட்டுரைக்கு ஆதாரங்கள்: (1) ஸோவியத் வானவெளிப் பிரயாணக் கமிஷன் காரியதரிசி அனட்டோலி கார்ப்பெங்கோ எழுதிய கட்டுரை; (2) ஐக்கிய அமெரிக்கத் தகவல் அதிகாரிகள் உதவிய விவரங்கள். படங்களும் ஐக்கிய அமெரிக்கத் தகவல் அதிகாரிகள் உதவியவைதான்.

நாம் வாழும் இந்தப் பூமண்டலத்தை ஆட்டிவைக்கும் இயற்கைச் சக்திகள் எவை? இதை ஆராய உலக விஞ்ஞானிகளெல்லாம் இதற்குமுன் ஒரு போதும் இல்லாத மிகப் பெரிய அளவில் 1957-ஜுலை முதல் தேதி முதல் முயன்று வருகிறார்கள். அன்று தொடங்கிப் பதினெட்டு மாதம் வரை, அதாவது 1958 டிசம்பர் 31-ஆம் தேதி முடிய உள்ள காலத்தைத்தான் சர்வதேசப் பூபௌதிக ஆண்டு (இண்டர்நேஷனல் ஜியோஃபிஸிக்கல் ஈயர்) என்று குறிக்கிறார்கள்.



விஞ்ஞானிகள் கப்பல்

எல்லாரும் ஒப்புக்கொண்ட ஒரு திட்டப்படி உலகெங்கும் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் வெவ்வேறு பூபௌதிக சக்திகளைப்பற்றி ஆராய்ச்சி புரிந்து வருகிறார்கள். செயற்கைச் சந்திரனை ருஷியா விட்டதும் இந்த ஆராய்ச்சிகளுக்கு உதவியான ஒரு காரியமே யாகும். பூமியைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலம் (அட்மாஸ்ஃபியர்) பல மைல் உயரம் இருக்கிறது. அந்த வாயு மண்டலத்தின் மேல்

பகுதியை ஆராய்வது, அகிலாண்டச் சூன்யவெளி (காஸ்மிக் ஸ்பேஸ்) பற்றிய ஆராய்ச்சிக்கு முதற்படியாகும். செயற்கைச் சந்திரனை விட்டே இந்த ஆராய்ச்சியைப் புரியவேண்டும். அப்படிச் செயற்கைச் சந்திரனை விட்டது, ஆகர்ஷண சக்தி (ஃபோர்ஸ் அவ் கிராவிட்டி) மீது மனிதன் பெற்ற ஒரு வெற்றி. வேறு கிரகங்களுக்குப் போக முடியாதபடி தடுக்கும் தடையாயிருப்பது ஆகர்ஷண சக்தியே.



கடலில் போடும் ரேடியோ

இப்போது ருஷியா விட்டுக் கொண்டுவரும் ஆரம்பச் செயற்கைச் சந்திரன்களில் மனிதர்கள் இல்லை. ஆயினும், இவற்றால் விஞ்ஞானத்தின் சக்தி அதிகரிக்கும்; இயற்கைமீது மனிதனின் ஆட்சி வலுவடையும். செயற்கைச் சந்திரனில் பல வகைக் கருவிகளை வைத்து வருகிறார்கள். பூமியைச் சூழ்ந்த வாயுக் கடலின் மேல்புறத்தை அந்தக் கருவிகள் ஆராயும். சூரிய மண்டலத்தில் அணுப்பிளந்து உஷ்ணம் உண்டாகும் விதம் (தெர்மோந்யூக்ளியர் ப்ராஸஸ்) பற்றியும் அவை ஆராயும். ஏனென்றால், சூரியனே பிரம்மாண்டமான அணுப் பிளவு அடுப்பு (ரியாக்டர்) மாதிரிதான் விளங்குகிறது.



ரேடியோவை மீட்கும் வெடி

வாயுமண்டலத்தைத் தாண்டி மேலே உள்ள நிலைமையை விஞ்ஞானிகள் ஆராய்ந்து விட்டால், எக்ஸ் ரே, அல்ட்ரா வயலெட் ரே இவை இரண்டின் கதிரியக்கம் (ரேடியேஷன்) குறித்த மர்மங்களை விஞ்ஞானிகள் அறிய முடியும். சூரியனிடமிருந்து வரும் கதிரியக்கத்தில் (ஸோலார் ரேடியேஷன்), சிறிது நேரமே வாழ்ந்து மறையும் சில மூலப் பொருள்கள் (எலிமெண்ட்ஸ்) இருப்பதாய், ஒளிப்பட்டைக் கோடுகளிலிருந்து (ஸ்பெக்ட்ரல் லைன்ஸ்) தெரிகிறது. எனவே, அந்த மூலப்பொருள்களுக்குச் சூரியனே உற்பத்தி ஸ்தானமாயிருக்க வேண்டும். சூரியனிலோ இயற்கைச் சூழ்நிலையில் அணுப் பிளவு நடக்கிறது. அந்த அணுப் பிளவில் நேரும் ரசாயன மாறுதல்களே இந்த மூலப்பொருள்களின் தோற்றத்துக் காரணம். சூரியனில் நிகழும் அணுப்பிளவை ஆராய்ந்தால், அணுப்பிளவு உஷ்ணத்தை எப்படிக் கட்டுப்படுத்திப் பயன் அடைய முடியும் என்பதை அறிந்துகொள்ள உதவியாயிருக்கும். இப்படிக் கட்டுப்படுத்தும் பிரச்னை நவீன விஞ்

ஞானத்தில் ஒரு பெரிய புதிராக இருந்து வருகிறது.

பூமிக்கு மேலே 100 முதல் 400 கிலோ மீட்டர் (அதாவது $62\frac{1}{2}$ முதல் 220 மைல்) வரைக்கும் உள்ள உயரத்தில் மின்சார சக்தி பாயக் கூடிய (எலெக்ட்ரோ - கண்டக்டிவ்) தட்டுக்கள் (லேயர்ஸ்) இருக்கின்றன. இங்கே சூரியனின் சிற்றலையான (ஷார்ட்-வேவ்) கதிர் வீச்சு, பிரபஞ்ச வெளியில் எங்கிருந்தோ வரும் கதிர்கள் (காஸ்மிக் ரேஸ்), விண் வீழ் கொள்ளிகளால் (மீட்டியர்ஸ்) சிதறும் துகள் இவையெல்லாம் அந்த வாயு மண்டலத் தட்டுக்களை மோதி அவற்றின் அணுக்களைச் சிதைக்கின்றன. இதன் விளைவாக மின்சக்தி ஏறிய ஏராளமான துணுக்குகள் (சார்ஜ்டு பார்ட்டிக்கிள்ஸ்) அருவிகள் போல் பாயத் தொடங்குகின்றன. இந்தச் சிக்கலான நிகழ்ச்சிகளின் விளைவாகவே வட துருவ ஜோதி (அரோரா போரியாலிஸ்), காந்தப் புயல் (மாக்னட்டிக் ஸ்டார்ம்) போன்ற ரசமான காட்சிகள் உண்டாகின்றன. மின் துகள் மண்டலம் (அயனுஸ்ஃபியர்) எப்படி உருவாகிறது, அதன் இயல்புகள் என்ன, சூரியனை எவ்வளவு தூரம் இவை சார்ந்திருக்கின்றன என்ற விவரங்களை ஆராய்ந்து கண்டு பிடித்தால், நவீன ரேடியோ விஞ்ஞானத்துக்குப் பேருதவியா யிருக்கும். நெடுந்தூர ஒலிபரப்புக்கு இந்த மின் துகள் மண்டலந்தான் உதவி செய்கிறது.

செயற்கைச் சந்திரனின் அயன வீதி (ஆர்பிட்) எப்படிச் செல்கிறது என்பதை வெவ்வேறு ஸ்தலங்களிலிருந்து கவனித்துக் கணக்கிட்டால், பூமியை அளக்கும் (ஜியோடிஸி) விஞ்ஞானிகளுக்கு உதவியா யிருக்கும். பூமியின் உருவம், பரி



தகவல் பதிந்த காகிதம்



கடல் ஆராய்ச்சி



ரேடியோவில் தகவல்

மாணம் இரண்டையும் நிர்ணயம் செய்ய இந்தக் கணக்கு அவர்களுக்குப் பயன்படும். நேரத்துக்கு நேரம் செயற்கைச் சந்திரனின் அயனவீதி மாறிக்கொண்டேயிருக்கும். இப்படி மாறும்போது வாயு மண்டலத்தின் வெவ்வேறு உயரங்களில் உள்ள அடர்த்தி (டென்ஸிட்டி) எவ்வளவு என்று பூபௌதிக விஞ்ஞானிகள் கணக்கெடுத்து விடலாம். மிக மிக நுட்பமான கருவிகளைக் கொண்டு அளந்து அறியக்கூடிய அடர்த்தியிலும் பல நூறு கூறு குறைவான அடர்த்தியே அந்த உயரங்களில் இருக்கிறது. ஆனால் அந்த அடர்த்தி விவரங்களைச் செயற்கைச் சந்திரனின் அயன வீதி மாறுதல்களைக் கொண்டு கணக்கிட்டு விடமுடியும்.



பிரம்மாண்டமான பலூன்

நம்முடைய பூமிக்குள்ளே ஆழத்தில் உள்ள அக்கினியின் நிலையையும் செயற்கைச் சந்திரன் மூலம் கண்டு பிடிக்கலாம். படிப்பவருக்கு இது என்னவோ விந்தையாகத் தோன்றும். பூமிக்கு மேலே வெவ்வேறு பகுதிகளில் செயற்கைச் சந்திரன் ஓடும்போது, அந்தச் சந்திரனின் உஷ்ண நிலைகளை நாம் குறித்துக்கொள்ள வேண்டும். சூரிய உஷ்ணத்தைப் பிரதிபலிப்பதிலும் கதிரியக்கத்திலும் பூமிக்கு உள்ள சக்தியை, இந்தப் புள்ளி விவரத்திலிருந்து கணித்துவிட முடியும். அப்படிக் கணித்தால், பூமியின் உஷ்ணச் சமநிலை (தெர்மல் பாலன்ஸ்) என்ன என்று திட்டமாய் மதிப்பிட்டு விடலாம்.

இப்படிப்பட்ட செயற்கைச் சந்திரனை விடுவதற்கு, ஏராளமான சக்தியும் பணமும் செலவாகும். எனவே, ஐக்கிய அமெரிக்கா, ஸோவியத் ருஷியா இரண்டும் இந்த முயற்சியில் இறங்கியிருக்கின்றன.

இப்படிச் செயற்கைச் சந்திரனை விட்டுப் பல தகவல்களைச் சேகரிப்பது மட்டும் அல்ல; வேறு பல வகையிலும் உலகெங்கும் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி நடக்கிறது. சில வகைகளை மட்டும் இங்கே உள்ள படங்களில் காணலாம்.

படம்-*1*: இது ஒரு கப்பல். இதன் பெயர் அட்லாண்டிஸ். இதில் பல விஞ்ஞானிகள் யாத்திரை செய்து அநேக மர்மங்களை ஆராய்கிறார்கள். இது சர்வதேசப் பூபௌதிக ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்தது. வுட்ஸ் ஹோல் கடல் அளவை நிலையத்துக்கு இது சொந்தம். அந்த நிலையத்தாரே இதைச் செலுத்துகிறார்கள்.

படம்-*2*: நீண்ட கழைபோல் தோன்றும் இது ஒரு ரேடியோவின் ஆகாயக் கம்பி. இந்த ரேடியோவில் சில கருவிகளைப் பொருத்தி, அப்படியே ஆகாயக் கம்பியோடு கடலுக்குள் தரைமட்டத்தில் போட்டு விடுகிறார்கள். அந்தக் கருவிகள் காணும் தகவல்களை, ரேடியோ அலைமூலம் வெளியே உள்ளவருக்கு இது தெரிவிக்கும்.

படம்-*3*: கடலுக்குள் போட்ட ரேடியோவைத் திரும்பவும் நீர் மட்டத்துக்குக் கொண்டு வர வெடி வைப்பார்கள். இடப் பக்கம்

வெடி வெடித்துத் தண்ணீர் கிளம்புவதையும் வலப் பக்கம் அட்லாண்டிஸ் கப்ப லின் ஒரு பகுதியையும் காணலாம்.

படம்-4: கடலுக்குள் ஒரு கருவியை இடப்பக்கம் உள்ளவர் செலுத்துகிறார். செலுத்திய கருவி பதிவு செய்த பல விவரங்கள் அடங்கிய காகிதத்தைக் கப்பலின் மேல் தட்டில் வலப்பக்கம் உள்ளவர் காய வைக்கிறார்.

படம்-5: இடப்புறம் உள்ளவர் கடலின் ஆழத்தி லிருந்து எடுத்து வந்த தண் ணீரில் பிராண வாயு எவ் வளவு இருக்கிறது, உப்பு எவ்வளவு இருக்கிறது என்று பரிசோதித்துப் பார்க்கிறார். வலப்புறம் உள்ளவர், கட லுக்குள்ளே ஒரு கருவியைச் செலுத்துகிறார். கடலுக்கு அடியில் உள்ள பாறை, கடலின் நீரோட்டம், கட லில் கரைந்திருக்கும் ரசா யன உப்புக்கள், கடலில் வாழும் மீன்கள், கடலில் வளரும் செடி கொடிகள் இவை பற்றியெல்லாம் இந் தக் கருவி தகவல் தெரிவிக் கும்.

படம்-6: அட்லாண்டிஸ் கப்பலின் இரண்டு பகுதி கள். ரேடியோ மூலம் வரும் பல தகவல்களையும் ஒருவர் கவனிப்பது வலது பக்கக் காட்சி.

படம்-7: ஐக்கிய அமெரிக் கப் படை பறக்க விடத் திட்டமிட்ட பிரம்மாண்ட மான பலூன். ஆகாயத் தில் ஐந்து நாள் வரைக் கும் மிதந்துகொண்டு இது அலையும். இதன் அடிப்பகுதி யில் நுட்பமான பல விதக் கருவிகளை வைத்திருக்கிறார் கள். அந்தக் கருவிகள் கண்ட விவரங்களைப் பதி னைந்து நிமிஷத்துக்கு ஒரு தடவை இதன் ரேடியோ கீழே உள்ளவருக் குத் தெரிவித்துக்கொண்டே யிருக் கும். பதினெட்டு மைல் உயரம் இது செல்லும். இதன் குறுக்களவு 200 அடி. பார்



17,000 மைல் கிளம்பும் ராக்கெட்



ராக்கெட் எஞ்சின்கள்

வைக்கு வெள்ளிப் பந்துபோல் தோன்றும்.

படம்-8: ஐக்கிய அமெரிக்க விமானப் படை நான்கு கட்ட ராக்கெட் ஒன்றை விடத் திட்டமிட்டது. இது 23-அடி நீளம் உள்ளது. 1,900 பவுண்டு நிறை. 37,50,000 கன அடி உப்பிய ஒரு பலூனிலிருந்துதான் இதை ஆகாயத்தில் கிளப்பி விடுவார்கள். பலூனுக்குள் ஹீலியம் வாயு நிறைத்திருப்பார்கள். அந்த வாயு வழியாக இது மேலே கிளம்பும். மணிக்கு 17,000 மைல் வேகத்தில் பாய்ந்து பல்லாயிரம் மைல் உயரத்துக்கு இது எழும்புமாம்.

படம்-9: ஃபோர்டு நிலையத்தில் ஒரு பகுதியின் டைரக்டர் பதவி வகிக்கும் ஹெர்பெர்ட் எல். கார்ஷ், இந்த ராக்கெட் திட்டத்தின் முதல் கட்ட எஞ்சின் கூட்டத்தையும் இரண்டாவது கட்ட ஒற்றை எஞ்சின்களையும் பரிசோதித்துப் பார்க்கிறார்.

குருவும் சீடனும்

படைப்பின் ரகசியத்தையும், கடவுள் தத்துவத்தையும் அறிவதற்காகப் பெரியார் துன்னூன் மிஸ்ரீயை அணுகினான் ஒரு மனிதன்.

ஒன்றரை ஆண்டு துன்னூன் மிஸ்ரீயவர்களிடம் தங்கியும், அவனுக்கு ஒரு போதனையும் கிடைக்கவில்லை.

ஒரு நாள், "ஹலரத், இனியும் என்னால் பொறுக்க முடியாது. இப்பொழுதே பிரபஞ்ச ரகசியங்களை எனக்குப் போதிக்க ஆரம்பியுங்கள்" என்று பெரிதும் வலியுறுத்திக் கேட்டான் அந்த மனிதன்.

உடனே மூடிய பாத்திரம் ஒன்றை அவன் வசம் ஒப்புவித்து, அதை ஓர் ஆளிடம் கொடுத்துவிட்டு வரும்படி அவனைப் பெரியார் அனுப்பினார்.

அந்தப் பாத்திரத்துக்குள் என்ன பொருள் இருக்கும் என்று தெரிந்துகொள்ள ஆவலுள்ளவனாய், இடைவழியில் அதன் மூடியை அவன் திறந்தான். அவ்வளவுதான்; சொல்லி வைத்தாற்போலச் சுண்டெலி ஒன்று அதற்குள்ளிருந்து வெளிப்பட்டுத் தாவிக் குதித்து ஓடியே போய்விட்டது.

இது அவனுடைய உள்ளத்தில் சுரீர் என்று தைத்தது; அவன் அடங்காக் கோபங்கொண்டான்.

துன்னூன் மிஸ்ரீயவர்களிடம் ஆசாமி திரும்பி ஓடினான். "என்னைப் பார்த்தால் உங்களுக்குப் பரிகாசமாகப் படுகிறதா? ஒரு சுண்டெலியைத்தானா என் வசம் ஒப்படைக்கவேண்டும்?" என்று பொரிந்து தள்ளினான்.

இப்படி நடக்கும் என்பதை ஏற்கனவே அறிந்திருந்த அந்தப் பெரியார் "கேவலம் ஒரு சுண்டெலியைப் பாதுகாக்கத் தகுதியில்லாத உன்னை நம்பி, பிரபஞ்ச ரகசியங்களையெல்லாம் எப்படி நான் ஒப்படைப்பேன்?" என்று மிகவும் சாந்தமாகப் பதிலளித்தார்.

—மூலம்: நுஸ்ஹத்துல் மஜாலிஸ்;

தமிழ்: ஜைனுல் ஆபிதீன், 'பிறை';

நகைப்பூட்டும் சோஷலிஸ நாடு

யுஜினி ரிக்டர் சித்திரம்

மக்கள் குலம் இன்புற்று வாழ, சமுதாயத்தை எப்படி உருவாக்கவேண்டும் என்பதை நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்த கற்பனைகள்மூலம் பல அறிஞர் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தச் சித்திரங்களைச் சுருக்கி விளக்கும் இந்தக் கட்டுரை வரிசையை எழுதி வருகிறவர் அறிஞர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

'வருங்காலத்துச் சோஷலிஸத்தைப்பற்றிய சித்திரங்கள்' என்ற நூலின் ஆசிரியரான யுஜினி ரிக்டர் என்பவர் ஜெர்மானியா நாட்டு ரைக்ஸ்டாக் (Reichstag) என்ற ஜனப்பிரதிநிதி சபையில் லிபரல் கட்சித் தலைவர். இந்த நூலின் வெற்றிகரமான விற்பனைக்குக் காரணம் அவர் வகித்தஸ்தானமே. பல்லாயிரக்கணக்கான பிரதிகள் சில மாதங்களுக்குள்ளேயே விற்று விட்டன. இந்தச் சிறுநூலை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்பகுதியில் வாழ்ந்தவர். இங்கிலாந்தில் லிபரல் கட்சியினரும் கன்ஸர்வெடிவ் கட்சியினரும் இந்தப் புத்தகத்தை ஓர் அபாயத்தைக் காட்டும் நூலாகக் கருதவில்லை; சோஷலிஸம் பயங்கரமான ஓர் உருவை எடுக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை. பள்ளியில் படித்துச் சிந்திப்பதற்குரிய தத்துவமே தவிர வேறில்லை என்று அவர்கள் கருதி வந்தார்கள். 'நேஷனல் அப்ஸர்வர்' என்ற பத்திரிகை இந்த நூலை எவரும் படித்தே தீரவேண்டும் என்று முழக்கஞ் செய்தது.

'சோஷலிஸத்தை இந்த ஆசிரியர் எள்ளி நகையாடுகிறார்' என்று இந்த நூலைத் துருவி ஆராய்வோருக்கு நன்கு விளங்கும். சோஷலிஸத்தில் ஒரு மூடநம்பிக்கை வைக்கக்கூடாது என்றே இவர் இந்த நூலின் மூலமாக எச்சரிக்கை செய்கிறார். சோஷலிஸ ஆட்சியில் மனிதனுக்குச் சுதந்தரம் இருக்க முடியாதென்று மொழிகிறார். பொருளைப் படைப்பதும் விநியோகம் செய்வதும் அரசாங்கத்தின் கைவசம் இருந்து விட்டால், சர்க்கார் தன் கொள்கையை நிறைவேற்றும்போது தனக்கு இணங்காத மக்களைப் போலீஸையும் படையையும் கொண்டு துன்புறுத்தலாமன்றோ? சோஷலிஸ ஆட்சியில் தனிப்பட்டவர் பத்திரிகை நடத்த முடியுமா? தவறி நடக்கும் பத்திரிகைக்குத்தான் சுதந்தரம் இருக்க முடியுமா? காகித விற்பனையும் அச்சு யந்திரங்களும் அரசாங்கத்திடம் அகப்பட்டுவிட்டால், மக்கள் தங்கள் உள்ளக்கிடக்கைகளைத் தட்டுத்தடங்கலின்றி இயம்பலாகுமோ? உன்னிப் பாருங்கள்! இதெல்லாம் ஓர் அளவுக்கு மெய்யேயானாலும், முதலாளி ஆட்சியில் கிடைக்கும் நியாயத்தைவிட உண்மையான சோஷலிஸ ஆட்சியில் நேர்மை இருக்கும் என்பதில் யாதோர் ஐயமும் இல்லை.

சோஷலிஸம் வந்தால், எல்லாம் கெட்டுப் போய்விடும் என்று இந்த ஆசிரியர் கருதுகிறார். இவர் தரும் சித்திரத்தைப் பார்ப்போம்.

இவருடைய அகக்கண்முன் சமுதாயக் கட்டிடங்கள்மீது செங்கொடிகள் பறப்பது விரிகிறது. 'அருகிலேயே கேடு தலைவிரித்தாடுகிறது' என்று இவர் அடிக்கடி கூறுவது வழக்கம். '1898-ஆம் ஆண்டில் சோஷலிஸம் வந்தே தீரும்' என்று எங்கெல்ஸ் (Engels) இயம்பினர். 'மூலதனச் சொத்துக்கள்,

சுரங்கங்கள், யந்திரங்கள் போக்கு வரத்துச் சாதனங்கள் - சுருங்கக் கூறுமிடத்து எல்லாம் - அரசாங்கத் துச் செல்வங்களாக மாறிவிட வேண்டும்' என்ற அறிக்கையின் முழக்கம் இவருடைய அகச் செவியில் விழுகிறது. இவருடைய கற்பனையில் விரியும் சோஷலிஸ சமுதாயத்தில் இருபத்தொரு வயசிலிருந்து அறுபத்தைந்து வயசுவரையிலுள்ள அனைவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்தே ஆகவேண்டும். இருபத்தொரு வயசுக்குக் கீழ்ப் பட்டவர்களுக்கு அரசாங்கச் செலவில் கல்வி போதிக்கிறார்கள். அறுபத்தைந்து வயசுக்கு மேற் பட்டவர்களின் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளை அரசாங்கமே அமைத்துத் தரும். தனி மனிதன் யாதொரு தொழிலும் செய்ய முடியாது. முதலாளித்துவம் அங்கே தலை எடுக்க இயலாதபடி, எல்லாவற்றையும் கூர்ந்து கவனிக் கிறார்கள். சேனைகளைக் கலைத்து விட்டார்கள். வரிகள் வசூலிப்பது நின்றுவிடுகிறது. அரசாங்கமே தொழில்களை எல்லாம் நடத்துகிற காரணத்தால், அவற்றிலிருந்து வரும் வருமானங்களைக் கொண்டு அரசியல் நடத்த இயலும் என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டார்கள்.

இருபத்தொருவயசிலிருந்து அறுபத்தைந்து வயசுவரையிலுமுள்ள ஆடவர்களும் பெண்களும் தங்களை முதலில் அரசாங்கப் புத்தகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். ஏற்கனவே முதலாளி ஆட்சியில் இருந்த கட்டிடங்களையே இத்தகைய அலுவல்களுக்குப் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள். அரசாங்கத்தில் வேலை செய்கிற பெண்கள் வீட்டு அலுவல்களைக் கவனிக்க வேண்டியதில்லை. பிள்ளைகளைக் கவனிப்பது, சமையல் செய்வது, நோயாளிகளைப் பார்த்துக் கொள்வது இந்த எல்லா அலுவல்களையும் அரசாங்கமே கவனிக்கிறது. அரசாங்கம் அமைத்த இல்லங்களிலும் பள்ளிகளிலும் குழந்தைகளும் இளைஞர்களும் வளர்கிறார்கள். அரசாங்க மருத்துவச் சாலைகளில் நோய்வாய்ப்பட்டவர்களைக் கவனித் துக்கொள்வார்கள். முக்கியமான நடுப்பகல் உண்டியை அரசாங்க மாவட்டத்திலுள்ள உண்டிச்சாலையில் மக்கள் அருந்த வேண்டும். அரசாங்கம் நிறுவிய சலவைச்சாலைகளில் துணிகளை வெளுப்பார்கள். ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் தொழில் செய்ய வகுத்த காலம் எட்டு மணி நேரந்தான்.

அரசாங்கந்தான் மக்களுக்கு வேலையை வகுத்துக் கொடுக்கும். கதையில் வருகிற பாத்திரங்களான வ்ரன்ஸ், ஆக்னஸ் இருவரும் - புருஷனும் மனைவியும் - ஆட்சி முறையின் நிர்ப்பந்தத்தால் பிரிந்து போகிறார்கள். அரசாங்கத்தின் கையில் அகப்பட்ட பொம்மைகள்போல மக்கள் காட்சி அளிக்கிறார்கள் என்ற உண்மை இதிலிருந்து நன்கு புலனாகும். துணிமணிகளை விற்க விரும்பும் ஆண்களும் பெண்களும் அதிகந்தான்; ஆனால் ஊரிலுள்ள சாக்கடைகளை அலம்புவதற்கு முன்வரும் ஜனங்கள் சற்றுக் குறைவே. ஆதலால், சீட்டுக்குலுக்குவதன் மூலம் அவரவருக்குரிய தொழில்களை நிர்ணயஞ் செய்கிறார்கள். குணத்திலும் திறமையிலும் சிறந்த ஜனங்களுக்கு இழிவான தொழிலே கிடைக்கவும் கூடும்.

இருபது வயசானதும் வாலிபர்கள் நாட்டின் படையில் சேர மூன்று நாளைக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் நோக்கத்தைத் தெரிந்து கொள்ள முடியாத அறிவிலிகளைக் கட்டாயப்படுத்துவார்கள். அந்த நாட்டில் சோம்பேறித்தனத்துக்கு இடமே இல்லை. ஒவ்வொருவரும் நாட்டின் நலத்தைக் கருதி உழைத்தாக வேண்டும். ராஜ்யத்துக் கட்டிடங்களில் பத்து லட்சம் அறைகள் உண்டு. பொது ஸ்தாபனங்களுக்கு வேண்டிய அறைகள் போக, ஆறு லட்சம் அறைகள் எஞ்சி நிற்கும். பத்து லட்சம் ஜனங்களுக்கு அறைகள் அளித்தாக வேண்டும். சமத்துவம் பாராட்ட வேண்டு மன்றோ! சீட்டுக் குலுக்குவதன் மூலமே அவரவருக்கு உரிய இடம் கிடைக்கும்.

அரசாங்கச் சமையல் விடுதிகளைப்பற்றிச் சற்று ஆராய்

வோம். ஒவ்வொரு விடுதியிலும் ஏழாயிரம் பேர் உட்காரலாம். அந்தச் சாப்பாட்டுக் கடைகளில் வேற்றுமை கிடையாது. சிறிய விஷயங்களைக்கூட முன்கூட்டியே தீர்மானித்து விடுவார்கள். எந்த மாவட்டத்தில் ஒருவனது வீடு இருக்கிறதோ, அந்த மாவட்டத்துச் சாப்பாட்டு விடுதியில் அவன் உணவு கொள்ளலாம். முக்கியமான நாளில், உணவைப் பகல் பன்னிரண்டு மணி முதல் சாயங்காலம் ஆறுமணி வரையில் போடுவார்கள். ஒவ்வொருவரும் விடுதியில் போய்த் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அங்குள்ள அதிகாரி, நபரின் பணக் குறிப்புள்ள புத்தகத்திலிருந்து ஒரு கூப்பனைக் கிழித்துக் கொடுப்பான். அந்தச் சாப்பாட்டுக் கூப்பனை அவன் முறை வரையில் கையில் வைத்துக் காத்துக் கிடக்கவேண்டும். போலீஸ்காரர்கள் காவல் காத்து அமைதியை நிலைநிறுத்துவார்கள். சாப்பிட்டு முடிய வேண்டிய கால அளவைக் குறித்திருப்பார்கள். அதற்குள் உண்டியை அருந்திவிட்டு மக்கள் வெளியேற வேண்டும். குறிப்பிட்ட கால அளவில் ஆகாரம் முடிகிறதோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலை இல்லை; ஒவ்வொருவனும் மற்றவனுக்கு இடம் விட்டாக வேண்டும். வாசல் கூட்டுகிறவனும் மா அரைக்கிறவனும் சேர்ந்து தான் உட்காருவார்கள். இடம் குறுகியதாய்த்தான் இருக்கும்: அதில் ஒருவரை ஒருவர் உராய்ந்து கொண்டுதான் அமர வேண்டும்.

இத்தனை பேர்தான் சமையல் விடுதிக்கு வருவார்கள் என்ற கணக்கு இருக்கிற காரணத்தால், அதற்கு மேலே சாப்பாடு அங்கே இருக்காது. வட்டித்த பொருள்களைக் கொஞ்சங்கூட வீணாக்கக் கூடாது. உணவை அளந்து வழங்குவார்கள். அதிகமாய் உண்டி அருந்துகிறவர்களுக்கும் குறைத்துச் சாப்பிடுகிறவர்களுக்கும் ஒரே அளவான ஆகாரந்தான் அளிப்பார்கள்.

எல்லாரும் உழைத்தே ஆக வேண்டும் என்ற நிபந்தனை இருக்கும். அதிகாரிகளின் அநுமதி பெறுமல், எவரும் வெளிநாட்டில் போய்க் குடியேற முடியாது. நாட்டின் எல்லைகளிலும், கப்பல் துறை முகங்களிலும் படைகள் எப்போதும் காத்து நிற்கும். கட்டளைகளை மீறி வெளி நாட்டுக்கு ஓடுகிறவர்களை இரக்கமின்றிச் சுட்டுக் கொன்றுவிடுவார்கள்.

அந்த நாட்டில் எல்லாக் காரியங்களையும் சட்டங்களே நிர்வகிக்கின்றன. எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும்? எப்படி ஆகாரம் உண்ண வேண்டும்? எப்படி உடை உடுத்த வேண்டும்? எந்த அறையில் வசிக்க வேண்டும்? இப்படிப்பட்ட அலுவல்கள் அனைத்தும் சட்டங்களின் ஆட்சிக்குக் கீழ் வருகின்றன.

அந்த நாட்டில் நடக்கும் தேர்தலும் (Election) நம் உள்ளத்தைக் கவரக் கூடியதுதான். அரசாங்க முத்திரை பெற்ற தேர்தல் சீட்டு ஒவ்வொருவரிடமும் இருக்கும். சீல் வைத்த கவரில்தான் அதை வழங்குவார்கள். ஆனால், அரசாங்கத்தின் உளவு இலாகா மிக மும்மரமாய்த் தன் அலுவலை நடத்துவதால், எவரும் தம் இஷ்டப்படி தேர்தல் உரிமையை அந்த நாட்டில் செலுத்த இயலாது.

நாட்டில் அருவருப்பும் கசப்பும் இருந்தாலும் தனி மனிதன் ஒன்றும் செய்வதற்கில்லை. இந்த ஆசிரியரின் நூலில் வருகிற கதா பாத்திரம் கூறும் ஒரு விஷயம் இங்கே சிந்திப்பதற்குரியது: "நான் அரசாங்கத்துக்கு விரோதமாக என் வோட்டுரிமையைச் செலுத்துவதா யிருந்தேன்; ஆனல் விஷயந் தெரிந்தால் என்னை மிகவும் தூரத்திலுள்ள பிரதேசத்துக்கு அனுப்பிவிடுவார்கள் என்பதற்கு அஞ்சி நான் அரசாங்கத்துக்கே வோட்டு போட்டு விட்டேன்.''

நாம் எது அறம் என்று கருதுகிறோமோ அதை இந்த நாட்டில் செய்ய முடியாது. கூழுக்காக நம் மனச்சாட்சிக்கு விரோதமாய்த் தான் நடக்க வேண்டும். இங்கே தங்கள் கொள்கைக்காக உயிரைத் தியாகம் புரியக்கூடிய சான்றோர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அரசு தனி மனிதனின் அகவுயிர்

உணர்ச்சிக்கும், உயர்ந்த கனவுகள் உருவாவதற்குந்தான் இருக்கிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. 'இம் என்றால் சிறைவாசம்; உம் என்றால் ஊரைவிட்டு ஓட்டம்' என்ற சூழ்நிலையில் மனிதன் வாழ முடியாது! அவனுக்குச் சுதந்தரம் உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையுமாய்த் திகழ வேண்டும். சுதந்தர இளந் தென்றல் என்றைக்கும் நாட்டில் வீசிக் கொண்டே இருப்பதுதான், ஒரு நாட்டின் உயர்வுக்குக் காரணம்; அதுதான் அதன் உயிர் நாடியுமாகும். எதற்கெடுத்தாலும் ஒரு தடை எழுந்து நம் முன் நிற்குமானால், நம்முடைய ஆத்ம சக்திகள் பூர்ணமாய்ப் பொலிந்து திகழ்வதற்கு யாதொரு வாய்ப்பும் கிடைக்காது. இந்தச் சுதந்தர மற்ற நிலையில் ஒன்றுஞ் செய்வதற்கில்லை.

அந்த ஊரில் - அதாவது பெர்லின் நகரத்தில்-வேலை செய்வோர் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். வேலை நிறுத்தம் செய்வோருக்குச் சாப்பாடு இல்லை என்ற உத்தரவைச் சர்க்கார் போட்டுவிட்டார்கள். சாப்பாட்டு விடுதிகளுக்கெல்லாம் இந்த உத்தரவு போய்ச் சேர்ந்துவிட்டது. அவர்களைப் பட்டினி போட்டு இணங்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணம்! இதற்குள் பிரெஞ்சுக்காரர்களும் பெர்லின்மீது படையெடுக்கத்தொடங்கி விட்டார்கள். மேல் விளைவு என்ன ஆகுமோ என்று தம் சித்திரத்தை ஆசிரியர் முடிக்கிறார்.

இந்த ஆசிரியர் சோஷலிஸத்தை எள்ளி நகையாடுகிறார் என்பதில் ஐயமில்லை. இவர் சொல்லுவதில் ஓரளவு உண்மையிருக்கத்தான் இருக்கிறது. ஆனால் இவர் கண்ட சித்திரத்தை முற்றிலும் ஒப்புக்கொள்ள முடியாது. சர்க்கார்தான் எல்லாம் என்று சொல்லுவதற்கில்லை; தனி மனிதனின் சுதந்தரமே எல்லாம் என்பதும் இல்லை. முற்றும் மார்க்ஸ் கொள்கையும் அல்ல; முற்றும் டால்ஸ்டாயின் தத்துவமுமல்ல- இந்த இரண்டுக்கும் இடையேதான் அரசியல் கப்பல் செல்ல வேண்டும். இத்தகைய நடுநிலையில் நின்று அரசியலை அமைப்பார்களா?

ரகசிய பாஷை

இரண்டு பையன்கள் யூனிவெர்ஸிட்டி பரீட்சைக்கு உட்கார்ந்தார்கள். இருவருக்கும் தந்தி பாஷை தெரியும். ஒருவனுக்குக் கஷ்டமான கேள்வி வந்ததும், அதன் எண்ணைத் தந்தி பாஷையில் மெல்ல விரலடித்து மற்றவனுக்கு அவன் அறிவிப்பான். உடனே மற்றவன் தனக்குத் தெரிந்த பதிலை விரலடித்துத் தந்திப் பாஷையிலேயே முதல் பையனுக்கு அறிவிப்பான். இப்படியே இருவரும் பரஸ்பரம் உதவி புரிந்துகொண்டு பரீட்சைக்கு எழுதி முடித்து விடைத்தாளை மடித்தார்கள்.

இந்தச் சமயம் இருவரில் எவரும் விரலடிக்காதபோது, புதிய விரலடித் தந்தி பாஷை ஒன்று இருவர் காதிலும் வந்து விழுந்தது. ''எனக்கும் கொஞ்சம் தந்தி பாஷை தெரியும். பரீட்சையில் நீங்கள் இருவரும் சுழித்தாயிற்று'' என்றது அது. பரீட்சாதிகாரியின் தந்தி பாஷை!

—எல். பி.

மனைவியின் சமையல்

ஒருவன் தன் மனைவியைப்பற்றி ஒரு நண்பனிடம் சொன்னது இது: ''அவளுக்குச் சமையலைப்பற்றி ஒரே ஒரு விஷயந்தான் தெரியும்; அதாவது, தன் சமையல் மூலம் என்னைக் கொதிப்படையச் செய்துவிடுகிறாள்.'' —'பி. எல்.'

மூர்க்கோத்து குஞ்ஞுப்ப

எவ்வளவுதான் ரெயில்வண்டி, பஸ், விமானம் எல்லாம் வந்தாலும் மாட்டு வண்டியை நாம் கைவிட முடியாது: அதன் சக்கரத்தை அமைப்பதே ஒரு பெரிய கலை.

நமது தேசத்து மாட்டு வண்டியை நாட்டுப்புற 'ஜீப்' என்று சொல்லலாம். அதில் ஆட்களை ஏற்றலாம்; சாமான்களைச் சுமத்தலாம். குன்று, மேடு, பள்ளத்தாக்கு, ஆறு, வாய்க்கால் எதை வேண்டுமானாலும் அந்த வண்டி தாண்டிச் செல்லும். அதை ஓட்டுவதற்குப் பாதை வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் கிடையாது. ஒவ்வொரு வண்டியும் சுமார் இருபது ஆண்டுகள் சீராக இருக்கும். கிராமத்திலிருந்து கிராமத்துக்கும், கிராமத்திலிருந்து பட்டணங்களுக்கும் பண்டங்களையும் மனிதர்களையும் போக்குவரத்துச் செய்ய மாட்டு வண்டி ஜீவநாடி என்றுதான் கூறவேண்டும். நாட்டுப்புறத்தில் நடக்கும் எல்லாத் தொழில்களுக்கும் மாட்டு வண்டி உதவுவதைப் பார்த்தால், நாம் அதைக் கைகூப்பி வழிபட வேண்டியதுதான்.

வங்காளத்தில் குடியானவரின் நிலைபற்றி முகுல் குப்தா என்பவர் பிரசங்கம் செய்தார். மாட்டு வண்டி எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்று அதிலிருந்து தெரிய வந்தது. மேற்கு வங்காளத்தில் ஆறு லட்சத்து இருபத்தையாயிரம் மாட்டு வண்டிகள் இருக்கின்றனவாம். சுமார் ஒரு வண்டிக்குச் சராசரி ஐந்நூறு ரூபாய் விலை வைத்துப் பார்த்தால், வங்காளத்தில் முப்பத்தொரு லட்சத்து இருபதாயிரம் ரூபாயை இந்த வகையில் முடக்கியிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. ஒவ்வொரு வண்டியும் நான்கு பேர் பிழைப்புக்கு உதவுகிறது. ஆகவே, இருபத்தைந்து லட்சம் மக்கள் மாட்டு வண்டியைக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள்; ஓர் ஆண்டில் லட்சத்து இருபத்தையாயிரம் சக்கரங்கள் உருவாகின்றன. ஒரு சக்கரம் செய்ய ஒரு மனிதனுக்கு நாற்பத்தெட்டு மணி நேரம் வேண்டும். ஆகவே, அறுபது லட்சம் மணி நேரம் சக்கரம் செய்வதிலேயே செலவாகிறது.

இந்தக் கணக்கு இந்தியாவின் இருபத்துமூன்று ராஜ்யங்களில் ஒன்றே ஒன்றைச் சார்ந்தது. எனவே, நாடு முழுவதும் கோடிக் கணக்கானவர் மாட்டு வண்டியால் பிழைக்கிறார்கள் என்பது நிச்சயம். ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் மக்களுக்குப் பிழைப்புக் கொடுக்க முற்படுகிறவர் இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்பது புலப்படும்.

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 1-12-'57), கோழிக்கோடு.

மாட்டு வண்டியைச் சீர்படுத்த வேண்டும் என்று கருதி அதற்காகப் பலர் முயன்றிருக்கிறார்கள். சக்கரத்தின் இரும்புப் பட்டையை அகற்றி ரப்பர் டயர் போட்டார்கள். அதனால் வண்டி இழுப்பதற்கு வேண்டிய சிரமத்தில் நான்கில் ஒரு பங்கு குறையும். ஆயினும், இது நடைமுறையில் வரவில்லை. கல்லைப் பரப்பிக் கெட்டிப்படுத்திய பாதைகளில் மட்டுந்தான் ரப்பர்ச் சக்கரம் பயன்படும். மாட்டு வண்டியோ மேடும் பள்ளமும் நிறைந்த பாதைகளிலும், பாதையே இல்லாத இடங்களிலும், வயல்களிலும் போக வேண்டிய ஒரு வாகனம். இந்த வண்டி செய்வதில் பரம்பரையாக வந்த சாஸ்திர அறிவு புதைந்து கிடக்கிறது.

சக்கரத்தின் வட்டத்தை உண்டாக்கும் மரம், அதன் அகலம் பருமன் எல்லாவற்றுக்கும் கணக்கு உண்டு. வண்டியில் பூட்டும் எருதின் முதுகு உயரந்தான் சக்கரத்தின் விட்டம் இருக்க வேண்டும். விட்ட அளவை மூன்றால் பெருக்கி வரும் அளவு வண்டியின் நீளம். 'வண்டி செய்யும்போது இந்த அளவுகளில் சற்றும் மாறுதல் கூடாது'. என்று தேர்ச்சி பெற்ற எஞ்சினீர்களே பரீட்சித்து அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள்.

முகுல் குப்தா என்பவர் கூறுகிறார்: 'சக்கரத்தை உருவாக்கத் தேர்ச்சி பெற்றவரால்தான் முடியும். அதன் சிற்பம் கைக்கு வசப்பட்டுவரப் பல ஆண்டுகள் பிடிக்கும். அதை எல்லாத் தச்சர்களும் செய்துவிட முடியாது. பரம்பரைப் பயிற்சியால் மட்டுமே கைகூடக் கூடிய ஒரு கலை, சக்கரம் செய்யும் வேலை. பர்துவான் நகரத்தில் சக்கரத்தின் வட்டத்தை உருவாக்கும் முறையையும் அதற்குச் செலவாகும் நேரத்தையும் சிறந்த அமெரிக்க எஞ்சினீர் ஒருவர் தங்கள் ஊர் வண்டிச் சக்கர அமைப்பு வேலையுடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பிரமித்துப் போனார்.'

சக்கரத்தின் வட்டத்தை ஆறு துண்டுகளைக் கொண்டு அமைக்கிறார்கள். ஒவ்வொரு துண்டின் நீளமும் இருபத்துமூன்று அங்குல முதல் இருபத்தாறு அங்குலம் வரையில் இருக்கும். அகலம் ஐந்து அங்குலமும் கனம் இரண்டு அல்லது மூன்று அங்குலமும் இருக்கும். சக்கரத்தின் நடுவே இருக்கும் குடம் பதினான்கு அல்லது பதினாறு அங்குல நீளமும் பத்து அங்குலப் பருமனும் இருக்கும். ஒவ்வொரு தேசப் பூமியின் தரத்துக்கும் ஏற்றபடி வண்டியிலும் மாறுதல் ஏற்படும். இதை உணரும்போதுதான் வண்டியை உருவாக்குவதில் பரம்பரை அறிவுக்கு உள்ள பெருமை நன்கு வெளியாகிறது.

யந்திரசாலைகளிலோ அவை போன்ற மற்ற இடங்களிலோ ஒரு பொருளை உருவாக்கினால், அதன் குணத்தையும் திடத்தையும் திறமையையும் யந்திரங்களாலேயே கணக்கிட்டுவிடுவார்கள். மாட்டு வண்டிக்காரனோ, சக்கரத்தை நிறுத்தி உருட்டிவிடுவான். அவ்வளவுதான்; உருளும் முறையைப் பார்த்தாலே, அவனுக்கு அது சரியான முறையில் செய்யப்பட்டதா இல்லையா என்பது தெரிந்துவிடும். இரும்பு உலக்கை ஒன்றால் சக்கரத்தின் ஓரத்தில் தட்டுவான். அதன் ஒலியைக் கேட்டு, மரத்தின் குணத்தை அறிந்துகொள்வான். கடைசியாகச் சிறிது உயரத் தூக்கிச் சக்கரத்தைப் படார் என்று கீழே போட்டுப் பார்த்தால், அதன் உறுதியும் புலப்பட்டுவிடும்.

இப்படி யெல்லாம் சோதித்துப் பார்த்த சக்கரத்தை நாற்பத்தைந்து முதல் எண்பது ரூபாய் வரையில் விற்பார்கள். இந்தச் சக்கரங்களைச் சுற்றியே இந்தியாவின் வியாபாரமும் ஜனசஞ்சாரமும் நிகழ்ந்து வருகின்றன. இதைப் பற்றி அதிக விவரம் தெரியத் தெரிய மனத்தில் இன்பம் பெருகுகிறது. மிகச் சாமானியமாகத் தோன்றும் பொருள்களின் உண்மையை ஆராய்ந்து பார்த்தால், உள்ளத்தில் ஏற்படும் இன்பத்துக்கு அளவு இருக்காது. அவற்றின் பயனால் வாழ்க்கையில் உண்டாகும் சந்தோஷங்கூட அடுத்தபடியானதுதான்.

விமானம் காகிதத்தில் இருக்கும்போதே,
அதில் ஏறி ஓட்டப் பயிலும் விந்தை!

பயிற்சி விமானப் பொம்மை

அலமேலு கிருஷ்ணன்

விமான விபத்துக்களைப்பற்றிய துக்கந் தரும் செய்திகளை அடிக்கடி கேட்கிறோம். புதுப்புது விமானங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றைக் கையாளும் முறைகளும் நாளுக்கு நாள் முன்னேறிக்கொண் டிருக்கின்றன. விமானம் இறங்கும்போதுதான் அதிகமான விபத்துக்கள் நேரிடுகின்றன. பத்திரமாக விமானத்தை இறக்குவது ஒரு தனிக் கலை. இன்றைய விமானிகளுக்குப் புத்திசாலித்தனம் மிகவும் அவசியம். புயல், மழை, மேகங்களுக்கிடையேயும், மூடு பனியிலும் விமானி தமது விமானத்தைச் செலுத்தும்போது மிகவும் திணறுகிறார். விமானத்தைப் பத்திரமாக ஓட்டுவது எப்படி என்று விமானிகளுக்குச் சொல்லித் தரப் பலவிதமான உபகரணங்களைக் கையாள்கிறார்கள். அவற்றில் ஒன்றுக்கு 'லிங்க் ட்ரெயினர்' (Link trainer) என்று பெயர்.

விமானி, விபத்திலிருந்து விமானத்தை இயக்கும் இடத்தைக் 'காக்பிட்' (Cockpit) என்று குறிப்பிடுகிறார்கள். இந்தக் 'காக்பிட்'டில் விமானிக்கு முன்னால் பல நுண்மையான கருவிகளைப் பொருத்தியிருப்பார்கள். அவைதான் விமானிக்குப் பார்க்கும் கண்கள். அவை விமானத்தின் குறிப்பிட்ட நிலையில் என்ன தெரிவிக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டு விமானத்தைச் செலுத்துவதில்தான், விமானியின் சாமர்த்தியம் முழுவதும் அடங்கியிருக்கிறது.

இப்படிக் கருவிகளின் உதவிகொண்டு பறப்பதை 'இன்ஸ்ட்ருமென்ட் ஃப்ளையிங்' (Instrument flying) என்கிறார்கள். இந்தக் கலையை நேரடியாய் விமானத்திலேயே கற்றுக்கொள்வதாக இருந்தால், ஒவ்வொரு முறை தவறு நேரும்போதும் விபத்துக்கள் நிகழ்ந்துவிடும்; பொருள் நஷ்டமும் உயிர்ச் சேதமும் ஏராளமாய் நேரும்.

'இன்ஸ்ட்ருமென்ட் ஃப்ளையிங்' பயிற்சிக்காக இந்தியாவில் இப்போது உபயோகப்படும் கருவியின் பெயர் 'லிங்க் ட்ரெயினர்'. விமானத்தில் இருக்கும் கருவிகள் அத்தனையும் அப்படியே இதில் இருக்கின்றன. பார்ப்பதற்கும் இந்தக் கருவி விமானம் போலவே இருக்கும். இது அறைக்குள் பறக்கிறது; விமானம் ஆகாயத்தில் பறக்கிறது. இதை விமானத்தைப் போல் உயர்த்தவும் தாழ்த்தவும் முடியும்; பக்க வாட்டில் சாய்க்க முடியும்; விமானத்தைப்போல் திருப்ப முடியும். விமானத்தில் இருப்பவை போன்ற ரேடியோச் சாதனங்களும் பறப்பதற்கு வேண்டிய அத்தனை சாதனங்களும் அப்படியே இதில் பொருத்தியிருக்கிறார்கள். விமானி விமானத்தை எப்படிக் கையாளுகிறாரோ அப்படியே இதையும் கையாள வேண்டும்.

விமானம் காற்றில் எவ்வளவு வேகமாகப் பறக்கிறது, எஞ்சின் எவ்வளவு வேகமாக விசிறியைச் சுழற்றுகிறது, இன்ன திசையில் இன்ன நிலையில் நாம் பறந்துகொண் டிருக்கிறோம் என்பதையெல்லாம் விமானத்தில் உள்ள கருவிகள் அப்பட்டமாகத் தெரிவித்துவிடும். இதே வேலைகளையெல்லாம் 'ட்ரெயினரில்' உள்ள கருவிகளும் செய்கின்றன; ஆனால் 'ட்ரெயினர்' உயரத்தில் பறப்பது

காப்பிரைட்: தினமணி (தமிழ்: 20-10-'57)) சென்னை-2.

மட்டும் இல்லை. விமானத்தின் நிலைக்கு ஏற்றபடி விமானத்தின் கருவிகள் இயங்குகின்றன; ஆனால் 'ட்ரெயின'ரிலோ பல நிலைகளுக்குரிய விதம் கருவிகளைச் செயற்கையாக இயக்கிவிடுகிறார்கள்.

'ட்ரெயின'ரில் பயிற்சி அளிக்கும் ஆசிரியருக்கு முன்னால் ஒரு மேஜை இருக்கிறது. 'காக்பிட்'டில் உள்ள கருவிகளில் முக்கியமான சிலவற்றை 'ட்ரெயின'ரில் பொருத்தியிருக்கிறார்கள். 'ட்ரெயின'ருக்குள் இருக்கும் விமானி தவறில்லாது விமானத்தைச் செலுத்துகிறாரா என்பதை ஆசிரியர் மூலம் தெரிந்துகொள்ள முடியும். விமானியை 'ட்ரெயின'ருக்குள் வைத்து மூடிவிடுவார்கள். விமானிக்கும் ஆசிரியருக்கும் இடையே பேசுவதற்கு ஒரு ரேடியோ கருவியும் மேஜைக்குள் இருக்கிறது. இதைத் தவிர மேஜையின்மேல் 'ரிக்கார்டர்' (Recorder) என்ற ஒரு சாதனம் இருக்கிறது. அறைக்குள் 'பறக்காமல்' ஆகாயத்தில் விமானி பறந்திருந்தால், எந்தத் திசையில், எந்த விதமாக, எந்த நிலையில் பறந்திருப்பார் அல்லது இறங்கியிருப்பார் என்பதை மேஜையின் மேலுள்ள காகிதத்தில் சிவப்பும் வெளுப்புமாகக் கோடிட்டு ரிக்கார்டர் காட்டிவிடும். இந்தக் காகிதத்தில் திசைகள், கோணங்கள் முதலியவற்றை முன்னதாக வரைந்து வைத்திருப்பார்கள். ஓர் அப்பியாசத்தைச் செய்து விட்டு வந்த மாணவருக்கரிடம், அதில் நேர்ந்த தவறுகளை ஆசிரியர் எடுத்துச் சொல்லி, இனித் தவறுகள் நேராதிருக்க என்ன என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் கற்றுக் கொடுப்பார், 'நான் சரியாகத்தான் பறந்தேன்', 'வேறு எதிலோ தவறு இருக்கிறது' என்றெல்லாம் விமானி கூற முடியாது. இந்தக் காகிதந்தான் தெள்ளத் தெளியத் தவறுகளை வரைந்து காட்டிவிடுகிறதே!

ஒரே அப்பியாசத்தைப் பல முறை செய்து நன்றாகக் கற்றுக்கொள்ள 'லிங்க் ட்ரெயின'ரில் வாய்ப்பு இருக்கிறது. தவிர, இது மிகவும் பத்திரமானது. ஆகாயத்தில் நேரக்கூடிய கடினமான பல விதச் சூழ்நிலைகளையும் இதில் உண்டுபண்ண முடியும்; பலமுள்ள காற்று, எதிர்காற்று முதலியவற்றையும் உண்டாக்க முடியும். மூடுபனியிலும் மேகங்களின் ஊடேயும் எப்படிப் பறக்க வேண்டும் என்பதை லிங்க் ட்ரெயினரில் கற்றுக்கொள்ளலாம்.

விமானம் இறங்கும்போதுதான் விபத்துக்கள் அதிகம். அது சரியாகவும் பத்திரமாகவும் இறங்க உதவி செய்வதற்கு, 'ரேடார்' (Radar), 'இன்ஸ்ட்ருமென்ட் லாண்டிங் ஸிஸ்டம்' (Instrument landing system) போன்ற பல ரேடியோச் சாதனங்கள் இருக்கின்றன. இவற்றை உபயோகிக்கும் முறைகளைக் கற்றுக்கொள்ள 'ட்ரெயினர்' மிகவும் உபயோகப்படுகிறது.

இந்த 'ட்ரெயினரை' மின்சாரத்தால் இயக்குகிறார்கள். சாதாரணமாக ஒரு 'டக்கோட்டா' (Dakota) விமானம் ஒரு மணி நேரம் பறக்க அறுபது காலன் பெட்ரோலும், ஒரு காலன் எண்ணெயும் தேவை. அதற்குச் சுமார் இருநூற்றைம்பது ரூபாய் செலவாகும். தவிர, விமானியின் ஊதியம், எஞ்சினீயரின் செலவு, விமான நிலையச் சிப்பந்திகளின் ஊதியம் இவற்றையெல்லாம் கணக்கிட்டால், தொகை சுமார் ஆயிரம் ரூபாய்க்கு மேல் போய்விடும். ஆனால், ட்ரெயினரில் ஒரு மணி நேரம் பறக்கத் தேவைப்படுவதெல்லாம் சில யூனிட் மின்சாரந்தான்! சிக்கனமாகவும் பத்திரமாகவும் பறப்பதில் தேர்ச்சி அடைய இந்த ட்ரெயினர் மிகவும் உவந்ததாக இருக்கிறது.

உதாரணமாக, "நிமிஷத்துக்கு ஐந்நூறு அடி வேக விகிதத்தில் ஆயிரத்து ஐந்நூறு அடி வரையில் பறந்து சமநிலைக்கு வா" என்று ஆசிரியர் கூறுகிறார் என்று வைத்துக்கொள்வோம். விமானி அது அதற்குரிய சாதனங்களை இயக்கிச் சரியாக விமானத்தை, அதாவது ட்ரெயினரைக் கையாள வேண்டும். இந்த அப்பி



'லிங்க் ட்ரெயினர்' என்ற பொம்மை விமானம்

யாசத்தை விமானி சரியாகச் செய்கிறாரா என்பதைக் கவனித்துத் தவறுகளை அப்போதைக்கப்போதே ரேடியோ மூலம் பேசி ஆசிரியர் திருத்துவார்.

ஒரு விமான நிலையத்தில் ஒரே சமயத்தில் பல விமானங்கள் வந்து இறங்கிக்கொண்டிருக்கும். ஒன்றோடொன்று மோதிவிடாமல் அவற்றை இறக்கவேண்டும். இது விமான நிலையச் சிப்பந்திகளின் வேலைகளுள் ஒன்று. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட விமானத்தைக் குறிப்பிட்ட கோணத்தில் வரச் சொல்லி, இறங்கச் செய்வார்கள். ஒரு கோணத்திலிருந்து மற்றொரு கோணத்துக்குக் கணக்காகவும் மிக ஜாக்கிரதையாகவும் விமானம் வரவேண்டும். நுட்பமாகப் பறக்கும் இத்தகைய முறைகள் அநேகம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பல முறை செய்து பழகினால்தான், சரியாகவும் நுட்பமாகவும் பத்திரமாகவும் பறக்க முடியும்.

பத்திரமாகப் பறப்பதற்கும் இறங்குவதற்கும் 'ரேடியோ காம்பஸ்', 'இன்ஸ்ட்ருமெண்ட் லாண்டிங் சிஸ்டம்' போன்ற முறைகளையும் பலமுறை ட்ரெயினரில் செய்து பழகுகிறார்கள். இந்த முறைகளைச் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் உபயோகப்படுத்த வேண்டும். அடிக்கடி பழகி இந்த முறைகளை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

கற்றுக்கொண்ட எல்லா முறைகளும் எப்போதும் உபயோகப்படுவதில்லை. உபயோகம் சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. அதிருஷ்டக்கார விமானி ஒருவர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் ஆயிரம் மணி நேரம் பத்திரமாய்ப் பறந்தவர் என்று பெயர் வாங்கியிருக்கக் கூடும். ஆனால் கடினமான சூழ்நிலையிலோ, மூடுபனியிலோ, புயலிலோ அவருடைய விமானம் ஒரு நாளும் பறந்திராது. அப்படியே ஒரு சமயம் பறந்திருந்தாலும், அதைச்

சமாளிப்பதற்குத் தேவைப்பட்ட ஒரே ஒருமுறை அவருக்கு நன்ருகத் தெரிந்ததாக இருந்திருக்கலாம். ஆயினும், தாம் கற்றுக்கொண்ட மற்ற முறைகளையெல்லாம் அவர் மறந்திருக்கக்கூட நியாயம் உண்டு. சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில முறைகளைத்தான் கையாள முடியும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் நேரும்போது, விமானிக்கு அந்த முறைகளில் பழக்கம் இல்லாதிருந்தால், மிகவும் ஆபத்தாக முடியும். எனவே, கற்றுக்கொண்ட முறைகளை யெல்லாம் மறக்காமல் இருக்க ட்ரெயினரில் அடிக்கடி பறந்து ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இதனுல் எல்லா விமானத் தளங்களிலும் விமானிகளை இந்த மாதிரியான ட்ரெயினர்களில் அடிக்கடி பறக்கச் செய்து, அவர்களை எப்போதும் எந்த நிலையிலும் விமானம் செலுத்துவதற்குத் தயாரா யிருக்கச் செய்கிருர்கள். இந்தியாவில் ஐ. ஏ. சி.-விமானத் தளங்களில் இந்த மாதிரி பல 'லிங் ட்ரெயினர்'கள் உண்டு.

நாளுக்கு நாள் புதிய புதிய விமானங்கள் ஆகாயத்தில் பறக்கின்றன. இப்போது இந்திய வானில் 'வைக்கவுன்ட்' (Viscount) விமானங்கள் பறக்க ஆரம்பித்திருக்கின்றன. எனவே, வைக்கவுண்ட் விமானத்தைப் போன்ற ட்ரெயினர்களும் தயாராக இருக்கின்றன. அசல் விமானத்தை விமானி கையாளுமுன்பே, அதற்கு ஏற்ற ட்ரெயினரில் பயின்று, தாம் பறக்கப் போகும் விமானத்தைப் பற்றி அறிந்துகொள்கிருர். மேல் நாடுகளில் நாளை வரப்போகும் விமானங்கள் காகிதத்தில் தயாராகிக்கொண் டிருக்கும்போதே, அவை போன்ற ட்ரெயினர்களையும் நம் நாட்டில் தயார் செய்துவிடுகிருர்கள்.

தொழிற்சாலையிலிருந்து விமானம் தயாராகி வருமுன்பே, பல நூறு மணி நேரம் அதற்குரிய விமானியும் ரேடியோ, எஞ்சினீரிங் சிப்பந்திகளும் 'ட்ரெயின'ரில் பயிற்சி பெற்றுத் தயாரா யிருக்கிருர்கள். விமானம் வந்தவுடன் இவர்கள் அதைக் கையாளத் தொடங்கிவிடுகிருர்கள். புதிய விமானம் வெளியே வந்ததும் நேரடியாக அதை ஆகாயத்தில் எடுத்துச் செல்வது இதனுல் சுலபமாகிறது.

மேற்கத்தி நாடுகளில் குறைந்தது நூறு மணி நேரமாவது 'இன்ஸ்ட்ருமென்ட் ஃபிளையிங்' பயிற்சி பெற்ற விமானிகள் மட்டுமே நேரடியாக விமானத்தைக் கையாளும் தகுதி பெற்றவர்களாகிருர்கள். நம் நாட்டில் அலாகாபாதிலுள்ள 'சிவில் ஏவியேஷன் ட்ரெயினிங் சென்டர்' ஸ்தாபனத்திலோ இந்திய விமானிகளுக்கு முறைப்படி ஆரம்ப 'இன்ஸ்ட்ருமென்ட் ஃபிளையிங்' கற்றுத் தருகிருர்கள். விமானிகளின் தேவை நாளுக்கு நாள் அதிகமாகி வருவதாலும், பண வசதி குறைவாயிருப்பதாலும், இருபது அல்லது இருபத்தைந்து மணி நேரம் மட்டுந்தான் கற்றுத் தருகிருர்கள். என்ருலும், 'இன்ஸ்ட்ருமென்ட் ஃபிளையிங்'கின் அவசியத்தை உணர்ந்து, எல்லாவிதமான விமானப் போக்குவரத்து ஸ்தாபனங்களிலும் கட்டாயமாக 'இன்ஸ்ட்ருமென்ட் ஃபிளையிங் ட்ரெயினர்'களை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

நாகரிகம் புகாத தீவுகள்

பஸிபிக் சமுத்திரத்திலே எவையோ சில தீவுகள் இருக்கின்றனவாம். அவற்றிலே ராஜாங்கக் கடன் கிடையாது, குற்றங் கிடையாது, குடி கிடையாது என்று செய்தி வருகிறது. இந்தத் துர்ப்பாக்கிய மக்களுக்கு நாகரிகத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்க உடனே நாம் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும்.

—'டேல் லீட்ஸ்'



பட்டிழையையும்விட உயர்ந்த உறுதியான நூல் நூற்கும் ஜந்து இது!

சிலந்தி உலகம்

★

சிலந்தியை உற்றுக் கவனித்திருக்கிறீர்களா? அதற்கு எட்டுக் கால்கள் - அதனாலேயே அதற்கு எட்டுக் கால் பூச்சி என்ற காரணப் பெயரும் உண்டு. முன்னங்கால்கள் இரண்டும் நீளமானவை. அதற்குக் கண்கள்கூட எட்டு. ஆனால் அத்தனை கண்கள் இருந்தும், அதற்குத் தன் குழந்தைகள், அயலார் குழந்தைகள் என்ற வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க முடியாது. நடுவே இரு பெரிய கண்கள் உண்டு. மற்ற ஆறு சிறிய கண்களும் பக்கங்களில் இருக்கும். சிலந்தியின் கால்களின் நுனியில் நச்சுச் சுரப்பிகள் இருக்கும். வயிற்றின் அடிப்புறத்தில் நூற்கும் உபகரணம் (ஸ்பின்னிங் அப்பரேட்டஸ்) ஒன்று உண்டு. அதில் நான்கு அல்லது ஆறு 'தூக்கிகள்' (கிளாண்ட்ஸ்) இருக்கும். நுண்ணிய வழிகள் மூலம் நெசவு செய்யும் சாதனமான சுரப்பிகள் (கிளாண்ட்ஸ்) இந்தத் தூக்கிகளின் மேல்பாகத்தில் படியும். இவற்றிலிருந்து சுரக்கும் திரவம் காற்றுப் பட்டதும் மெல்லிய பட்டு நூலாக மாறும். அதைக் கொண்டுதான் சிலந்தி தன் அழகிய வலையைப் பின்னுகிறது.

இந்த நூல் மெல்லிசாக இருந்தாலும் மிக உறுதி வாய்ந்தது. எஃகைத் தட்டி ஓர் அங்குலத்தில் நூற்றில் ஒரு பங்கு பருமனில் மெல்லிய இழைகளாக வெட்டி எடுத்து அந்த எஃகு இழையைச் சிலந்தி நூலுடன் ஒப்பிட்டு நோக்கினால், சிலந்தி நூலே உறுதி மிக்கது என்று புலப்படும்.

இந்தப் பட்டு இழையில் பல வகை உண்டு. அந்த அந்த ரகச் சுரப்பிக்கு ஏற்றபடி நூலும் அமைந்திருக்கும். விஞ்ஞானிகள் ஏழு வகைகளை ஆராய்ந்திருக்கிறார்கள். ஏழையும் ஒரே சிலந்தியில் காண முடியாது. ஓர் இனச் சிலந்தியிடம் மூன்று அல்லது நான்கு வகை இருக்கலாம். ஒவ்வொரு சுரப்பியின் வழியும் ஒவ்வொரு விதத்தில் வேறுபட்டிருக்கும் பட்டுப் புழுவின் இழையைவிடச் சிலந்தி இழை மாறுபட்டும் உறுதியாயும் ரசாயன முறையில் வேறுபட்டும் இருக்கும்.

ஆண் சிலந்திகளைவிடப் பெண் சிலந்திகள் வெகு அழகான வலை பின்னுவதுண்டு. சில ஆண் சிலந்திகள் மகா சோம்பேறிகள். வலை பின்னும் வேலையை மேற்கொள்வதே இல்லை. கருவிகளின் துணைக் கொண்டு ஒரு கணித நிபுணன் அளவெடுப்பதுபோல் அவ்வளவு கச்சிதமாகவும் இழை பிறழாமலும் கோணங்களை அளவெடுத்துச் சிலந்தி வலை பின்னும். முதலில் ஆதாரச் சட்டமாக (ஃப்ரேம் வொர்க்) இருக்க, மட்டமான சொரசொரப்பான நூலைப் பயன்படுத்தும். பின்பு, வலையின் அரைவிட்டப் பாகங்களுக்கு மெல்லிய நூலை உபயோகிக்கும். உணவுக்காகும் பூச்சிகளைப் பிடிப்பதற்காக, கோந்து போல ஒட்டும் நூலும் உண்டு. இந்த நூல் இழுத்துச் சுருங்கும் (இலாஸ்டிக்) தன்மையுடையது. அதனால் இது லகுவில் இற்றுப் போகாது. குஞ்சுகளுக்

மூலம்: வித்யாதனம் (தமிழ்: அக்டோபர் '57), பங்களூர்.

கென்று கவர்ச்சியான இழைகளைச் சிலந்தி ஒதுக்கி வைக்கும். சற்றே பருமனான கண்ணைக் கவரும் நிற முடைய புழுக்கூட்டில் (கொக்கூன்) முட்டைகள் இடும்.

ஆண் சிலந்தி பெண்ணைக் கூப்பிடுவதற்கு வலையின் நூலிழைகள் டெலிஃபோன் கம்பிபோல் உதவும்! ஆண் சிலந்தி நூலைத் தட்டினால், பெண் வாயில்புறம் வேகமாகச் செல்லும்; அல்லது பதிலுக்கு அதுவும் வலையைத் தட்டும்.

வலையின் பல கோடுகள் வீட்டின் பல பாகங்களாகும். ஒரு சாப்பாட்டு அறை (பூச்சிகளைச் சிலந்தி விழுங்கும் இடம்), அதற்கு முன்னால் பூச்சி சிக்க ஒரு பொறி, ஓர் எச்சரிக்கைக் கோடு, தப்பிச் செல்ல வழி எல்லாம் வலையில் உண்டு. ஒரே இடத்தில் இருந்து பெண் சிலந்தி அலுத்துப் போனால், ஊஞ்சலாடப் பிரியப்படும். தன் பளுவைத் தாங்கக் கூடிய நீளமும் கெட்டியுமான நூலை நெய்த பிறகு, வலையை விட்டு நூலோடு சென்று, காற்று வீசும் திக்கு நோக்கி ஆடி மகிழும்.

சிலந்தி இனம் மாறுபடுவது போல, ஒவ்வோர் இனத்துக்கும் தனித்த முறையில் வீடு உண்டு. சில சிலந்திகள் கெட்டியான மண் மேட்டிலும் வீடு கட்டும். அவை வளை தோண்டி, ஓரடி ஆழத்துக்குக் குழி பறிக்கும். குழி முகப்பின் குறுக்களவு ஓர் அங்குலம் இருக்கும். பக்கவாட்டில் ஓர் அறை. வெளியில் வேடிக்கை காண விரும்பாத சமயங்களில் பெண் சிலந்தி இங்கே தான் அடைக்கலம் புகும். இந்த வளையின் மேல்புறத்தில் வைக்கோல், சருகு, இலை, கல் இவையெல்லாம் கொண்டு ஒரு விளிம்பை அமைக்கும். இதற்கு மேல் ஒரு காவல்கூடம் இருக்கும். உணவுக்கு உகந்த பூச்சியின் வரவுக்காகக் காத்திருப்பது இங்கேதான். தன் குறிக்கு எட்டும் தூரத்தில் ஒரு தும்பி வருமானால், விரைவில் அதைச் சிலந்தி ஒரே போடு போட்டுக் கொன்றுவிடும். பிறகு தும்பியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வளைக்குள் நுழையும். தான் நிச்சயமாகப் பூச்சியைப் பிடிக்க முடியும் என்று அதற்குப் பட்டாலொழியக் 'கை' ஓங்காது! இரவு நேரத்தில்தான் சிலந்தி சுறுசுறுப்பாய் இருக்கும். சிறு பூச்சிகள், வெட்டுக்கிளிகள், தத்துக்கிளிகள் இவையெல்லாம் அதன் உணவாகும்.

வெகு மென்மையாயும் வெண்மையாகவும் இருக்கும் இழையால் நெய்த மிக மிகச் சிறிய குட்டிக் கம்பளத்தைத் தரையில் விரித்து, சிறிய கோப்பை போன்ற குழியில் முட்டைகளை இட்டு அதன் மேல் பாகத்தைப் பட்டுப் பாயால் மூடிவிடும். முட்டை வெடித்துக் குஞ்சு வரும் காலம் வரையில் இந்த முட்டைப் பையைச் சுமந்தபடியே சிலந்தி திரியும். நடக்கும்போதோ, ஓய்வெடுக்கையிலோ, பூச்சி பிடிக்கும்போதோ, சாப்பிடுகையிலோ இந்தப் பை அதன் அடி வயிற்றில் இணைந்தே இருக்கும். எப்படியோ தவறி அந்தப் பை விழுந்தாலும், வயிற்றுப் பாகத்திலுள்ள 'தூக்கிகள்' வந்து பற்றிச் சரியான நிலையில் பை பொருந்தும்படி திரும்ப வைத்துவிடும்.

குஞ்சு பொரிப்பது லகுவான காரியம். ஆனால் அதற்கு மூன்று அல்லது நான்கு வாரம் செல்லும். வெப்ப நாட்களில், சிலந்தி வளையை விட்டு வெளியே வரும். விளிம்பின் ஓரத்தில் முட்டைப் பைமீது வெயில் படும்படி அமரும். பின்னங்கால்கள் புழுக் கூட்டிலுள்ள எல்லா முட்டைகளுக்கும் வேண்டிய வெப்பம் கிடைக்கும்படி பொறுமையோடு பையைப் புரட்டிக் கொடுத்தபடி இருக்கும். கூடு வெடித்து வெளிப்பட்ட குஞ்சுகள் தாயின் முதுகில் ஏறிக்கொள்ளும். ஒன்பது மாதம் வரையில் இந்தச் சுமையைத் தாய் மகிழ்ச்சியுடன் தூக்கிக்கொண்டிருக்கும். ஏதாவது ஒரு குஞ்சு தவறி விழுமானால், உடனே தாயின் எட்டுக் கால்களில் ஒன்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு அது மறு நிமிஷமே தாயின் முதுகில் தொற்றிக்கொள்ளும்.

இரு பெண் சிலந்திகள் வழியில் சந்தித்தால் என்ன நடக்கும் தெரி

யுமா? அவற்றுக்கு மரியாதை என்பது மருந்துக்கும் கிடையாது. யாரைக் கண்டாலும் சண்டை தான். நச்சுச் சுரப்பிகள் திறந்து கொள்ளும். வெகு விரைவில் ஒன்று இன்னொன்றின் தலையைக் கவ்விக் கூழாக்கிவிடும்! கொன்ற பிறகு. அதற்கு அந்தச் சிலந்திதான் ஆகாரம். முதுகில் இருக்கும் குஞ்சுகளுக்கு இந்தப் போர் ஒரு வேடிக்கை. ஒரு தாய் இறந்தால், அதைக் கொன்ற சிலந்தி எதிரியின் குஞ்சுகளையும் வளர்க்க ஆரம்பிக்கும்! குஞ்சு எதுவும் இறந்த சிலந்தியைச் சாப்பிடாது. சாப்பிடுவது கொன்ற சிலந்தியின் தனி உரிமை. சில சிலந்திக் குஞ்சுகள் ஒன்றுமே சாப்பிடுவதில்லை. ஒளிக்கதிரையே சுவாசிக்கும். உடலுக்கு வேண்டிய உரம், அதிலிருந்து அவற்றுக்குக் கிடைக்கும். எப்போதும் குஞ்சுகள் சுறுசுறுப்பாய்த் தென்படும்.

நீங்களே ஒரு சிலந்தியை வளர்த்து அதன் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கலாம் உங்களுக்கு அது ஒரு ரசமான பொழுது போக்கா யிருப்பது நிச்சயம்.

அரசனும் கழுதையும்

ஒரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். கால நிலைகளை முன் கூட்டி அறிந்து சொல்ல ஒரு ஜோஸ்யரை அமர்த்திக் கொண் டிருந்தான்.

அரசனுக்கு ஓர் ஆசை நாயகி உண்டு. அவள் வீட்டுப் பக்கமாக ஒருநாள் அரசன் மீன் பிடிக்கப் போனான். போகு முன் ஜோஸ்யரை ஜோஸ்யம் கேட்டான். ''இன்று மழை வருமா?'' என்றான் அரசன். ''வராது'' என்றார் ஜோஸ்யர். அதை நம்பி, அரிய ராஜ உடைகளை அணிந்துகொண்டு, அரசன் சென்றான். ஆசை நாயகி முன் ஜோராகப் போக வேண்டாமா? அதற்காக.

மீன் பிடிக்கும்போது ஒரு குடியானவன் வந்தான்; ''அரசே, இன்று மழை வரும்; உங்கள் ராஜ உடையெல்லாம் நனைந்து விடுமே! மழை வருமுன் அரண்மனைக்குப் போய் விடுங்கள்'' என்றான்.

''நீ என்ன சொல்வது? நான் பெருஞ் சம்பளம் கொடுத்து வைத்திருக்கிற ஜோஸ்யர் சொன்னதை மீறி மழை எப்படி வரும்?'' என்றான் அரசன்.

ஆனால், சிறிது நேரத்தில் மழை வந்து, அரசனின் ஆடை எல்லாம் நனைந்து நாசமாயிற்று. ஆசை நாயகி இதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தாள்

அரண்மனை திரும்பியதும் ஜோஸ்யரை அரசன் வேலையை விட்டு நீக்கினான். குடியானவனை வரவழைத்தான். ''இனி அந்த ஜோஸ்யர் பிரயோசன மில்லை. அவருக்குப் பதில் உன்னை அமர்த்திக்கொள்கிறேன். மழை வருவது முன்னதாகவே எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டான்.

''அரசே. அது எனக்குத் தெரியாது; என் பொதி கழுதைக்குத் தெரியும். அது காதைத் தொங்கவிட்டால், மழை வரும்; எவ்வளவு படியத் தொங்க விடுகிறதோ அவ்வளவு பலமாய் மழை வரும். அதைப் பார்த்தே நான் சொன்னேன்'' என்றான் குடியானவன்.

''அப்படியானால் சரி; நீயும் வேண்டாம். அந்தக் கழுதையையே ஜோஸ்யரின் பதவியில் அமர்த்திக்கொள்கிறேன்'' என்று அப்படியே செய்தான் அரசன்.

அன்று முதல், சர்க்காரின் தலைமைப் பதவிகளை யெல்லாம் கழுதைகள் பிடித்துக்கொண்டு விட்டன.

—ஜெட்டி டக்ளஸ் (அமெரிக்கா)

அடை காக்கும் யந்திரம்

எஸ். எஸ். சிவராமன்

'விலை மோரில் வெண்ணெய் எடுப்பதா?' என்பார்கள். விலை முட்டையிலே கோழி இல்லாமல் குஞ்சே பொரிக்கச் செய்துவிடுகிறார்கள் இந்தக் காலத்தில். இந்தக் கட்டுரையாளர் கோபிசெட்டிபாளையம் மாடல் கோழிப் பண்ணையில் பதவி வகிக்கும் ஆராய்ச்சியாளர்.

அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் முறையை இரண்டு விதங்களில் செய்யலாம்: ஒன்று, 'தாய்க்கோழி அடைகாப்பு' முறை; மற்றது, 'இங்குபேட்டர்' (Incubator) என்ற அடைப்பெட்டி வைத்துச் செய்யும் 'செயற்கை அடைகாப்பு' முறை. இந்த முறையில் தாய்க் கோழியே அவசியமில்லை.

செயற்கை முறை அடைகாப்பில் ஏராளமான குஞ்சுகளை ஒரே சமயத்தில் உற்பத்தி செய்யலாம். கோழி அடைவைப்பதற்கோ அடைகோழிகள் ஏராளமாய் வேண்டியிருக்கும். அவ்வளவு அடைகோழிகளும் அடைகாப்பதற்கு ஒரே சமயத்தில் கிடைப்பது துர்லபம். அடைகோழிகளுக்குத் தீனிச் செலவு அதிகமாகும். செயற்கை அடைகாப்பு முறையில் செலவு அவ்வளவு ஆகாது. கோழி அடைகாப்பில் தாய்க்கோழியிடமிருந்து பல நோய்கள், அது பொரித்த இளங் குஞ்சுகளுக்கும் பரவலாம்; பேன், பூச்சி முதலியவையும், குடல் பூச்சியுங்கூடப் பிடிக்கலாம். இங்குபேட்டர் மூலம் பொரித்த குஞ்சுகள் ஒரு வித வியாதியும் இல்லாமல் நல்ல ஆரோக்கியம் உள்ளவையாக இருக்கும். முட்டைகள் தயாராக இருந்தால் போதும்; 'இங்குபேட்டர்' மூலம் அவற்றைக் கொண்டு எந்த நேரத்திலும் குஞ்சு பொரிக்க ஏற்பாடு செய்யலாம்.



ஒரே தடவையில் 50-முதல் 1,000 முட்டை வரையிலும் - அதற்கு மேலுங்கூட - வைப்பதற்குச் சௌகரியமான அடைப்பெட்டிகள் இருக்கின்றன. நூறு அல்லது நூற்றைம்பது முட்டைகள் வைப்பதற்கு ஏற்ற அடைப்பெட்டி, சாப்பாட்டு மேஜையின் அளவுதான் இருக்கும். பத்துப் பதினைந்து அடைகோழிகளை வைத்துக் கவனித்து வருவதைவிட, மிகச் சுலபமாகவும் குறைந்த அவகாசத்திலும் இங்குபேட்டர் பெட்டியை வைத்துக் கவனிக்கலாம். அடைப்பெட்டியில் விளக்குக்கு எண்ணெய் ஊற்றுவது, திரியைச் சரி செய்வது, முட்டைகளைத் திருப்பிவிடுவது போன்ற வேலைகளை அரைமணி நேரத்தில் செய்துவிடலாம். புதுமாதிரியாகக் கண்டுபிடித்துள்ள அடைப் பெட்-

காப்பிரைட்: மேழிச் செல்வம் (தமிழ்: அக்டோபர் '57), சென்னை.

டியில், முட்டைகளை அடை வைத்திருக்கும் 21 நாளைக்கும் போதிய அளவு மண்ணெண்ணெய் ஊற்றி வைக்க வசதியும், முட்டைகளைக் கையால் திருப்பிவிடுவதற்குப் பதிலாக அவை தாமாகவே திரும்பிக் கொள்ளுவதற்கு ஏற்ற சாதனங்களும் இருக்கின்றன. இந்த வகையான வசதிகள் இருப்பதால், ஜனங்கள் இங்குபேட்டர் பெட்டிகளையே பெரிய அளவில் உபயோகிக்க விரும்புகிறார்கள்.

இது வரையிலும் இங்குபேட்டர் பெட்டிகளை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலிருந்து தருவித்துக் கொண்டிருந்தோம். ஆனால், இப்போது நம் நாட்டிலேயே அவற்றை உற்பத்தி செய்கிறார்கள். இங்குபேட்டரை வாங்கும்போது புத்தம் புதியதாகப் பார்த்து வாங்கவேண்டும். பழைய இங்குபேட்டரில் எந்தப் பகுதியாவது பழுது பட்டிருக்கலாம். அதனால் அடிக்கடி சிறு சிறு தொந்தரவு ஏற்படலாம். பல கம்பெனிகளிலிருந்து இங்குபேட்டர் பட்டியல்களைத் தருவித்து, நன்றாக ஆராய்ந்து, நல்ல பேரும் புகழும் வாய்ந்த கம்பெனியிலிருந்து இங்குபேட்டரை வாங்க வேண்டும்.

ஏனென்றால், பின்னால் இங்குபேட்டரில் பழுதுற்ற ஏதாவது பகுதிகளை உதிரியாக வாங்க நேரிட்டால், அவற்றையும் அதே கம்பெனியிலிருந்து சுலபமாக வாங்கிக்கொள்ளலாம். நம் தேச நிலைமையில் அடையில் வைக்கும் முட்டைகளுக்கு எறும்புகளால் தொந்தரவு அதிகம். எனவே, இங்குபேட்டர் கால்கள் இரண்டு அடி அல்லது மூன்றடி உயரம் இருக்கும்படி நான்கு கால்களுக்கும் அடியில் தகரக் குவளையை வைத்து அதில் பூச்சிகொல்லி மருந்து கலந்த தண்ணீர் ஊற்றி வைத்தால், முட்டைகளுக்கு எறும்புத் தொந்தரவு நேரிடாது.

இங்குபேட்டரில் இரண்டு வகைகள் முக்கியமானவை: (1) வெந்நீர்ச் சுழற்சி முறை; (2) வெப்பக் காற்று முறை.

வெந்நீர்ச் சுழற்சி முறையில், பெட்டியின் வெளிப் பாகம் சுமார்



அரை அங்குலக் கனமுள்ள மரப் பலகையால் செய்திருக்கும். பெட்டியின் உள்பாகம் இரு பிரிவாக இருக்கும். மேல்பாகம் எல்லாப் பக்கங்களிலும் மூடிய ஒரு மரப் பெட்டிபோல் இருக்கும். பெட்டியின் நடுவில் நீர் தேக்கும் தகரப் பெட்டி ஒன்று உண்டு. இந்தத் தண்ணீர்ப் பெட்டியிலிருந்து தொடங்கும் தகரக் குழாய்கள் முட்டைகளை அடுக்கும் தட்டின் மேல் பாகப் பலகையில் பதிந்து சென்று தண்ணீர்ப் பெட்டிக்குள்ளேயே வந்து சேரும். தண்ணீர்ப் பெட்டிக்குள் குழாய்களை அசையாமல் இருக்கும்படி நன்றாகப் பொருத்தியிருப்பார்கள்.

பெட்டியின் அடிப்பாகமும், மேல்பாகத்தைப் போலவே எல்லாப் பக்கங்களிலும் மூடியிருக்கும். பெட்டியின் முன் பக்கத்தில் மட்டும் இழுத்துத் திறந்து மூடுவதற்கு வசதியான கண்ணாடிக் கதவுகள் பொருத்தியிருக்கும். பெட்டிக்குள் முட்டைகளை அடுக்கி வைப்பதற்குச் சல்லடைக் கண் தகரத் தட்டு ஒன்று மேல்பாகத்தில் இருக்கும். அதற்குக் கீழே சாக்குப் பையை நனைத்து வைப்பதற்குத் தட்டு ஒன்று உண்டு. முட்டைகளை அடுக்கியிருக்கும் தட்டுக்குமேலே, மேல்பாகப் பெட்டியின் அடியில் சேர்ந்தாற்போல் பலவித உலோகங்களால் செய்த 'கேப்சூல்' (சிமிழ்) ஒன்று தொங்கிக்கொண்டிருக்கும். சிறு கம்பியொன்றைக் 'கேப்சூலி'ன்மேல் பொருத்தி யிருப்பார்கள். இந்தச்



சிறு கம்பியின்மேல் இன்னொரு கம்பியின் ஒரு நுனியைப் பொருத்தியிருப்பார்கள். இந்தக் கம்பியின் மற்ருெரு நுனியை விளக்குச் சிம்னியோடு சேர்த்து விட்டிருப்பார்கள். விளக்குச் சிம்னியின் வாய் மூடும் அளவுக்கு ஒரு சிறிய வட்டவடிவ மூடி பொருத்தியிருப்பார்கள்.

பெட்டிக்குள் பாரன்ஹீட் 104 டிகிரிக்கு மேல் சூடு போகும்போது 'கேப்சூல்' விரிவடையும். அப்படி விரிவடையும்போது 'கேப்சூலி'ன் மேல் பொருத்தியுள்ள கம்பி, சிம்னியின் மூடியைத் தூக்கும். மூடி விலகியதும், சிம்னியின் உஷ்ணம் வெளியேறுகிறது. சூடு குறையும்போது 'கேப்சூல்' சுருங்கும். சிம்னியின் வாயைக் கம்பி மூடும். இதனுல் உஷ்ணம் அதிகரிக்கிறது. பெட்டிக்குள் உஷ்ணநிலை பாரன்ஹீட் 102 டிகிரியிலிருந்து 104 டிகிரி வரை இருக்கும்போது, 'கேப்சூல்' ஒரே நிலையில் இருக்கும்.

முட்டைத் தட்டுக்குள்ளும், காற்றுப் போவதற்காகச் சிறிய துவாரங்களைப் பெட்டியின் முன் பாகத்தில் அமைத்திருக்கிருர்கள். முட்டைகளுக்கு மேலே பெட்டியோடு சேர்த்தோ, தனியாகவோ ஒரு தெர்மாமீட்டர் பொருத்தியிருப்பார்கள். முட்டை இருக்கும் தட்டுக்கும், கண்ணுடிக் கதவுக்கும் 2½ அங்குலம் இடைவெளி இருக்கும்.

வெப்பக்காற்று முறையில் சூடான தண்ணீர் உள்ள தண்ணீர்ப் பெட்டி கிடையாது. அந்த முறையில் காற்றே சூடாகிறது. அதனுல் முட்டை உஷ்ணம் அடைகிறது. பெட்டியின் அடிப்பாகம் சல்லடைக் கண் துவாரமுள்ள தகட்டால் செய்தது. மற்றப்படி 'கேப்சூல்', தெர்மாமீட்டர் எல்லாம் வெப்பநீர்ப் பெட்டியில் உள்ளவற்றைப் போலவே இதிலும் இருக்கும்.

இங்குபேட்டரில் முட்டைகளை வைப்பதற்கு முன்பு, பூச்சி கொல்லி மருந்துகளை உபயோகித்து, உள்பாகம் முழுவதையும் சுத்தம் செய்யவேண்டும். இங்குபேட்டர் பெட்டியை வைக்கும் இடம் ஒரே சமனுக இருக்கும்படி ரசமட்டம் பார்த்து வைக்கவேண்டும். தண்ணீரில் நனைத்த சாக்குப் பையைக் கீழ்த் தட்டில் போட்டு வைக்கவேண்டும். பிறகு தண்ணீர்ப் பெட்டியில் பாரன்ஹீட் 115 டிகிரி சூடாகக் காய்ந்த தண்ணீர் விட்டு, உட்புறக் குழாய்களின் வழியாகத் தண்ணீர் சுற்றிக்கொண்டு வரும்படி செய்ய வேண்டும். விளக்கில் மண்ணெண்ணெய் விட்டுத் திரியைப் பற்றவைத்துத் தண்ணீர்ப் பெட்டிக்கு அடியில் வைக்கவேண்டும். அதன் பிறகு கண்ணுடிக் கதவுகளை மூடிவிட வேண்டும்.

நல்ல வடிவமும் நல்ல கனமும் உள்ளவையும் ஆடாதவையுமான முட்டைகளைப் பொறுக்க வேண்டும். ஒரு டஜன் முட்டைகள் 20 அவுன்ஸிலிருந்து 14 அவுன்ஸ் வரை எடை இருக்கும்படி பொறுக்கவேண்டும். இப்படித் தேர்ந்தெடுத்த முட்டைகளை எடுத்து அவற்றின் இருபுறமும் வெவ்வேறு நிறத்தில் குறியிட வேண்டும். மேல்புறம் முழுவதும் சிவப்புக்குறி தெரியும்படி காலையில் முட்டைகளை அடுக்கியிருந்தால், மாலையில் அவற்றை நீலக்குறி மேல்புறம் தெரியும்படி திருப்பிவைக்க வேண்டும். தாய்க்கோழி முட்டைகளைத் திருப்பும்போது, எல்லாப் பக்கங்களிலும் உஷ்ணம் பட்டு, குஞ்சு நல்ல வளர்ச்சி பெறும். முட்டைகளை மிகவும் நெருக்கமாகவோ மிகவும்

விசாலமாகவோ அடுக்கிவிடக் கூடாது. முட்டைகளை அடுக்கும்போது, ஒரு காகிதத்தில் முட்டைகளின் எண்ணிக்கை, ஜாதி, அடுக்கிய தேதி, நேரம் ஆகியவற்றைக் குறித்துக்கொள்ள வேண்டும்.

உஷ்ணநிலை பாரன்ஹீட் 104 டிகிரி இருக்கும்போது, முட்டைத் தட்டைப் பெட்டியில் செருகி, பெட்டியை மூடிவிட வேண்டும். பெட்டியை அடிக்கடி திறக்கக் கூடாது. அடிக்கடி உஷ்ண நிலையைப் பார்த்துக்கொள்ள வேண்டும். உஷ்ணநிலை அதிகமானால் விளக்குத் திரியைச் சற்றுத் தணித்தும், குறைந்தால் திரியைச் சற்றுத் தூண்டியும் விடவேண்டும். தண்ணீரும் மண்ணெண்ணெயும் ஊற்றுவது, கீழ்த்தட்டில் உள்ள சாக்கை நனைப்பது, விளக்குத்திரியின் கரியைத் தட்டுவது இவற்றைத் தினசரி கவனிக்க வேண்டும்.

21 நாளில் முதல் வாரத்தில் பாரன்ஹீட் 104, 2-ஆவது வாரத்தில் 103, 3-ஆவது வாரத்தில் 103 டிகிரி உஷ்ணநிலை இருக்கவேண்டும். முட்டைகளை வைத்த முதல் 36 மணி நேரம் வரையில் திருப்பக் கூடாது. பதினெட்டாம் நாள் காலை வரைக்கும் முட்டைகளைக் காலையும் மாலையும் திருப்பலாம். பதினெட்டாம் நாள் காலையில் சாக்கிலுள்ள தண்ணீரை நன்றாகப் பிழிந்துவிட்டுச் சாக்கைக் கீழ்த்தட்டில் போட வேண்டும். பிறகு கண்ணாடிக் கதவைத் திறக்கக்கூடாது. 21-ஆம் நாளிலிருந்து குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவரும். கண்ணாடிக் கதவு மூலம் வெளிச்சம் வரும்போது குஞ்சுகள் வெளிச்சத்தை நோக்கி வந்து, 2½ அங்குல இடைவெளி வழியாகக் கீழ்த் தட்டில் விழும்.

முட்டைகள் பாரன்ஹீட் டிகிரி உஷ்ணச் சூழ்நிலையில் இருக்கும்போது, கரு வளர ஆரம்பிக்கிறது. முட்டையை இங்குபேட்டரில் வைத்த 7-ஆம் நாளன்று சோதனை செய்யலாம். ஒவ்வொரு முட்டையாக உள்ளங்கையில் வைத்து நல்ல மின்சார விளக்குக்கு முன்னால் நீட்டி முட்டைக்குள் பார்த்தால், வளரும் கரு சற்றுப் பருமனாயும் கறுப்பாகவும் தெரியும். கரு அணு இல்லாத 'கன்னி முட்டை'யாக இருந்தால், முட்டை முழுவதும் மஞ்சளாகவும் தெளிவாகவும் தெரியும். இப்படிப்பட்ட கெட்ட முட்டைகளை உடனே அகற்றிவிட வேண்டும். கொஞ்சம் சந்தேகமாயிருப்பதை மீண்டும் இங்குபேட்டரிலேயே வைத்துவிடலாம். பதினான்காம் நாள் காலையில் முட்டையைச் சோதிக்கும்போது, நல்ல முட்டையில் கரு வளர்ந்து பாதி முட்டையைக் கவர்ந்திருக்கும்; கெட்ட முட்டைகள் இயற்கைக்கு விரோதமாகக் கலங்கியோ, மங்கலாகவோ, வளர்ச்சி குறைந்தோ தோன்றும். கெட்ட முட்டைகளை உடனே அகற்றி விடவேண்டும். கரு ஒழுங்காய் வளர்வதையும், கெட்டுப் போயிருப்பதையும் தெரிந்து கொள்ளலாம்.



குஞ்சு பொரித்து 24 மணி நேரங் கழித்து, மெதுவாக இங்குபேட்டர் கதவைத் திறக்க வேண்டும். கீழ்த்தட்டில் விழுந்த குஞ்சுகளை எடுக்கவேண்டும். முட்டைத் தட்டில் சில முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவரத் திண்டாடும். அவற்றை ஒன்றும் செய்யாமல் இயற்கைக்கே விட்டுவிடவேண்டும். குஞ்சு வெளிவர நாம் உதவி செய்தால், குஞ்சுகளுக்குக் காயம் ஏற்படலாம். மேலும், அப்படி உதவிய குஞ்சுகளுக்குப் போதிய சக்தி இருக்காது. அவை இறந்துபோகக் கூடும்.

இங்குபேட்டரிலிருந்து எடுத்த குஞ்சுகளை வளர்ப்புப் பெட்டி (Brooder box) அல்லது மாற்றுந் தாய்ப் பெட்டியில் விடவேண்டும். குஞ்சுகளுக்கு 36 மணி நேரம் ஆகாரம் தேவை இல்லை. ஏடு எடுத்த பால் முதல் நாளும், பிறகு சோளம், கம்பு, குருணைகளும் போட வேண்டும். பச்சைக்கீரைகளை நன்றாக நறுக்கிப் போடவேண்டும். 10 நாள் கழித்து, வேகவைத்த முட்டைகளை ஒரு நாளைக்கு இரண்டு தடவை போடவேண்டும். இப்படியே குஞ்சுகளை இரண்டு மாதம் வளர்த்துவிட்டு, ஆகார விதிகளை மாற்றலாம். பிறகு மாற்றுந் தாய்ப் பெட்டியிலிருந்து எடுத்து, பெரிய குஞ்சுகளுக்குரிய பெட்டியில் வைத்து வளர்க்கலாம்.

சாதாரணமாக எவ்வளவு லாபகரமாகப் பொரித்தாலும், 100-க்கு 40 முதல் 75 முட்டைகள் வரையில்தான் குஞ்சு பொரிக்கும். மீதி முட்டைகளில் குஞ்சுகள் இறந்திருக்கலாம்.

50 முதல் 10,000 முட்டைகள் வரைக்கும் ஒரே தடவையில் வைக்கக் கூடியதாக இங்குபேட்டரைச் செய்கிறார்கள். அமெரிக்கா போன்ற தேசங்களில் இங்குபேட்டர் அறைகளே கட்டியிருக்கிறார்கள். அந்த அறைகளுள் ஒவ்வொன்றிலும் ஒரு தடவையில் 90,000 குஞ்சுகள் வெளிவர வசதி இருக்கிறது. கோழிப்பண்ணை ஆரம்பிக்காமல் முட்டைகளை வாங்கி இங்குபேட்டர் மூலம் குஞ்சு பொரிக்கச் செய்து, குஞ்சுகளை விற்பதைச் சில அமெரிக்கர்கள் தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நம் தேசத்தில், இங்குபேட்டரில் குஞ்சு பொரிப்பது இப்போது பிரபலமாகிக்கொண்டிருக்கிறது. கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள் தங்களுக்கு வேண்டிய அளவுள்ள இங்குபேட்டர் வாங்கலாம். இங்குபேட்டர் வாங்க முடியாதவர்கள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமத்துக்கு ஓர் இங்குபேட்டர் வாங்கிக்கொள்ளலாம். இங்குபேட்டர் வைத்திருக்க, அதிக இடம் தேவையில்லை. பேன் முதலிய பூச்சிகளால் குஞ்சுகள் இறப்பதில்லை. தாய்க் கோழியின் அடை உஷ்ண பேதமும் முட்டைகளுக்கு ஏற்படுவதில்லை. இப்படிப்பட்ட பல காரணங்களையும் யோசித்துப் பார்த்தால், அதிகக் கோழி வளர்த்து லாபம் எடுக்க விரும்புவோருக்கு இங்குபேட்டர் மிகவும் அவசியம் என்பது புலனாகும்.

விசாரணை

குருவிக்கடை ஒன்றுக்குள் ஒரு சீமாட்டி புகுந்தாள். "என்னிடம் இரண்டு புறாக்கள் இருக்கின்றன. ஒன்று ஆண் புறா; மற்றது பெண் புறா. எது ஆண், எது பெண் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. எப்படிக் கண்டுபிடிப்பது?" என்று கடைக்காரரைக் கேட்டாள்.

கடைகாரர் சாவதானமாக, "ஆண் புழு ஒன்று, பெண் புழு ஒன்று இரண்டையும் எடுத்துக்கொள்ளுங்கள். புறாக்களிடம் போடுங்கள். ஆண்புறா பெண் புழுவைத் தின்னும்; பெண்புறா ஆண் புழுவைத் தின்னும். இதைக் கொண்டு கண்டு பிடிக்கலாம்" என்றார்.

"அது சரி; புழுக்களில் ஆணையும் பெண்ணையும் எப்படிக் கண்டு பிடிப்பது?" என்று மறுபடியும் கேட்டாள் சீமாட்டி.

"அதுவா? அதை இங்கே கேட்காதீர்கள். இது குருவிக் கடை. அதைப் புழுக்கடையில் போய்க் கேளுங்கள்" என்றார் கடைக்காரர்.

—'ஃப்ரீ இண்டியா', சென்னை.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிருர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

தி. ஆறுமுகம், சென்னை.

கேள்வி: ''வாலிபப் பருவம் ஆரம்பிக்கும்போது அகச்சுரப்பிகள் அதிகமாய்ச் சுரக்கும். அவற்றில் ஒன்று மார்பைச் சுற்றிப் பருக்கச் செய்யும். இந்த 20 வயசில் இந்த மாதிரி தோற்றம் ஏற்படுவது இயல்பே'' என்று டாக்டரவர்கள் என் கேள்விக்குப் பதிலளித்திருக்கிருர். இப்படி அதிகமாய்ச் சுரக்கும் அகச்சுரப்பைத் தடுக்க மருந்து அல்லது ஊசி ஏதாவது உண்டா? இருந்தால் அதை உபயோகித்து மார்பு வீக்கத்தைக் குறைக்க இயலுமா?

விடை: அகச்சுரப்பு ஒவ்வொன்றும் பல்வகை இயக்கங்களை உடையது. வாலிபப் பருவம் நன்ருய் விளங்க இந்தச் சுரப்புகள் சுரக்கும் போது, மார்பிலும் மாறுபாடு தோன்றும். இதைத் தடுக்க முயன்ருல் ஆண்மையை விளக்கும் வேறு குறிகளும் தடைப்படக்கூடும். ஆகவே, எந்தவிதமான மருந்தோ ஊசியோ சிபாரிசு செய்ய முடியாது. பொறுத்திருந்தால் இந்தத் தோற்றம் நிச்சயமாய் மாறிவிடும்.

கே. வரதன், சென்னை.

கே-1: நான் பல வருஷ காலம் திறந்த வெளியில் படுத்துப் பழகிவிட்டேன். பெரியோர்களின் நிர்ப்பந்தத்திஞல் வீட்டில் படுத்தால் சரியாகத் தூக்கம் வருவதில்லை. சிலர் திறந்த வெளியில் படுக்கக்கூடாது என்கிருர்கள். அப்படிப் படுப்பதால் என்ன கெடுதி?

வி: பெல்லாரி, டில்லி போன்ற இடங்களில் வெயில் நாளெல்லாம் திறந்த வெளியிலேதான் உறங்க முடியும். இரவில் வீட்டுக்குள்ளே வெப்பம் தாங்க முடியாது. திறந்த வெளியில் படுப்பது நன்மையே. சென்னையிலும் திறந்த வெளியில் தூங்கலாம். ஆனல், இந்தப் பனிக் காலத்தில் அப்படித் தூங்கலாகாது. பனித் துளிகள் உடலை நன்ருக நனைத்து வாத நோய் தோற்றுவிக்கக்கூடும். திறந்த வெளியில் தூங்கச் சாதாரண நாளில்கூட ஆகாயத்தை மறைத்துப் பந்தல் இருந்தால் நல்லது. பறவைகள் பறக்கும் போது சில வேளை மலங் கழித்தால், நம் உடலில் விழாமல் பந்தல் தடுக்கும். நிலா நாளில் சந்திரனின் ஒளியால் தூக்கம் கலையாமல் இருக்கவும் பந்தல் நல்லது.

கே-2: என் வயசு 20. உயரம் 5 அடி 7 அங்குலம். எடை 103 பவுண்டு பொருத்தமா?

வி: பொருத்தம்.

ஆர். பாண்டியன், தநுஷ்கோடி.

கே: என் நண்பன் ராமன் என்னைப் பார்த்து, 'உன் காது

கொஞ்சம் மந்தம்' என்று சிரித்துக் கொண்டே சொன்னான். அவன் சொன்ன நாளிலிருந்து இன்று வரைக்கும், அதாவது சுமார் ஆறு மாதமாக, அதே கவலையா யிருக் கிறேன். என் காதும் அதுமுதல் வலித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் காது சரியாகக் கேட்கிறது. அவன் சொன்னது ஞாபகம் வரும் போதுதான் வலிக்கிறது. டாக்ட ரிடம் சென்றதற்கு ஏதோ மருந்து போட்டார். கோளாறு இருப்பதை அறிய எக்ஸ்-ரே எடுக்கலாமா?

வி: பிராம்மணர் ஒருவர் ஆட் டைத் தோளிலே தூக்கிக்கொண்டு யாகத்துக்குச் செல்லும்போது குறும்பு நிறைந்த மூன்று திருடர் கள், ''நாயைத் தோளில் தூக்கிக்



கொண்டு செல்லும் அந்தணரைப் பார்'' என்று சொல்ல, அவர் சந்தேகம் முற்றிக் கடைசியில் ஆட்டைக் கீழே விட்டுவிட்டு ஓடினார் என்று ஒரு பஞ்சதந்திரக் கதை உண்டு. நண்பர் பாண்டிய னுக்கு நேர்ந்திருப்பதைப் பார்க் கும்போது இந்தக் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. இவர் இந்தக் கவலையை மறக்க, தமக்குச் சுவையான வேறு விஷயங்களிலும் வேலைகளிலும் ஊக்கமாக ஈடுபட வேண்டும்.

முனிரத்தினம், கோலார்.

கே: என் தகப்பனாருக்கு வயசு 50. 20 வருஷங்களுக்கு முன் அவரை எலி கடித்துவிட்டதாம். அன்று முதல் இன்று வரைக்கும் இருமல், மூச்சுத் திணறல் இவற்றால் அவதிப்படுகிறார். எத்தனை மருந்து சாப்பிட்டும் பயன் இல்லை.

வி: திரு. முனிரத்தினத்தின் தகப்பனாருக்குத் தோன்றியிருப்பது ஈளை (ஆஸ்த்மா) நோய். எலி மூச்சு விடுவது வெகு வேகமா யிருக்கும். பெருச்சாளியைக் கூட்டில் அடைத்தால் 'கிர்பிர்' என்று மூச்சுவிடும். இது காரண மாக எலி, பெருச்சாளி கடித்து மூச்சுத் திணறும் ஈளை நோய் ஏற்படுகிறது என்று பாமர மக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கு ஆதாரமே கிடையாது. ஆஸ்த்மா வைக் குணப்படுத்துவது மிகவும் கடினம். அப்போதப்போது இஞ்செக்ஷன் முறையில் சிரமத் தைச் சமனம் பண்ணிக்கொள்ள லாம்.

வி. பாலாறு, தலியம்பட்டி.

கே: நானும் எங்கள் ஊரில் உள்ள வேறு பலரும் 'நரம்புச் சிலந்தி' என்ற கொடிய நோயால் பெரிதும் அவதிப்படுகிறோம். இதற்கு விமோசனம் என்ன?

வி: நரம்புச் சிலந்திக்குக் கார ணம் ஒரு வகைப் பூச்சி. இது இரைப் பூச்சியைப்போல் புழு உருவம் உடையது. நீண்ட கம்பி போல் இருக்கும். காலில் புண்



தோற்றுவிக்கும். இதிலிருந்து வரும் முட்டைகள் படிக் கிணறு, குட்டை இந்தத் தண்ணீர் வசதிகளில் காலி லிருந்து கலவையாகும். 'ஸைக் ளோப்ஸ்' என்னும் ஒரு வகை நண்டுப் பூச்சியின் உடலில் இந்த முட்டைகள் சென்று நரம்புச் சிலந்திப் பூச்சிக் குஞ்சாகித் தண்ணீரோடு மனிதனின் குடலுக் குள் சென்று, அங்கிருந்து உடலில் பரவி முதுமை அடைந்து காலில் புகுந்து பிறகு தண்ணீரில் முட்டை யிடும். இதற்குப் பரிகாரமாகச் சில இஞ்செக்ஷன் மருந்துகள்



இருக்கின்றன. அவற்றைக் குத்திக் கொள்ளலாம். மேலும், வெளியே காலில் புண் வழியாய்த் தோன்றியிருக்கும் நரம்புச் சிலந்தியின் பகுதியைக் குச்சியில் நூல் சுற்றுவதுபோல் நாளுக்கு நாள் சுற்றி மருந்துத் துணி போட்டு மூடி வைக்க வேண்டும். கடைசியில் முழுப் பூச்சியும் வெளியே வந்துவிடும்; புண் குணமாகும். கிணறு படிக் கிணருக இருக்கலாகாது. குடிக்கும் தண்ணீரைக் கொதிக்க வைக்க வேண்டும்.

பி. ஆர். சேஷாத்திரி, போபால்:

கே: சாதாரணமாகத் தூங்கும்போது வலது பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டால், நாசியின் இரு துவாரங்களின் வழியாக மூச்சு இழுக்கவும் விடவும் முடிவதில்லை; வலது துவாரத்தால்தான் மூச்சு விட முடிகிறது. இதேபோல் இடது பக்கம் திரும்பிப் படுத்தால், இடது நாசித் துவாரம் அடைபட்டதுபோல் உணர்ச்சி உண்டாகிறது; வலது துவாரத்தால் மூச்சு விட முடிகிறது. நேராக மல்லாந்து படுத்தால், நன்ருக இரு நாசித் துவாரங்களும் வேலை செய்கின்றன. எனக்குச் சளி, இருமல் ஒன்றும் இல்லை.

வி: சாதாரணமாக மூச்சு இழுத்து விடும்போது, நாம் இரு நாசித் துவாரங்கள் வழியாயும் மூச்சு இழுப்பதுமில்லை; விடுவதுமில்லை. ஒரு நாசித் துவாரத்தால் மூச்சு இழுத்துக்கொள்வோம்; வேறொரு துவாரத்தால் மூச்சு விடுவோம். சில சமயம் ஒரே துவாரத்தால் மூச்சு இழுத்து, அதன் மூலமே விடுவோம். ஒரே சமயம் இரு துவாரங்களாலும் மூச்சு இழுத்துவிடுவது அபூர்வம். இடது பக்கம் திரும்பிப் படுத்தால் வலது நாசித் துவாரம் வழியாக மூச்சு விடுவதும், வலது பக்கம் திரும்பிப் படுத்தால் இடது நாசித் துவாரம் வழியாக மூச்சு விடுவதும் சாத்தியம் அல்ல என்று நினைக்கிறேன். நண்பர் சற்றுக் கூர்ந்து கவனித்து விவரம் எழுதக் கேட்டுக்கொள்கிறேன். சாஸ்திரப்படி இடது பக்கம் திரும்பிப் படுத்தே தூங்க வேண்டும் என்று சொல்வார்கள். இதற்குக் காரணம் இருக்கிறது. இடது பக்கச் சுவாசகோசம் சற்றுச் சிறிது; வலது பக்கச் சுவாசகோசம் சற்றுப் பெரிது. ஆகவே, சாஸ்திரப்படி படுத்துத் தூங்குவதால் ரத்தம் அதிகம் தடைப்படாமல் ஓடித் தூய்மையாகும்.

சாரங்கபாணி, புதுக்கோட்டை.

கே: என் வயசு 21. உயரம் 5 அடி 11 அங்குலம். எடை 92 பவுண்டு. இதன் காரணம் தைராயிட் அதிகம் சுரப்பதுதான் என்று நினைக்கிறேன். இந்த உயரத்துக்கு ஏற்ற கட்டு இல்லை. ஒல்லியாக



இருக்கிறேன். என் உடலில் உள்ள எலும்புகளை எண்ணிவிடலாம் போல் அவை எல்லாம் மேலே தெரிகின்றன. சில சமயம் உட்கார்ந்துவிட்டு எழுந்திருக்கும் போதும் சோம்பல் முறிக்கும்

போதும், லேசாய்க் கிறுகிறுப்பு வருகிறது. வேறு நோய் ஒன்றும் இல்லை. எனக்குப் பன்னிரண்டாவது வயசில் வாத நோய் ஏற்பட்டது.

வி: தைராயிட் அதிகமாய்ச் சுரப்பதால் உயரம் அதிகம் ஆகாது. அது அதிகம் சுரந்தால், கண்விழி பிதுங்கினாற்போல் இருக்கலாம்; இளைத்தும் இருக்கலாம். சிலருக்குப் பிட்யூட்டரி என்னும் சுரப்பியில் கேடு நேர்ந்து இந்த மாதிரி அதிக உயரம் ஏற்படுவதுண்டு. ஆனால், நண்பர் விஷயத்தில் அது காரணமாயிருக்குமென்றும் தோன்றவில்லை. சிலருக்குச் சிறு வயசில் கீல்வாயு ஏற்படுவதையும், பிறகு அதிக உயரமாக வளர்வதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒன்றுக்கு மற்றொன்று காரணமாயிருக்குமா என்பது சந்தேகமே.

ஆர். தியாகராசன், சிதம்பரம்.

கே: என் நண்பனின் வயசு 25. மணம் ஆகவில்லை. யாரையும் பார்த்து ஆசைப்படுவதில்லை. ஆனால் 45 வயசான ஒரு விதவையைக் கண்டுமட்டும் ஆசைப்படுகிறான். ஏன்?

வி: இவன் தாயிடம் ஒட்டியிருப்பவன். தாய் நிலையிலிருந்து இவனைப் பாதுகாக்கக் கூடிய மாதைத்தான் விரும்பக் கூடியவன்.

கே: 'ஈ' வைட்டமின் அதிக அளவில் உள்ள பொருள்கள் எவை? இந்த வைட்டமின் சத்து உடம்பில் அதிக அளவு இருப்பதால் பயன் என்ன?

வி: 'ஈ' வைட்டமின் முக்கியமாய்த் தானியங்களின் முளைப் பகுதியில்தான் அதிகம். விஞ்ஞானக் காங்கிரஸுக்கு வந்த ஒரு நிபுணர், 'இது உடம்பில் அதிகம் இருப்பதால் பயன் ஒன்றும் இல்லை' என்று சொல்லிவிட்டார்.

ஆ. தெய்வராஜன், மதுரை.

கே: வயசு 15. உயரம் 5 அடி 6 அங்குலம். எடை 116 பவுண்டு. இனிமேல் வளராமல் இருக்க வழி உண்டா? என் உயரத்தைக் கண்டு நண்பர்கள் கேலி செய்கிறார்கள்.

வி: உயரம் மேலும் ஓங்காதென்று நினைக்கிறேன். ஆனால் உறுதியாய்ச் சொல்ல இயலாது. கேலி செய்கிறவர்கள் நண்பர்கள் அல்ல. அவர்களுடைய கேலிக்குப் பயப்பட வேண்டியதில்லை.

லட்சுமி, பழநி.

கே: என் ஐந்து மாதக் குழந்தைக்கு வளர்ச்சி இல்லை; ஒல்லியாயிருக்கிறது. தாய்ப் பால் பூர்ணமாக இல்லாததால், பசுவின் பால் கொடுக்கிறேன். 'அடெக்சலின்' கொடுக்கலாமா? 'க்ளாக்ஸோ', 'கௌ அண்டு கேட்' இவை கொடுப்பது நல்லதா? ராகி கொடுக்கலாமா?

வி: குழந்தைக்குத் தாய்ப் பால் மட்டுமே முதல் ஆறு மாதமும் கொடுத்தாகவேண்டும். முடியாது போனால், நல்ல பசுவின் பாலை நான்காவது மாதம் முதல் கொடுக்க ஆரம்பிக்கலாம். இவருடைய குழந்தைக்கு ராகிக் கூழ் கொடுக்கக்கூடாது. அது குழந்தைக்கு ஜீர்ணமாகாது. குழந்தை ஒல்லியா யிருந்தாலும் சுறுசுறுப்பாயிருந்தால் போதுமானது. விற்பனைக்கு வரும் செயற்கைப் பாலைக் கொடுப்பது இரண்டாம் பட்சமே. ஏ-வைட்டமினும் டி-வைட்டமினும் சிறிதளவு கொடுக்கலாம்.

பகவான் என்றே கதிரவனை ஆதிகால மக்கள் கொண்டாடியது அறியாமையால் என்று சொல்பவரே அறியாதார்.

சுகம் தரும் சூரியன்

டாக்டர் எட்வர்டு பொடால்ஸ்கீ

சூரியனின் ஒளிக்கதிர்க் கரங்கள்தான், சகல உயிர்களையும் படைத்தவை. பூமண்டலத்தின் மேல்புறத்தைச் சூரியனின் கதிர்கள் தொட்டு வெப்பம் ஊட்டின; உடனே உயிர்க்குலத்தின் விதம் விதமான ஸ்வரங்கள் கூடி இன்னிசை எழுப்பின. சகல உயிர்களுக்கும் சூரியனின் ஒளிக் கதிர்கள் இங்கிதமான கதகதப்பும் ஒளியும் தந்தன. பச்சையும் மஞ்சளும், சிவப்பும் நீலமும், தங்கமும் பழுப்பும் என்று எண்ணற்ற வர்ண ஜாலங்களைச் சூரியனின் மந்திரப் பொன்கதிர்கள் தொட்டெழுப்பி விட்டன.

ஆதிகாலத்திலிருந்தே மனிதன் சூரியனை வணங்கி வரலானான். எகிப்து மக்கள் - முக்கியமாக ஹீலியோ பாலிஸ் (சூரிய நகரம்) என்ற இடத்தில்-சூரியனை வணங்கினார்கள். ஆக்கும் கடவுளாக மட்டும் அல்ல, ஆரோக்கியம் தரும் கடவுளாகவும் ஆதிகாலத்து மக்கள் சூரியனை வணங்கினார்கள். ரோகங்களைக் குணப்படுத்தும் மருந்துச் சக்தி சூரியனுக்கு இருப்பதாக அந்த நாள் வைத்தியர்கள் தொடக்கத்திலேயே கண்டு கொண்டார்கள். பழங்காலப் பாலஸ்தீனில் வாழ்ந்த ஃபிலிஸ்டைன் என்ற மக்கள், பேஅல் என்ற கடவுளைச் சூரியனாகவும் நோய் தீர்க்கும் தெய்வமாகவும் இணைத்தே போற்றினார்கள்.

ஆயினும், உடல் நலத்துக்கு வெயிலின் அவசியத்தை நவீன காலத்தில்தான் நன்றாக ஆராய்ந்து கண்டார்கள். உடலின் பல நோய்களைத் தீர்க்கக்கூடிய சக்தி, வெயிலுக்கு இருக்கிறது என்று இன்று மதிக்கிறார்கள். உடலின் பல உறுப்புக்களில் வெயிலால் என்ன பலன்கள் உண்டாகின்றன என்று நவீன டாக்டர்கள் ஆழமாய் ஆராய்ந்திருக்கிறார்கள். அதிலிருந்து ரசமான பல விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன.

நமக்கு அதிகச் சுறுசுறுப்பும் உற்சாகமும் தரக்கூடிய நிச்சயமான சக்தி சூரியனுக்கு இருக்கிறது. இது எப்படி? நம் உடல் உறுப்புக்கள் பலவற்றின்மீதும் வெயில் படும்போது உண்டாகும் பலன்களைப் பார்ப்போம். நமது ரத்த அழுத்தம் (ப்ளட் ப்ரஷர்) மிக உயர்ந்திருக்கும்போது, அதை எட்டு முதல் பத்துச் சதவிகிதம் சூரியனின் கதிர்கள் குறைத்து விடுகின்றன. நம் நாடித் துடிப்பு முழுமையாக ஒழுங்காக நிகழும்படி செய்யவல்லது வெயில் என்று



காப்பிரைட்: யுவர் ஹெல்த் (ஆங்கிலம்: செப்டம்பர் '57), 23, ஸமவாய மான்ஷன்ஸ், கல்கத்தா-13.

ஹாஸெல்பாச் என்ற டாக்டர் கண்டுபிடித்திருக்கிறார். பொதுவாய்ச் சொன்னால், இருதயத்துக்கும் ரத்தக் குழாய்களுக்கும் வெயில் மிகுந்த நன்மை பயக்கிறது. ரத்தத்துக்குமே அது ஆரோக்கியம் தருகிறது. ரத்தத்தில் சிவப்பு அணுக்களுக்குள் பிராண வாயுவைச் சுமந்து செல்லும் செந்நிற அம்சமான 'ஹேமோகுளோபின்' என்பது, சூரியனின் கதிர்களால் அதிகரிக்கிறது. எனவேதான், திறந்த வெளியில் வெயிலில் எப்போதும் வேலை செய்கிறவர்களின் மேனி பளபளவென்று ஆரோக்கியமான ரங்கு பெறுகிறது.

பிராணிகளின் உடலிலே வெயிலால் ஏற்படும் ரசாயன மாறுதல்களும் (மெட்டபாலிஸம்), ஆச்சரியமானவையே. சூரிய ஒளியால் இந்த ரசாயன நிகழ்ச்சிகள் அதிகரிக்கின்றன என்று கோனிக்ஸ்ஃபீல்டு என்ற டாக்டர் சொல்லுகிறார். இதனால் உடலின் ஊட்டம் (ந்யுட்ரீஷன்) அதிகரிக்கிறது. உடலில் கனிப்பொருள் ரசாயன மாறுதல்கள் (மினரல் மெட்டபாலிஸம்) நிச்சயமாக வெயிலால்தான் நிகழ்கிறது. வெயிலின் பலனாக நிகழும் ரசாயன மாறுதலால், பல்லும் எலும்பும் அபிவிருத்தி அடைகின்றன. தேகத்தில் உள்ள எலும்புக் கூட்டை வெகு காலம் இளமையின் வலுவோடு வெயில் பாதுகாத்து வைக்கிறது. எலும்பு மிக முறுக்காக (ப்ரிட்டில்) இராமல் வெயிலின் சக்தியால் பதப்படுகிறது; எனவே, எளிதில் முறிவதில்லை. இதே போல் சொத்தை (கேரீஸ்), இடுக்கு (கேவிட்டீஸ்) இவை விழாமல் பல் உறுதியா யிருக்கிறது.

குறிப்பிட்ட நேரம் கணக்காக உடலில் வெயில் படும்படி வைத்துக்கொண்டால், எப்போதும் நிச்சயமான பலன் விளைகிறது. உடலிலே ஏற்படும் ரசாயன மாறுதல் அதிகரிப்பதால், நல்ல பசி எடுக்கிறது. உணவு நன்றாய் ஜீர்ணமாகி, உடல் சதைத் துணுக்குகள் (டிஷ்யூ) அனைத்தும் அபிவிருத்தி அடைகின்றன. உடலில் உள்ள சதைத் துணுக்குகள் எல்லாம் உறுதியா யிருப்பது, உறுப்புக்களெல்லாம் திறமையாய் வேலை செய்வது, ஆரோக்கியமாய் இருக்கிறோம் என்ற உணர்ச்சி பெறுவது இவையெல்லாம் இளமையின் லட்சணங்கள். உடலுக்குச் சரியான ஊட்டம் பெற்றால்தான் இவை சாத்தியம்.

நல்ல தூக்கம் தூங்குவதற்கும் வெயில் உதவுகிறது. சதைத் துணுக்குகளிலே பிராணவாயு அதிகமாய்க் கலக்கும்படி (ஆக்ஸிடைஸ்) செய்கிறது சூரியன். இதனால் தூக்கக் கேடு (இன்ஸாம்னியா) விலகுகிறது; சுகமான தூக்கம் உண்டாகிறது. உடலின் உறுப்புக்களெல்லாம் ஓய்வு பெறத் தூக்கம் உதவுகிறது. சக்தியும் சுறுசுறுப்பும் பெற உடலுக்கு இந்த ஓய்வு அவசியம். களைப்பு எப்போது உண்டானாலும் தேகம் சக்தி குன்றிவிடும். இதனால் சீக்கிரமே கிழடு தட்டிவிடும். உடலுக்கு வலிமை, ஆற்றல், இளமை மிடுக்கு எல்லாவற்றையும் புதுப்பித்துக் கொள்ளச் சரியானபடி தூங்கும் பழக்கம் வேண்டும்.

நன்மை செய்யும் பொருள்களை உடலிலே ஏற்றுக்கொள்ளுவது (அஸிமிலேஷன்), கேடு தரும் பொருள்களை உடலை விட்டு வெளியேற்றுவது (எலிமினேஷன்) இரண்டு காரியங்களும் சிறப்பாய் நடக்க வெயில் உதவுகிறது. 'என்ஸைம்' என்ற நொதிச் சத்துப் போன்ற மந்திரசக்தி வெயிலுக்கு இருக்கிறது. சதைத் துணுக்குகளைப் புதுப்பிப்பதற்கு ஊட்டமான உணவுப் பொருள்கள் மிகச் சிறப்பாய்ப் பயன்படச் செய்கிறது வெயில். அதனால் தசைநார்கள் உறுதிப்படுகின்றன; சர்மம் விரிந்து சுருங்கும் (இலாஸ்டிக்) சக்தி பெறுகிறது. கழிவுப் பொருள்களை உடலிலிருந்து மிகத் திறமையாக வெயில் வெளியேற்றுகிறது. தனக்குத் தானே உடல் லாகிரி அடையாமல் தடுக்க இப்படிக் கழிவுப் பொருள்கள் வெளியேறுவது அவசியம். கழிவுப் பொருள் வெளியேறாததால் லாகிரி அடைவது

தான், உடல் கிழடு தட்டுவதற்கு முக்கியமான காரணம்.

மனம் சுறுசுறுப்பாய் வேலை செய்யவும் சூரியன் உதவுகிறது. பளிச்சென்று வெயில் எரிக்கும் நாள் இன்பப் பொன்னுளாகும். இருளைவிட ஒளியிலேதான் மக்கள் சிறப்பாய்ச் சிந்தனை செய்கிறுர்கள். பார்க்கும் கண் சூரிய ஒளியில் ஊக்கம் பெறுகிறது. இதுவே கருத்துக்கு வேகம் தந்து, தெளிவாய்த் திறமையாய்ச் சிந்திக்கச் செய்கிறது என்று தோன்றுகிறது. மனத் தத்துவ சாஸ்திரிகள் செய்த பல சோதனைகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

பளிச்சென்று பொன் வெயில் காயும் நாள், உணர்ச்சியில் ஆரோக்கியத்துக்கும் திறமைக்குங்கூட உதவுகிறது. வெயிலில் மக்கள் மகிழ்ச்சியா யிருக்கிறுர்கள். இன்ப மதுவைப்போல், உணர்ச்சியைப் பொன் வெயில் பதப்படுகிறது. வானம் கறுத்து மேகம் சூழும் போது, மக்களுக்கு என்னவோ ஒரு சோர்வு ஏற்படுகிறது. சூரிய ஒளி தோன்றி இருளைக் கிழித்தால், மக்களுக்கு உற்சாகம் பொங்குகிறது.

சில வருஷங்களுக்கு முன் லண்டன் டாக்டர் ஸேல்ஸ்பி என்பவர் 'சூரிய ஒளியும் ஆரோக்கியமும்' (ஸன்லைட் அண்ட் ஹெல்த்) என்று மிகவும் ரஸமான ஒரு புஸ்தகம் எழுதினுர். அறைக்குள் வளரும் செடிகள் 'க்ளோரஃபில்' என்ற பச்சை வர்ண அம்சத்தை உண்டாக்காது என்று அந்தப் புஸ்தகத்தில் அவர் சுட்டிக் காட்டுகிறுர். இதேபோல்தான் அறைக்குள் வளரும் குழந்தைகளின் ரத்தத்தில் 'ஹேமோகுளோபின்' என்ற அம்சம் நிறைந்திராது. சூரிய ஒளி பட்ட பசும்புல் தரையில் மேயும் பசுக்கள் தரும் பால், நிழல் புலத்தில் மேயும் பசுக்கள் தரும் பாலைவிட மிக உயர்வா யிருக்கும். உபயோகமற்ற மீன் எண்ணெய் (காட்லிவர் ஆயில்), பருத்தி எண்ணெய் (காட்டன்ஸீடு ஆயில்) இவற்றைக் கூடச் சூரிய ஒளியில் காயவைத்து உயர்வடையச் செய்யலாம். 'வெயில் எரிக்கும்போதே வைக்கோலைக் காய வை' என்ற ஆங்கிலப் பழமொழி, வெறும் சொல் அல்ல; விஞ்ஞான உண்மை பொதிந்த சொல். விலங்குகளும் செடி கொடிகளுமான சகல ஜீவன்களுடைய வாழ்க்கையிலும் சூரிய ஒளி பெரும் பணி புரிகிறது.

ஆரோக்கியத்துக்கும் க்ஷேமத்துக்கும் அவசியமான பலவிதமான வைட்டமின்கள், கனிப்பொருள்கள் இவையெல்லாம் உற்பத்தியாகச் சூரியன்தான் உதவுகிறது என்று சமீப கால வைத்திய ஆராய்ச்சிகள் மெய்ப்பித்து வருகின்றன. சூரியனிடமிருந்து வரும் கதிரியக்கத்தில் சில அலை நீளங்கள் (வேவ்லெங்த்) உள்ள சக்திக்கும், சில வைட்டமின்கள், சில கனிப்பொருள்கள் இவற்றுக்கும் மிக நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்தச் சம்பந்தம் உள்ள வைட்டமின்களும் கனிப்பொருள்களும் இளமை, ஆண்மை, ஆரோக்கியம் இவற்றைக் காப்பாற்றுகிறவை.

ஓர் உறுப்பில் சுரந்து ரத்தத்தில் கலந்து மற்றோர் உறுப்புக்குச் சென்று அதைத் தூண்டிவிடும் 'ஹார்மோன்'கள் என்ற பல விதச் சத்துக்களுக்கும் சூரிய ஒளிக்கும் உள்ள சம்பந்தத்தையும் இப்போது ஆராய்ந்து வருகிறுர்கள். சில வகை 'ஹார்மோன்'கள் உடல் ஆரோக்கியத்துக்கு மிக்க அவசியம் என்று இப்போது புலனுகி யிருக்கிறது. உடல் வலிமைக்கும் மனத் திறமைக்கும் தேவையான சில ஹார்மோன்களுக்குச் சூரிய ஒளி நிச்சயமாய் உதவுகிறது. நமக்கெல்லாம் நன்மை பயப்பது சூரியன்.

தன் பெயரில் மோகம்

ஜிம் ஃபார்லி என்ற அரசியல்வாதியை, ''உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?'' என்று ஒரு சமயம் நான் கேட்டேன்.

''கடின உழைப்பு'' என்றார் அவர்.

''சும்மா விளையாடாதீர்கள்.''

''பின்னே என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

''நீங்கள் பதினாயிரம் பேரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவீர்களாமே; அதுதான் உங்கள் வெற்றி ரகசியம்'' என்றேன்.

''பதினாயிரம் பேரையா? தப்பு, தப்பு; ஐம்பதாயிரம் பேரைப் பெயர் சொல்லி அழைப்பேன்'' என்று அரசியல்வாதி சொன்னார்.

அவருடைய இந்தத் திறமைதான், ஃப்ராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் ஜனாதிபதி பதவி அடையும்படி செய்ய அவரால் முடிந்ததற்குக் காரணம். ஃபார்லி புதிதாக யாரையாவது சந்தித்தால், அவருடைய பெயர், குடும்பம், தொழில், அரசியல் அபிப்பிராயம் சகலத்தையும் விசாரித்து அறிந்துகொண்டுவிடுவார்: அடுத்த தடவை அவரைக் காணும்போது, அவருடைய மனைவி குழந்தை குட்டிகளின் க்ஷேமத்தையெல்லாம்பற்றி ஆப்தமாக விசாரிப்பார். இதனால்தான் அவருக்கு மக்களிடம் பெருஞ் செல்வாக்கு ஏற்பட்டது.

சாதாரணமாக எந்த மனிதனுக்கும், உலகத்திலே உள்ள வேறு எந்தப் பெயரையும்விடத் தன் பெயரிலே பெருத்த மோகம். இந்த ரகசியத்தைத் தம்முடைய பத்து வயசிலேயே ஆண்ட்ரூ கார்னீஜி (பின்னால் கோடீசுவரரானவர்) கண்டு பிடித்துவிட்டார்.

ஸ்காட்லாந்தில் சின்னப் பையனாக இருந்தபோது, குழிமுயல் குட்டிகளை அவர் வளர்த்தார். ஆனால், உணவு தேடிப் போட அவரால் முடியவில்லை. அற்புதமான யோசனை ஒன்று அவருக்குத் தோன்றியது. ''இந்த முயல் குட்டிகளில் எதற்கு, எந்தப் பையன் புல், தழை முதலியவை பறித்துத் தீனி போடுகிறானோ, அதற்கு அந்தப் பையனுடைய பெயரைச் சூட்டிவிடப் போகிறேன்'' என்று அக்கம் பக்கத்துப் பையன்களுக்கெல்லாம் விளம்பரம் செய்தார்.

மந்திர ஜாலம்போல இந்தத் தந்திரம் வேலை செய்தது. கார்னீஜி இதைப் பின்னால் ஒரு நாளும் மறக்கவில்லை.

—டேல் கார்னீஜி, 'நண்பர்களைப் பெறுவது எப்படி?'

துருவப் பிரதேசத்தில் வாழும் எஸ்கிமோக்கள்
இந்தக் கலையில் மிக வல்லவர்கள்.

வெள்ளைக்கரடி வேட்டை

ஜேம்ஸ் நிக்கோல்

ஆறு மணி நேரம் துரத்திச் சென்றுங்கூட நானுக் என்ற துருவப் பிரதேசத்துக் கரடி ஆர்க்டிக் பனிக்காட்டில் புகுந்து எங்கள் கையில் அகப்படாமல் இருந்தது. எங்களுடன் வந்த மூன்று எஸ்கிமோக்களில் ஒருவன் ஜேம்ஸ் இக்புகாவுக்; அவனுக்கு வயசு 28. அவன் சற்று முன்னதாகப் போய்விட்டான்; 200 அடிக்கு அப்பால் அந்தக் கரடி மெதுப்பனியில் தடுமாறிக்கொண்டிருந்தது. பனியில் செல்லும் ஸ்லெட்ஜ் என்ற வண்டியில் துப்பாக்கி இருந்தது. ஜேம்ஸ் அதை எடுத்து இரண்டு முறை சுட்டான். துப்பாக்கி ரவைகள் இரண்டும் (கரடி) நானுக்கின் மண்டைமேல் போய்ப் பட்டு எகிறின.

பரபரப்பில் ஜேம்ஸ், சீல் என்ற பிராணியைச் சுடும் லேசான துப்பாக்கியை எடுத்துக்கொண்டு விட்டான். சீல் தலை மென்மையானது; அதில் எளிதில் அந்த ரவைகள் பாய்ந்துவிடும். ஆனால் கரடி சுட அந்தத் துப்பாக்கியை வைத்துக் கொண்டால் நடக்குமா? கரடியோ சீறிக்கொண்டு அவனைத் தாக்க வந்தது. ஜேம்ஸ் சுட்டுக் கொண்டே இருந்தான்.

தன் பெரிய தலையை ஆட்டி உறுமிக்கொண்டே மெதுப் பனியிலிருந்து கடல் உறைந்து கெட்டியான திட்டில் வந்து சேர்ந்தது. ஜேம்ஸ் நாலாந் தடவையும் ஐந்தாந் தடவையும் சுட்டான். மூன்று தரம் குறி பிசகிவிட்டது. அதோடு துப்பாக்கியில் இருந்த ரவைகளும் தீர்ந்துவிட்டன.

ஜேம்ஸைத் தாக்க வந்துகொண்டிருந்தது கரடி. ஜேம்ஸின் வேட்டை நாய்கள் இரண்டு அதன் மேல் பாய ஓடின. ஸ்லெட்ஜ் இருக்கும் இடத்திலிருந்து 20 அடி தூரத்தில்தான் இருந்தது கரடி. பிறகு பின்னங் காலில் நின்றுகொண்டு முன்னங்கால் நகத்தை நீட்டிக்கொண்டு பயங்கரமாக உறுமிப் பாய வந்தது. நாய்கள் அதைச் சுற்றி வட்டமிட்டன.

ஜேம்ஸின் மனைவி மேரிக்கு 18 வயசு இருக்கும். கூச்சமுள்ள பெண். இருந்தாலும், அவளால்தான் அன்று எல்லாரும் உயிர் தப்பினார்கள். அவள் ஸ்லெட்ஜ் வண்டிக்குப் பின்னால் குதித்துச் சாமான் கட்டிலிருந்து வலிமையான பெரிய துப்பாக்கியை எடுத்துக் கொடுத்தாள்.

ஜேம்ஸ் இரண்டு தரம் சுட்டான்; ஒரு தரம் அதன் மூளையிலும் இன்னொரு தரம் அதன் தோளிலும் சுட்டான். கரடியை அவன் வேட்டையாடிக் கொன்றது அவன் வாழ்நாளிலேயே இது 18-ஆம் தடவை. அதற்குப் பத்து வயசு இருக்கும். அதன் உடல் சுமார் 900 ராத்தல் கனம். பால்



காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை
(ஆங்கிலம்: 29-12-'57), கல்கத்தா.

நுரை போன்ற அதன் தோல் 9 அடி நீளத்துக்கு இருந்தது.

அப்புறம் ஜேம்ஸ் அதன் மேல் தோலே எனக்கு விற்றுவிட்டான். இருந்தாலும், அதற்குமுன் என்னைத் தேடிக்கொண்டு அழைத்துப் போக வரவேண்டி யிருந்தது. இந்த வேட்டை காரணமாக ஒரு நாள் இரவு முழுவதும் கரடியைக் கொன்ற இடத்துக்கு 20 மைல் தள்ளிப் பனிக் குவியலில் தன்னந் தனியே நான் திண்டாட வேண்டி யிருந்தது. பூஜ்யம் டிகிரியிலிருந்து 40 டிகிரி கீழே என்ருல், பாருங்கள்!

ஸ்காட் இ. அலெக்ஸாண்டர் என்ற நண்பர் கூட்டாளியாக இந்த வேட்டைக்கு என்னுேடு வந்திருந்தார். ராயல் கனேடியன் விமானப் படையில் ஒரு பகுதியின் தலேவரும், ஆர்க்டிக் பகுதியில் நடக்கும் விமானப் பயிற்சிக் கூடம் ஒன்றின் அதிகாரியுமாக இருந்தார் அவர். அன்று இரவு முழுவதும் அவர் நெருப்பே இல்லாமல் சில்லென்றிருக்கும் ஒரு கூடாரத்தில் ஒடுங்கிக் கிடந்தார். ஸ்லெட்ஜி லிருந்து விழுந்ததால், நன்ருய்க் காயம் பட்டுவிட்டது.

ஸ்லெட்ஜ் இழுக்கும் நாய்கள் ஐந்தும் எங்களேவிட ஒரு விஷயத்தில் அதிருஷ்டசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும்; அவை தங்களேக் கட்டியிருக்கும் சீல் தோலினுல் ஆன வார்களேயாவது தின்றன? எங்களுக்கோ அதுகூட இல்லே.

இருந்தாலும், எஸ்கிமோக்கள் துருவப் பிரதேசக் கரடியைக் குளிர்காலத்தில் வேட்டையாடுவார்கள் என்று கேள்விப்பட்டிருந்தோமே, அன்று இதை நேரிலே பார்த்தோம். நாங்களும் அந்த வேட்டையில் அதற்கு ஏற்ற வலிவுள்ள நாய்களுடன் கலந்து கொண்டோம். சில சமயம் பனிச் சரிவில் ஸ்லெட்ஜ் புரள, பனித் திம்மைகளின் மேல் தாவிக் கொண்டு இந்த நாய்கள்தான் எப்படி ஓடின தெரியுமா?

சட்டப்படி எஸ்கிமோக்கள் தான் துருவப் பிரதேச கரடியைக் கொல்லலாம்; ஆகவே, குளிர் காலம், கோடை இரண்டிலும் எஸ்கிமோக்கள் வேட்டையாடுவது வழக்கம். கோடையில் படகிலே ஏறி அவர்கள் வேட்டையாடுவார்கள். மிதக்கும் பனிப்பாளத்தில் தங்கியிருக்கும் கரடியை இப்படித் துரத்தும்போது, அது அவர்களிடமிருந்து தப்புவதற்காக நீரில் குதித்து நீந்தியாக வேண்டியிருக்கிறது. ஆனுல் நீரிலே அது நிதானமாகத்தான் போக முடியும். குளிர் காலத்திலோ நிலேமை கரடிக்குச் சாதகமாக இருக்கிறது. பெண் கரடி எங்கோ தொலேவில் பனிக்குள் உணர்வற்றுக் கிடக்கும். ஆண் கரடி இஷ்டம் போல் திரியும்; அப்போது அது காற்றையும்விடக் கடு வேகமாக ஓடும்.

உண்மையிலேயே அது தனிக் காட்டு ராஜாவாக இருக்கத் தகுதி உடையது. மரமே இராத ஆர்க்டிக் பிரதேசத்திலும் அந்தக் குளிர்காலத்தில் கரடிக்கு மறைந்து ஒளியக் காடு உண்டு: மெதுப்பனி, பனிக்கட்டி இவைகளால் ஆன காடுதான் அது. இங்கே மனிதர்கள் வருவதே அபூர்வம்; இந்த இடத்தை யாரும் நெருங்கவே மாட்டார்கள். இந்தக் காட்டுக்குப் 'பாக் - ஐஸ்' (அடுக்குப் பனி) என்று பெயர். மைல் கணக்கில் குவியல் குவியலாகவும், குன்று போலவும் புதர் போலவும் ஆர்க்டிக் பிரதேசத்தில் இந்த 'அடுக்குப் பனி'க் காடு அங்கங்கே உறைந்து கிடக்கிறது - எங்கும் இப்படி இந்த உறைபனியும், நடுநடுவே ஏமாந்தால் சேறுபோல் ஆளேயே அமுத்திவிடும் படுமோசமான மெதுப்பனியும் குவிந்திருக்கும்.

கரடி இந்த மாதிரி ஒளிந்து கொள்ள வசதியாக இருக்கும் இடத்தில் எஸ்கிமோக்கள் அதைப் பிடிப்பதென்ருல், உடனடியாக அதைத் தீர்க்கத் துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொண்டு இருக்கவேண்டும்; வேட்டை நாய்களே ஏவிவிடுவதிலும் நிபுணராக இருக்க வேண்டும்; மானேப்போல் துள்ளி ஓடும் திறமையும், சாய்ந்து விழாமல் சமாளித்து 30 அடி நீளமுள்ள சாமான் ஏற்றிச் செல்லும் கனமான வண்டியை லாகவமாகக்

கைவண்டி போல் தள்ளும் சாமர்த்தியமும் வேண்டும்.

பீட்டர் கின்மியுக் என்பவன் தான் இந்த எஸ்கிமோ வழிகாட்டிகளுள் தலைமை வகிப்பவன். 31 வயசு இருக்கும். அவன் அட்மிரால்டி தீவைச் சேர்ந்தவன். ஆசாமி மிகவும் சுறுசுறுப்பு. 9 அடி 3 அங்குல உயரந்தான்; அவன் 29 கரடிகளைக் கொன்றவன் - 12 வயசில் முதல் கரடியைச் சுட்டுக் கொன்றவன்! எங்களோடு ஒரு சமயம் வந்திருந்தபோது, ஏழு மைல் பனியில் ஓடிக் கையை ஊன்றி இரண்டு தரம் எகிறிப் பல்டி போட்டுக் காட்டினன்.

நாங்கள் இந்தத் தடவை கேம்பிரிட்ஜ் விரிகுடாவில் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டோம். நாங்கள் இப்போது அங்கிருந்து 180 மைல் தொலைவில் உள்ள ஒரு தீவில் இருந்தோம். ஆர்க்டிக் பகுதியில் ராயல் கனேடியன் விமானப் படையினர் நடத்தும் பயிற்சிக் கூடத்தில் சேர்ந்திருந்தேன். அப்போது என் நண்பர் அலெக்ஸாண்டர் விடுமுறைக்காக அங்கே வந்திருந்தார். ஆர்க்டிக் பகுதியில் தங்கும்போது இரண்டு வகைக் கூடாரங்கள் அமைத்து அவற்றில் சமாளிக்க முடிகிறதா என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்பது அவர் விருப்பம்.

ஆர்க்டிக் பகுதியில் போலீஸ் உத்தியோகஸ்தராக இருந்தவர் அவர். இதனல் அவருக்கு எஸ்கிமோ மொழி தெரியும்; எஸ்கிமோ ஷிகாரிகளோடும் பழக்கம் உண்டு. ஒரு நாள் இரவு எங்களுக்குப் பயிற்சி அளிக்கும் எஸ்கிமோக்களுக்கு டீ பார்ட்டி ஒன்று வைத்தோம். அப்போது கின்மியுக் எங்களைக் காணவந்தான். அந்தத் தீவுக்கு அருகில் கரடியின் காலடிச் சுவடு ஏராளமாய்த் தென்படுவதாக அவன் தெரிவித்தான். சற்று வடக்குப் புறமாக மக்ளிண்டக் கால்வாய் கடலோடு கலக்கும் இடங்களில் கரடிகள் இரை தேடுவது வழக்கம்.

அலெக்சாண்டரையும் என்னையும் பார்த்து, "நீங்கள் உங்கள் வேட்டை நாய்களையும் அழைத்துக் கொண்டு என்னோடு வந்தால், கரடி வேட்டைக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றுன் கின்மியுக். நாங்கள், "சரி; புறப்படலாம்" என்றோம்.

உடனேயே கிளம்பத் தயாராகிவிட்டார் அலெக்ஸாண்டர். அங்கிருந்த எஸ்கிமோ நண்பர்களிடமிருந்து அதற்கு வேண்டிய உடுப்பு முதலியவற்றை வாங்கிக்கொண்டேன். அலெக்ஸாண்டரின் இரண்டு வகைக் கூடாரம், தூங்கும் பைகள், ஸ்டவ்கள், பெட்ரோல், டப்பியில் அடைத்த உணவு, ரொட்டி, உலர்ந்த மீன், நாய்களுக்குச் சீல் மாமிசத் துண்டுகள் எல்லாவற்றையும் தயாராக எடுத்து வைத்துக்கொண்டோம்.

11 நாய்கள் ஜதையாகவும் மூன்ருகவும் பூட்டிய ஸ்லெட்ஜில் ஏறிக் கின்மியுக்குடன் காலையிலே புறப்பட்டோம். கின்மியுக் மிகவும் பெருமையோடு முதலில் இருந்த நாய்க்குப் பின் மூன்ருவதாகப் பூட்டியிருந்த நியாகோனுக் என்ற நாயைக் காட்டி, "அது மிகவும் கெட்டிக்கார நாய்; கரடியை நிச்சயமாகக் கண்டு பிடிக்கிறது பாருங்கள்!" என்றுன்.

கரடி இருக்கும் இடத்துக்குப் போய்ச் சேர ஐந்து நாட்கள் (நாலு இரவு) ஆயின. பூஜ்யம் டிகிரிக்குக் கீழே 38 டிகிரி இருந்த இடத்தில் தான் வெப்பம் என்று கொஞ்சமாவது உணர முடிந்தது. 51 டிகிரி இருந்த இடங்களிலோ குளிர் நடுக்கி எடுத்தது. கடல் பனியின் மேல் தான் பெரும்பாலும் போனேம். ஆர்க்டிக் கடல் பிரதேசம் எது, விக்டோரியா தீவில் மரம் இல்லாத துந்த்ரா பகுதி எது என்று கண்டுபிடிக்க முடியாதபடி இருந்தது. கடைசியில் அடுக்குப் பனி (பாக் - ஐஸ்) தவிர விநோதமான பல உருவங்களில் ஏதோ அங்கங்கே தென்பட்டது.

"ஐஸ்பெர்க்கு (பனிக் குன்று) கள் இங்கே இருக்க நியாயம் இல்லை. கிழக்கே கிரீன்லாந்திலே உச்சிப் பனியிலிருந்து வழிந்து உண்டாவது போல், கிளேஸியர்களிலிருந்து தோன்றும். மேற்கு ஆர்க்டிக்கில் இப்படி இராதே!" என்று

அலெக்ஸாண்டர் சொன்னார். இருந்தாலும், இப்படி எத்தனையோ பனிக் குன்றுகளைக் கடந்துதான் சென்றோம். பல பெரிய பெரிய பனித் தீவுகளையும் பார்த்தோம்.

முன்னெல்லாம் பல பனி மேடுகளில் ஏறிப் போயிருக்கிறேன்; ஆனால், இந்த ஆர்க்டிக் கரையில் இருப்பது போல் 60 அடி உயரமும் கண்ணுக்கு எட்டின மட்டும் விக்டோரியா ஜலசந்தியிலிருந்து க்வீன் மாட் வளைகுடா வரையில் பரந்தும் உள்ள மேட்டைப் பார்த்ததில்லை.

அட்மிரால்டி தீவுக்குப் போய்ச் சேர்ந்ததும், கின்மியுக்கின் கூடாரத்தில் சில் கொழுப்பைப் போட்டுத் தீமூட்டிக் குளிர் காய்ந்தோம். மேலே காற்றுக்குப் பாதுகாப்பாகப் பனிக் கட்டி வைத்து அடுக்கியிருக்கும் சாதாரணக் கூடாரந்தான் இது; இருந்தாலும், எஸ்கிமோக்களைப் பொறுத்த வரையில் இது தாராளமான இடந்தான். ஏனென்றால், இதன் தரை மரத்தால் ஆனது; படுக்க வசதியான அமைப்பும் உண்டு. இந்த இடத்தில் 15 எஸ்கிமோக்கள் வாழ்கிறார்கள். அவர்களோடு பேசி மறுநாள் வேட்டைக்குப் புறப்பட ஏற்பாடு செய்தோம்.

ஒவ்வொன்றிலும் பத்து முதல் பதின்மூன்று நாய்கள் வைத்துக் கொண்ட மூன்று கோஷ்டிகளாகக் கிளம்பினோம். ஸ்லெட்ஜ் வண்டி ஓட்டிச் செல்லும் ஒவ்வொருவனிடமும் நியாகோனுக் போன்ற வேட்டை நாய்கள் இருந்தன. இந்த வேட்டை நாய்கள் கரடி எங்கிருக்கிறது என்று மோப்பம் பிடித்து, தொடர்ந்து போய் அதைத் தாக்குவதற்கென்றே பழக்கியவை. இவை அந்த அந்தக் கோஷ்டியின் முன்னணியில் புறப்பட்டுப் போகும். நாங்கள் பின்னால் லேசான ஸ்லெட்ஜில் போனோம்.

ஜேம்ஸ் இக்புகாவுக்கும் அவன் மனைவியும் முதல் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் அங்கங்கே கரடியை மடக்கும் பொறி அமைத்த இடங்களைப் பரிசோதித்துவிட்டு நாங்கள் புறப்பட்ட இடத்திலிருந்து 12 மைலில் தொடங்கும் 'பாக் - ஐஸ்' (அடுக்குப் பனி) எல்லையை நோக்கிப் போக வேண்டியிருந்தது. ஆகவே, எங்களுக்கு ஒரு மணி நேரம் முன்னால் காலை எட்டு மணிக்கே அவர்கள் புறப்பட்டு விட்டார்கள்.

இரண்டாம் கோஷ்டியில் நாய்களை ஓட்டிச் சென்றவன் சிரில் மாலா என்ற எஸ்கிமோ. அழகிய வாலிபன்; வயசு 29 இருக்கும். அலெக்ஸாண்டரும் அவனோடு தான் போனார்.

மூன்றும் கோஷ்டியில் நாய்களைக் கின்மியுக் ஓட்டிக்கொண்டு சென்றான். அதில் இருந்தேன் நான். கின்மியுக்கும் மாலாவும் போட்டி போட்டுக்கொண்டு போனார்கள். இப்படி ஏழெட்டு மைல் போயிருப்போம். நியாகோனுக் கரடியை மோப்பம் பிடித்து விட்டது.

நாய்கள் பறந்தன என்றுதான் சொல்ல வேண்டும். இன்னும் நாங்கள் சம தரையில்தான் இருந்தோம். மாலாவும் கின்மியுக்கும் தம் ஸ்லெட்ஜ் வண்டியிலே எழுந்து நின்றுகொண்டு கரடியைத் துரத்தலானார்கள். ஆனால் அதைப் பிடிக்க முடியும் என்று தோன்றவில்லை. அப்போது மாலா ஓவென்று கூவிக் கையை வெறி பிடித்தவன்போல் ஆட்டினான். கரடியோ நாலு கால் பாய்ச்சலில் ஓடியது.

அப்புறம் அலை அலையாகப் பனிக் காடுதான். முதல் அடுக்கு எங்கள் ஸ்லெட்ஜிலுள்ள குறுக்குக் கட்டை இரண்டைக் கீழே உருட்டி அடித்துவிட்டது. இரண்டாம் அடுக்குப் பின்னும் மூன்று குறுக்குக் கட்டைகளைச் சிதற அடித்தது. இருந்தாலும், கின்மியுக் பயணத்தை நிறுத்தவில்லை. அவனால் அப்படி நிறுத்தவும் முடியாது. ஏதோ சாமர்த்தியமெல்லாம் காட்டி ஸ்லெட்ஜைப் பத்திரமாகவும் நேராகவும் இருக்கும்படி பார்த்துக் கொண்டான். அதை நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டும் போனான். ஸ்லெட்ஜில் குலுக்கி உலுக்கிப் போட நாங்கள் சென்றோம். அவனே அடிக்கடி குதித்து ஆடிக்கொண்டு இழுத்துப் பிடித்

தும், விட்டும் ஸ்லெட்ஜ் ஓட்டி னுன்.

மாலாவின் நாய்கள் முன்னுல் போய் நின்றன. அதன் பின்னே நாங்கள் நின்ருேம். கொஞ்ச நேரம் எல்லாம் சரியாகத்தான் இருந்தன. கரடி எங்கோ பள்ளத் தாக்கின் இடுக்கிலிருந்து கிளம்பிப் பனித் திட்டுக்களில் ஓடத் தொடங் கியதும் எங்களிடம் இருந்த நாய்கள் அதைத் துரத்தலாயின. மலையாடுகள் ஓடுவதுபோல் இருந்தது அந்தக் காட்சி. அப்புறந்தான் விஷயம் எவ்வளவு சிரமமானது என்று தெரிந்தது.

மாலாவின் ஸ்லெட்ஜ் பனிச் சரிவில் கீழ் நோக்கி ஒரு பக்கமாக வெகு வேகமாய்ப் போய்க்கொண் டிருந்தது, நாய்களையும் மிஞ்சிக் கொண்டு. நாய்களோ இன்னெரு புறமாக இழுத்தன. ஆனுல் நாய்கள் சமாளிக்க முடியாமல் அப்படியே எழும்பி அந்தரத்தில் நிற்கும்படி யாகிவிட்டது! ஸ்லெட்ஜ் கவிழ்ந்து அலெக்ஸாண்டரைத் தூக்கி வாரி அடித்தது; பின்னுலேயே எங்கள் ஸ்லெட்ஜ் வந்து அவர் மேல் தாக்கியது. ஸ்லெட்ஜின் முன் பகுதி இப்படித் தாக்கியதும், அவர் சற்றுத் தள்ளி உருண்டு விழுந்தார். அவர் கால் முறிந்து விட்டது என்று நிச்சயமாகப் பட்டது எனக்கு. இதில் அதிசயம் என்னவென்ருல், எஸ்கிமோக்கள் எவ்வளவு பரபரப்புற்றும் இந்தக் கலவரத்தைப் பார்த்துக் கலங்கவே யில்லை. அவர்கள் கரடி மேலேயே கண்ணுக இருந்தார்கள். துப்பாக்கி யால் மூன்று நான்குதரம் சுட்டார் கள். கரடி எங்கோ மறைந்து விட்டது.

கின்மியுக்கும் மாலாவும், அலெக் ஸாண்டருக்கும் எனக்கும் அந்த அந்தக் கோஷ்டியின் நாய்களைக் கவ னித்துக்கொண்டு அங்கேயே தங்கி யிருக்கும்படி ஜாடை காட்டிவிட் டுப் பனிக் காட்டுக்குள் புகுந்தார் கள். மணி பகல் 11 - 30 இருக்கும்.

ஒரு மணி நேரத்துக்கெல்லாம் மாலா ஸ்லெட்ஜை விட்ட இடத் துக்குத் திரும்பினுன். அவனுக்கு இங்கிலீஷ் பேசத் தெரியாது. அலெக்ஸாண்டரைப் பார்த்து எஸ்கிமோ மொழியில், "எங்கள் இரண்டு பேராலும் அதைச் சுட முடியவில்லை. அதை மெதுப் பனியில் விரட்டி விட்டோம்; அவ்வளவுதான் முடிந்தது. பின்னுல் நிதானமாக அதைக் கொல்லத் தான் போகிருேம். அப்போது அதைக் கொண்டுவர ஸ்லெட்ஜ் வேண்டியிருக்கும். எப்படி இருந் தாலும் நாங்கள் இங்கே வந்து சேர்ந்துவிடுவோம்" என்ருன். மாலை 4 மணிக்கு, அங்கே இருப்ப தற்குள் உயரமான பனி மேட்டில் நாங்கள் ஏறிப் பார்த்தோம். ஷிகாரிகள் இருக்கும் சுவடே காணவில்லை. எங்களுக்கு ஒரே திகிலாக இருந்தது. அலெக்ஸாண் டர் கைக்குக் காவலாக ஸ்லெட் ஜிலே கிளேஸியரில் தங்குவதற் குரிய கூடாரத்தைக் கட்டிக் கொண்டு வந்திருந்தார்.

அதே சமயம் பனிக் காட்டின் இன்னெரு பகுதியில் ஜேம்ஸ், கரடியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்தான்; இது எங்களுக் குத் தெரியாது.

கரடி தப்பிச் சென்ற பிறகு, கின்மியுக்கும் மாலாவும் சேறு போன்ற மெதுப்பனியில் பல சந்து பொந்துகளில் குத்திக் குடைந்து பார்த்ததும் அவர்களுக்கு அலுத்துச் சலித்துவிட்டதும் எங்க ளுக்குத் தெரியாது; அவர்கள் நாய்களும் களைத்து ஓய்ந்துவிட் டன. இருட்டி வந்ததால் பனிக் காட்டில் வழி செய்துகொண்டு திரும்ப வேண்டியதுதான். அவர் களும் நேராக விடுதி திரும்பினுல் போதும் என்ற முயற்சியில்தான் ஈடுபட்டிருந்தார்கள். நாங் களும் எப்படியாவது விடுதிக்கு வந்து சேர்ந்துவிடுவோம் என்று தான் அவர்கள் எண்ணினுர்கள்.

இரவு மணி 11 இருக்கும். முகாம் போட்டிருந்த இடத்துக்குப் போய்த் துணைக்கு யாரையாவது அழைத்து வரவேண்டும் என்றேன். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பூஜ்யம் டிகிரிக்குக் கீழே 40 டிகிரி யில், உடம்பிலே உஷ்ணம் வர வழைத்துக் கொள்வதென்ருல், ஸ்லெட்ஜ் வண்டியின் பின்னுல் ஓடவேண்டும். பனிக் காட்டிலோ,

நடந்தால்தான் உடம்பில் உஷ்ணம் பிறக்கும். எங்கள் கூடாரத்தைச் சுற்றி மேடிட்டிருந்த பனிக்குவியலை விலக்கிவிட்டேன். 'ஆனாலும், இந்தச் சக்தியை நல்ல முயற்சியில் ஈடுபடுத்தினால் என்ன?' என்று பட்டது.

விடுதிக்குப் போய்ச் சேர நாலு மணி நேரம் - அதிகமாகப் போனால் ஐந்து மணி நேரம்-ஆகும் என்று தோன்றியது. எங்கும் அமைதியாக இருந்தது. ஆகாயம் தெளிவாக இருந்தது. நிலா பளிச்சென்று வீசியது. பனியில் ஸ்லெட்ஜ் வந்த சுவட்டைத் தொடர்ந்து போக முடியாதா என்றுதான் எண்ணினேன்.

அதே மாதிரிதான் இரண்டரை மணி நேரம் தொடர்ந்தும் போனேன். அந்த முயற்சியில் அதிகமாக ஈடுபட்டிருந்ததால் சந்திரனை மேகம் மூடிக்கொள்வதை நான் கவனிக்கவில்லை. மணி 1-30 இருக்கும்; சட்டென்று வந்த மேக மூட்டத்தால் இருட்டிவிடவே, வழியே தெரியவில்லை. மணி 2 இருக்கும். நான் எங்கே இருக்கிறேன் என்றே புரியவில்லை. எனக்குத் திகில் மூண்டது. ஆகவே, பொழுது விடிகிற வரையில் அங்கேயே இருப்பது என்று தீர்மானித்தேன்! எப்படியோ சமீபத்தில் இருக்கும் பழக்கமான இடத்துக்கு மெதுவாகவும் அழுத்தமாகவும் கால் வைத்து நடந்தேன். மூன்றரை மணி நேரம் இப்படி அந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தேன். கரடியின் காலடிச் சுவட்டை விட என் சுவடு ஆழமாகப் பதிந்திருந்தது. சூரியோதயம் ஆயிற்று. சட்டென்று வழி தப்பிவிட்டது போலவே, விரைவில் அதைக் கண்டுகொண்டும் விட்டேன்.

எனக்கு ஒரே சோர்வாக இருந்தது. கடினமான பனியை விலக்கிக் கொண்டு போய்ச் சேரப் பின்னும் மூன்று மணி நேரம் பிடித்தது. சற்று நேரத்துக்கெல்லாம் ஜேம்ஸ் இக்புகாவுக்கின் நாய்களுடன் அந்தக் கோஷ்டி தென்பட்டது. கின்மியுக்கும் அங்கே இருந்தான்.

எனக்கோ எஸ்கிமோ மொழி பேசத் தெரியாது; அவர்களுக்கோ இங்கிலீஷ் பேசத் தெரியாது. ஆனால் கை ஜாடை காட்டிப் பரஸ்பரம் என்ன செய்கிறோம் என்று புரிந்துகொண்டு பாராட்டுத் தெரிவித்துக்கொண்டோம். கின்மியுக் பேசிக்கொண்டே என்னை அழைத்துக்கொண்டு போய்த் தன் விடுதியில் சேர்ப்பதாகத் தெரிவித்தான்.

இக்புகாவுக் அலெக்ஸாண்டரை எங்கள் விடுதிக்கு அழைத்துவர, கூடாரம் அடித்திருந்த இடத்துக்குப் புறப்பட்டான். அங்கே அலெக்ஸாண்டர் இருந்தார். விரைவில் கூடாரக் கயிற்றை அறுத்து அதை எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள். கயிறு கின்மியுக்கின் நாய்களை ஸ்லெட்ஜில் கட்டி இழுக்கப் பயன்பட்டது.

சிறுபான்மை வாக்கு

உண்மை எப்போதும், ஒரே ஒருவர் அடங்கிய சிறுபான்மையினர் வாக்கிலிருந்துதான் வெளிப்படுகிறது; ஒவ்வொரு வழக்கமும் முந்திய வழக்கம் ஒன்றை முறித்தெறிந்தே தொடங்குகிறது. —வில் ட்யூரண்ட்

எல்லாம் பழங்கதையே!

மனித வாழ்விலே இரண்டு மூன்று கதைகள்தான் உண்டு. ஆனால் அவை இதற்கு முன் ஒருபோதும் நடந்ததே இல்லைபோல் திரும்பத் திரும்ப வெகு உக்கிரமாய் எழுதப் பெற்று வருகின்றன!

—வில்லா கேதர்

விவேகானந்தரும் கலையும்

கி. சந்திரசேகரன்

> கலையின் வடிவம் யாது என்பதுபற்றிப் பல விமரிசகர்கள் பலவகையாகக் கூறியிருக்கிறார்கள். அது பற்றி விவேகானந்தரின் தெளிவான கருத்தை இங்கு அறியலாம். இதைத் தமிழில் தருபவரும், கலையின் நுட்பத்தை நன்றாக அறிந்தவர்.

கவி ரவீந்திரரைப்பற்றி எழுதுகையில், புகழ்பெற்ற கன்னட எழுத்தாளரான மாஸ்தி வேங்கடேச ஐயங்கார், ''கவிஞர் தமது ஒப்பற்ற கவிதைகளில் தமது கலையைப்பற்றி மட்டுமன்றி எல்லாக் கலைகளையும் பற்றிப் பேசுகிறார்; கலையைப்பற்றி மட்டுமல்லாமல் தத்துவம்-சமயம், பொருளாதாரம்-சமூக இயல், சரித்திரம்-விஞ்ஞானம் ஆகியவைபற்றியும் பேசுகிறார். அவர் இவற்றில் எதிலும் தம்மை இழந்துவிடவில்லை; ஆனால் ஒவ்வொன்றும் அவரிடத்தில் தனக்குரிய இடத்தைப் பெறுகிறது'' என்று பொருத்தமாகக் கூறியிருக்கிறார். உண்மையான கவிதையையும் சிந்தனையையும் சிறப்பாக அறிந்து பேசிய மொழிகளுள் இதைவிட யதார்த்தமான மொழியை யாரும் கவனித்திருக்க இயலாது. அற்புதமான கவிதைப் பரம்பரை நிலவும் இந்த நாட்டில், நம் முன்னோர்களின் பண்பாட்டில் ஊறிய எவரும் இவ்வாறு புகலுவது இயல்பே. ஏனெனில், கவி என்பவன் ஆழ்ந்த அகநோக்கும் பரந்த பார்வையும் கொண்டவன் என்பது மரபு.

சில சமயங்களில் ஸ்மிருதிகாரனுக்கு ஏற்ற உயர்ந்த அந்தஸ்தும் கவிக்குக் கிடைப்பதுண்டு. இவ்வாறு காளிதாசர், மக்களுக்குச் சட்டமியற்றிக் கொடுப்பவனுக்கும் மேலான பெருமையைப் பெற்றார். எனவே, கவி என்பவன் ஆன்மிக அநுபவத்தால் கிடைக்கக் கூடிய பேறுகள் யாவும் அமைந்தவனாக விளங்குகிறான். நமது நாட்டில் கவியோ, கலைஞனோ, தத்துவதரிசியாகவும் மகாத்மாவாகவும் ஆவது போலவே, ஒரு மகானும் எளிதில் கவியாவது இயல்பாக இருக்கிறது.

ஆகவே, அசாதாரணமான மேதையும் பல விஷயங்களில் பயிற்சியும் வாய்ந்த ஸ்வாமி விவேகானந்தர், தம் பிரதிபை அலைகள் உயர்ந்து வீசிய தருணங்களில், சாமானிய மக்களின் மனம் வியக்கக் கூடிய கருத்துக்களை வெளியிட்டதில் ஆச்சரியமில்லை. அந்தக் கருத்துக்களில் ஆழ்ந்த விமரிசன ஆற்றலும், சம்பிரதாயத்துக்கு மாறாக இருப்பினும் உன்னதமான செய்திகளை அறியும் பண்பும் அடங்கியிருந்தன. இந்தியக் கலையில் பொதிந்துள்ள பெருமைகளை இந்நாட்டவருக்கு எடுத்துக் கூற, ஆனந்த கே. குமாரசாமி போல் உள்ளவர்கள் ஆண்டுக்கணக்காகப் பாடுபட்டார்கள்; ஆனால் ஸ்வாமி விவேகானந்தர் தமது அற்புத

காப்பிரைட்: வேதாந்த கேசரி (ஆங்கிலம்: ஆகஸ்ட் '57),
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4.

வல்லமையினுல் அதே விஷயத்தை இரண்டொரு வாக்கியங்களில் விவரித்துவிட்டார். தமது கலைக்கே தாம் அயலார் ஆகிவிட்ட நம் நாட்டவர்களில் பலரை இந்தியக் கலை பெரிதும் பிரமிக்க வைத்திருக்கிறது.

கிழியிலுள்ள இயற்கைக் காட்சிகளையும் கோலங்களையும் காணவே கண்கள் விரும்புகின்றன. கலை வாழ்வைச் சித்திரிப்பது, வெறும் இயற்கையை அப்படியே காண்பிப்பதல்ல என்பதை அறிவது அரிதாக இருக்கிறது. மேலும் இயற்கை அனந்தமாக இருப்பதனுல், மனிதன் என்னதான் தன் கூரிய பார்வையையும் அநுகரண சக்தியையும் வளர்த்துக்கொண்டாலும் இயற்கையை அப்படியே காண்பிக்க முடியாது. கலை என்பது வாழ்வை லட்சியமாகக் கொள்வதல்ல; கலையை ரசிப்பவன், தான் வாழ்விலும் சுற்றுப்பட்ட இயற்கையிலும் புலன்களினுலும் கண்ணினுலும் அநுபவிக்கப் பழகிய பொருள்களைமட்டும் பாராட்டுவதோடு நில்லாமல், இதுவரையில் அவன் ஆழ்ந்து காணத் தவறிய அபூர்வப் பொருள்களைக் காணும்படியும் அவனைத் தயாராக்கிப் பக்குவப்படுத்துவது கலையின் செயலாகும் என்பதே நம் நாட்டுக் கலை விமரிசகர்களின் கருத்தாகும்.

கவிதையிலும் இலக்கியத்திலும் போலவே ஓவியத்திலும் சிற்பத்திலும் இசையிலும் புற வடிவம் மட்டுமே உண்மையான ரசிகனைத் திருப்திப்படுத்தாது; அவனுடைய ஆன்மாவில் நிறையப் புகுந்து, அவனுடைய அகத் தூண்டுதல்களை நிறைவேற்றக்கூடிய நிலையான மதிப்பும் நோக்கமும் அவற்றில் இருக்கவேண்டும். இந்தச் சிறப்பான தன்மைகள் அவன் உள்ளத்தில் ஊறி, புறக் காட்சிகள் அனைத்தும் அநித்தியமானவை என்று அவன் அவற்றை ஒதுக்கித் தள்ளி, கலை தத்துவம் விஞ்ஞானம் ஆகிய யாவும் எந்த உண்மையை அறிவுறுத்தப் பாடுபடுகின்றனவோ அந்த உண்மையை அவன் அறியும்படி செய்ய வேண்டும். டாக்டர் ஆனந்த கே. குமாரசாமி தம் கட்டுரைகள் பலவற்றில், ''வாஸ்தவத்தையும் தாதாத்மியத்தையும் அகக் கண்ணுல் காணும் அநுபவமே, இவ்வாறு சமயம், கலை என்ற பெயர்களைப் பெற்றிருக்கிறது'' என்று கூறுகிறுர்.

கலையைப்பற்றி ஹிந்துக்களின் சரியான கருத்து இதுதான் என்பதில் ஐயமில்லை. ஆன்மாநுபவம் குறைவாக உள்ள நாடுகளிலும் சிலர் இதே கருத்தைக் கொண்டிருக்கிறுர்கள் என்பதை நாம் காணும்போது, ஒரே லட்சியத்தை அடையும் முடிவான முயற்சிகளில் மானிட அநுபவம் எங்கும் ஒன்றுகவே இருக்கிறது என்று ஏற்படுகிறது. இந்த விஷயங்களைக் குறித்து அதிகமான சிந்தனையும் ஆராய்ச்சியும் பாரதநாட்டில் நடந்திருப்பதனுல், கலையின் ஆன்மாவைப் புரிந்துகொள்ள மிகவும் திட்டமான சிந்தனைப் போக்கு இங்கு உருவாகியிருக்கிறது என்று கூறலாம். கலையின் செயலைப் பற்றிய ரகசியத்தை மேல்நாட்டுச் சிந்தனையாளர்களும் கண்டு பிடித்திருக்கிறுர்கள். உதாரணமாக, காலஞ் சென்ற லார்டு ஆக்ஸ்போர்டின் அறிவாளி மனைவியான மார்காரட் ஆஸ்க்வித் என்னும் அம்மையார் தமது 'லே ஸர்மன்ஸ்' என்ற நூலில், இயற்கையைப் பின்பற்றுவது கலையின் நோக்கமல்ல என்பதை வன்மையாகக் கூறி, ''அது இயற்கையைப் பின்பற்றத்தான் வேண்டுமென்றுல், எதையுமே நகல் படுத்தாது விளங்கும் இயற்கையைத்தான் பின்பற்றட்டும்'' என்கிறுர்.

ஸ்வாமி விவேகானந்தர் தம் அறிவுரைகளுள் ஒன்றில் கலையைப் பற்றிய முதிர்ந்த கருத்துக்களைச் சகஜமாகக் கூறியிருக்கிறுர்:''கிரேக்கக் கலையின் ரகசியம், நுணுக்கமான விவரங்கள் உட்பட இயற்கையை உள்ளபடியே காண்பிப்பதாகும்; இந்தியக் கலையின் ரகசியமோ, லட்சியத்தை விளக்குவதாகும். ஒரு மாமிசத் துணுக்கைக் கிரேக்க ஓவியன் தத்ரூபமாக வரைந்து வெற்றி பெற்று விடுகிறுன்; ஒரு நாய் அதைக் கண்டால் உண்மையான மாமிசத்

துண்டு என்றே எண்ணி, அதன் மீது பாய்ந்து கவ்வுகிறது. வெறும் இயற்கையைப் பின்பற்றுவதில் என்ன பெருமை இருக்கிறது? அந்த நாயின் எதிரில் உண்மையான மாமிசத் துண்டையே ஏன் வைத்து விடலாகாது?'' என்று அவர் கூறுகிறார். கலை இயற்கையோடு சம்பந்தப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அதைக் கடந்திருக்க வேண்டும் என்பது அவர் கொள்கை. வேறு வகையாகச் சொன்னால், கலை என்பது புற வடிவங்களிலிருந்து வேறுபட் டிருக்கலாகாது; ஆனால் பார்ப்பவனுடைய ஆன்மாவுக்குப் போதிய உணவு கொடுக்கும் வல்லமை அதற்கு இருக்க வேண்டும். இதே கருத்தைப் பின்னும் விவரித்து, ஒரு சிற்பத்துக்கும் சாதாரணக் கட்டிடத்துக்கும் உள்ள வேற்றுமையை ஸ்வாமிகள் காண்கிறார். சிற்பம் ஒரு கருத்தை விளக்குகிறது; சாதாரணக் கட்டிடமோ பணத்தைக் கொண்டு மட்டுமே கட்டப்பட்டிருக்கிறது. சிற்பம் தன் வடிவினுலும் எழிலினுலும் சிந்தனையை ஊட்டுகிறது; கட்டிடமோ மக்களுக்கு வசதியையும் உபயோகத்தையுமே தருகிறது. இது போன்ற உதாரணங்களைக் கொண்டு, கலை என்பது புற வடிவங்களுக்கு அப்பாற் பட்டது என்பதே ஸ்வாமிகளின் கொள்கை என்று துணிந்து கூறலாம். கவிதை அல்லது இலக்கியத்தில் 'தொனி' இருப்பதனால் சாதாரண எழுத்துக்கும் அதற்கும் அடிப்படையான வேற்றுமை ஏற்படுகிறது; அது போலவே, வாழ்வின் தத்துவத்தைக் கூறுவதே கலையின் உண்மையான நோக்கம்; அதற்காகவே கலை வாழ்கிறது.

இந்தியக் கலை விமரிசகர்கள் கவிதையையும் இலக்கியத்தையும் ஆன்ம விளக்கத்துக்குச் சாதகமாகவே எப்போதும் கருதுகிறார்கள். நடையழகு வாய்ந்தவர்கள் எத்தனையோ பேர் இந்த நாட்டில் இருந்தபோதிலும் வெறும் சொற்கோவையின் அழகை இந்த விமரிசகர்கள் பாராட்டியதில்லை. ஸம்ஸ்கிருதத்தில் உயர்ந்த வசனத்துக்கு எடுத்துக் காட்டாகப் பதஞ்சலியின் மகா பாஷ்யத்தைப் போற்றிய ஸ்வாமிகள், கலையின் அங்கமான நடையழகைப் புறக்கணிக்கவில்லை. தம் சிஷ்யரான சரத்சந்திரருக்கு அவர் ஆசி கூறி எழுதிய கடிதம், அவருடைய நிர்மலமான நெஞ்சத்தை வெளிப்படுத்துவதுடன், உயர்ந்த கலைக்குரிய நடை அழகையும் பெற்றுள்ளது.

ஸ்வாமியின் கவிதைகள் யாவற்றிலுமே ஆன்ம சக்தியை விளக்கும் பண்பு இருக்கிறது. கவிதையாக்க வேண்டும் என்ற முயற்சி செய்யாமலே அவர் அநாயாசமாக நம்மை உயர்ந்த கவியுலகில் அழைத்துச் செல்கிறார். 'நீலோற்பலம்' என்ற அவருடைய ஆங்கிலக் கவிதையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அந்தப் பூவின் மலர்ச்சி, மணம், எவரும் கேளாமலே அது தன் மணத்தைப் பரப்புவது ஆகிய யாவும் கவிஞரின் அகக் காட்சியை வெளிப்படுத்துகின்றன. ஸ்வாமிகளின் அத்துவைத அநுபவந்தான் இந்த மலரை, ஒரு சமூகச் சீர்திருத்தக்காரரை வரவேற்பது போலவே, பாராட்டி வருணிக்கக் காரணமாக இருந்ததுபோலும். இந்தக் கவிதை அரிய இனிமையினுலும், மென்மையான கருத்துக்களாலும் நம் மனத்தை உயர்த்துகிறது.

தமது அகாதமான ஆன்மாநுபவ வெள்ளத்திலிருந்து மாந்தருக்குச் சிறந்த கவிதைகளை அளிக்கும் வல்லமை ஸ்வாமிகளுக்கு இருந்தது. ஆன்மாவின் விழிப்பை, பனி பொழியும்போது இதழ் விரியும் ரோஜா மலர்களுக்கு அவர் அடிக்கடி ஒப்பிடுவது, எங்கும் கடவுளுடைய படைப்பு ஒன்றுக இருப்பதை விளக்குகிறது. ஆன்மாவோடு சம்பந்தப்படும்பொழுது எல்லா அநுபவங்களும் ஒன்றுகவே இருக்கின்றன என்ற நம் நாட்டுப் பழமையான கொள்கையை அவருடைய நூல்கள் உறுதிப்படுத்துகின்றன.

உண்மையான கலையில் எளிமையும் சொற் சிக்கனமும் வேண்டும். இவை விவேகானந்தரின் இலக்கியத்தில் நன்கு பொதிந்திருப்பதை ரசிகர்கள் காணலாம்.

ராஜஸூயம்

★

காண்டவதகனத்துக்குப் பிறகு பகவான் கிருஷ்ணருடைய உத்தரவின்பேரில் மயன் பாண்டவருக்கு இந்திரப்பிரஸ்தத்தில் அழகிய சபை ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்தான். கிருஷ்ணர் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு துவாரகை சென்றார். புதிய சபையில் பிரவேசித்த தர்மரைப் பார்த்து க்ஷேமம் விசாரிப்பதற்காக நாரத முனிவர் வந்தார். முனிவர் அரசனுக்கு ராஜநீதியை உபதேசித்தார். இந்திரன், யமன், வருணன், குபேரன் முதலியோருடைய சபையைப்பற்றி வர்ணித்தார். ராஜஸூய யாகம் செய்ததால் ஹரிச்சந்திரன் இந்திர சபையில் பெருமையுடன் வீற்றிருப்பதைக் குறிப்பிட்டார். மேலும், யம சபையில் இருக்கும் பாண்டு மகாராஜன் தர்மனை ராஜஸூய யாகம் செய்யும்படி கூறி அனுப்பியதையும் தெரிவித்தார். பிறகு அரசரிடம் அனுமதி பெற்று நாரதர் சென்றார்.

தர்மர் ராஜஸூயம் செய்வதைப் பற்றிச் சகோதரர், மந்திரிகள், நண்பர்கள் எல்லாரிடமும் கலந்து ஆலோசித்தார். தீர்மானம் செய்வதற்காகத் துவாரகைக்குத் தூதனை அனுப்பிக் கிருஷ்ணரை அழைத்து வந்தார். கிருஷ்ணரை வரவேற்று உபசரித்தார். கிருஷ்ணருக்குக் களை தீர்ந்த பிறகு அரசர், ''நான் ராஜஸூயம் செய்ய விரும்புகிறேன். ராஜஸூயம் செய்தால் அல்லவோ சக்கரவர்த்தி ஆகலாம்? பல நண்பர்கள் என்னை இந்த யாகத்தைச் செய்யும்படி தூண்டினார்கள். உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்டுத்தான் தீர்மானம் செய்யப்போகிறேன். பலர் பலவாறு தம் மனப்போக்குப்படி கூறுவார்கள். நீங்கள் ஒருவர்தான் காம, குரோதங்களுக்கு வசப்படாமல் அவற்றை வென்று எனக்கு வேண்டுவதைக் கூறுகிறவர். ஆகவே, தயை செய்து உங்கள் யோசனையைக் கூறவேண்டும்'' என்றார்.

மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி பலவகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனேயும் தனித் தனிக் குணசித்திர மாகும்.

இதற்கு கிருஷ்ணர், ''அரசே, நீங்கள் எல்லாக் குணங்களிலும் சக்கரவர்த்தியாகவேதான் இருக்கிறீர்கள். உங்களுக்கு எல்லா விஷயங்களும் நன்றாகத் தெரிந்தவைதான். ஆனாலும், எல்லாவற்றையும் ஒளிக்காமல் கூறுகிறேன். ஜராசந்தன் என்ற கொடிய அரசன் இருக்கிறான். அவனைக் கொல்லாமல் எப்படி ராஜசூயம் செய்வது? அவனுக்குப் பல அரசர்கள் கீழ்ப்படிந்து பக்கபலமாக இருக்கிறார்கள். கம்சன் மனைவி வேறு அவனை என்மேல் படையெடுக்கும்படி தூண்டி வருகிறாள். நான் உங்களை நம்பித்தான் பேசாமல் இருக்கிறேன். அதனால் முதலில் அவனைக் கொல்ல ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றார். பிறகு கிருஷ்ணரும் பீமனும் மாறு வேஷத்தில் ஜராசந்தனிடம் சென்றார்கள். பீமன் அவனோடு கடும் போர் தொடுத்து முடிவில் அவனைக் கொன்றான் கிருஷ்ணர் ஜராசந்தன் சிறையில் இட்டிருந்த எல்லா அரசர்களையும் விடுவித்தார். ''தர்மர் ராஜசூயம் செய்யப் போகிறார். நீங்கள் எல்லாரும் அவருக்கு உதவி செய்யுங்கள்'' என்றார். ''சரி'' என்று அவர்கள் அதற்கு இணங்கினார்கள். ஜராசந்தன் மகன் ஏராளமான ரத்தினங்களையும் பசுக்கள், ஆடுகள், எருமைகள், யானைகள், குதிரைகள் முதலியவற்றையும் தர்மபுத்திரரின் யாகத்துக்கு அளித்தான். கிருஷ்ணரும் பீமனும் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு இந்திரப்பிரஸ்தம் வந்தார்கள். தர்மர் அனைவரையும் பாராட்டினார். கிருஷ்ணர் தர்மரிடம் விடை பெற்றுத் துவாரகை திரும்பினார்.

தர்மர் வியாச முனிவரின் யோசனைப்படி அர்ஜுனனை வடதிசைக்கும், பீமனைக் கிழக்குத் திசைக்கும், சகதேவனைத் தெற்குத் திசைக்கும், நகுலனை மேற்குத் திசைக்கும் விஜயம் செய்து பொருள் திரட்டி வரும்படி அனுப்பினார்.

அர்ஜுனன் இமயத்தைச் சார்ந்த உத்தர குருதேசம்வரையில் சென்று எல்லா அரசர்களையும் வென்று தர்மபுத்திரருக்குக் கப்பம் கட்டும்படி செய்தான். பணத்தையும் ரத்தினங்களையும் ஏராளமாகக் கொண்டு வந்தான். தித்திரிப் பறவையின் நிறமும் கிளியின் நிறமும் மயில் வண்ணமும் கொண்ட வாயு வேகமுள்ள கணக்கற்ற குதிரைகளையும் அழைத்து வந்தான். சதுரங்க சேனை அவனைப் பின் தொடர்ந்து வந்தது. பீமனும் அவ்வாறே கிழக்குத்திசையில் இருக்கும் அரசர்களை வென்று கப்பம் கொடுக்கச் செய்தான். பலவகையான ரத்தினங்கள், சந்தனம், அகில்கட்டை, ஆடைகள், முத்து, மாணிக்கம், தங்கம், வெள்ளி, வைரம், பவழம் முதலியவற்றைக் கோடிக்கணக்கில் கொண்டுவந்து தர்மரிடம் கொடுத்தான். சகதேவன் தெற்குத்திசையில் இலங்கை வரையில் சென்றான். அங்கு இருக்கும் அரசர்களையும் தர்மபுத்திரருக்குக் கப்பம் கொடுக்கச் செய்தான். சிறந்த ரத்தினங்களை எடுத்துக்கொண்டு அரசர்களுடன் வந்து தர்மர் முன் வணங்கி நின்றான். தர்மர் மிகுந்த சந்தோஷத்துடன் அவைகளை ஏற்றுக்கொண்டார். நகுலன் மேற்குத் திசையில் சென்று அனைவரையும் வென்று ஏராளமான ரத்தினங்களை எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான கழுதைகளில் ஏற்றிக்கொண்டு இந்திரப்பிரஸ்தம் வந்து தர்மரிடம் கொடுத்தான்.

இவ்வாறு பாண்டவர் பூமி முழுவதையும் வென்று நீதி வழுவாமல் நாட்டை ஆண்டார்கள். நாடு செழித்து, தர்மம் நிறைந்திருந்தது. மக்கள் அனைவரும் அரசருக்கு நன்மை செய்வதிலேயே ஈடுபட்டிருந்தார்கள். சரியான முறையில் சம்பாதித்த பொருள் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஆனாலுங்கூட அழிக்க முடியாத அளவு வளர்ந்தது. செல்வ நிலையை அறிந்த தர்மர் யாகம் செய்ய ஏற்பாடு செய்யலானார். நண்பர்களும் குடிமக்களும், ''அரசே, தாங்கள் யாகம் செய்ய வேண்டிய சமயம் வந்துவிட்டது. யாகத்தை ஆரம்பியுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது பகவான் கிருஷ்ணர் ஏராளமான பொருளுடனும் படையுடனும் சமுத்திரம் போல் பல ரத்தினங்களை எடுத்து வந்தார். தேரின் சப்தம் திசைகள் அதிரும்படி இருந்தது. சூரியன் இல்லாத இடத்தில் சூரியன் வந்ததுபோலவும், காற்று இல்லாத இடத்தில் காற்று வந்தது போலவும் இந்திரப்பிரஸ்தம் கிருஷ்ணரின் வரவால் களிப்புற்றது. தர்மர் பகவானை வரவேற்று உபசரித்து, தௌம்யர், வியாசர் முதலிய முனிவர் நிறைந்த சபை நடுவே, ''கிருஷ்ணா, உங்கள் அருளால் பூமி முழுவதும் எங்கள் வசம் ஆகிவிட்டது. ஏராளமான பொருள் சேர்ந்துவிட்டது. அநுமதி பெற்று அந்தணர்களுக்கும் அக்கினிக்கும் அளிக்கவேண்டியவற்றை அளிக்க விரும்புகிறேன். அநுமதிக்க வேண்டும்'' என்றான்.

கிருஷ்ணர் இதைக் கேட்டுத் தர்மரின் குணங்களை வெகுவாகக் கொண்டாடினார். ''சக்கரவர்த்தியே, நீங்கள்தான் இந்தச் சிறந்த யாகத்தைச் செய்யத் தகுந்தவர். உங்கள் இஷ்டப்படி யாகம் செய்யும். நான் என்ன செய்யவேண்டுமோ அதைச் சொல்லுங்கள், செய்கிறேன்'' என்றார்.

''கிருஷ்ணா, நீங்கள் இருக்கும் பொழுது எனக்கு என்ன குறை? என் எண்ணம் ஈடேறும்; காரியமும் சித்தியாகும். அதில் சந்தேகமில்லை'' என்று சொன்னார் தர்மர்.

பிறகு அவர் சகதேவனையும் மற்ற மந்திரிகளையும் அழைத்து, ''இந்த யாகத்துக்கு வேண்டிய பொருள்களைச் சேருங்கள். தௌம்ய முனிவர் குறிப்பிடும் எல்லாச் சாமான்களையும் தாமதியாமல் கொண்டு வாருங்கள். இந்திரசேனன், விசோகன், ருக்மன் முதலியோர் உண்பதற்கும் குடிப்பதற்கும் வேண்டிய பொருள்களைக் கொண்டு வரட்டும். அந்தணர்கள் விரும்பும் மற்றப் பதார்த்தங்களையும் கொண்டு வாருங்கள்'' என்று

உத்தரவிட்டார். எல்லாம் முன்பே தயாராக இருக்கின்றன என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.

வியாச பகவான் வேதங்களே உருவெடுத்தது போன்ற அந்தணர்களை அழைத்து வந்தார். தாம் பிரம்மாவின் ஸ்தானத்தில் அமர்ந்தார். ஸுஸாமா என்ற முனிவர் சமாதானம் செய்பவராகவும், பிரம்ம ஞானியாகிய யாக்ஞவல்கியர் அத்வர்யுவாகவும், தைப்ய முனிவர் ஹோதாவாகவும் இருந்தார்கள். இவர்களுடைய சிஷ்யர்கள் மற்ற ரித்விக்குகளாக ஆனார்கள். பிறகு அனைவரும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் புண்ணியாஹம் ஜபித்தார்கள். சிற்பிகள் தேவர்களின் மாளிகைபோல் அழகான வீடுகளை நிறுவினார்கள்.

தர்மர் சகதேவனிடம் அந்தணர்களையும் அரசர்களையும் யாகத்துக்கு அழைக்கும்படி உத்தரவிட்டார். அவனும் தூதர்களை அனுப்பி, நான்கு வர்ணத்தார்களையும் அழைத்தான். தர்மர் நகுலனை ஹஸ்தினபுரத்துக்கு அனுப்பி, பீஷ்மர், பாஹ்லீகன், பூரிச்சிரவஸ், துரோணர், திருதராஷ்டிரன், விதுரர், கிருபர், துரியோதனாதியர், மற்ற நண்பர்கள் எல்லோரையும் அழைத்துவரச் சொன்னார்.

ரித்விக்குகள் அனைவரும் சேர்ந்து, ஆனி மாதம் மூல நட்சத்திரம் கூடிய அமாவாசையன்று அரசருக்கு ராஜசூய யாகத்துக்காகத் தீட்சை செய்து வைத்தார்கள். அரசர் ருரு என்ற மானின் தோலை உடுத்துக்கொண்டு, உடம்பில் வெண்ணெயைப் பூசிக்கொண்டு ஆயிரக்கணக்கான அந்தணர்களும், சகோதரர், தாயாதிகள், நண்பர்கள், மந்திரிகள், மற்ற க்ஷத்திரியர்கள், பல நாட்டிலிருந்து வந்த மனிதர்கள் இவர்களும் சூழத் அறமே உருவெடுத்தது போல் யாக சாலைக்குள் நுழைந்தார்.

எல்லா வித்தைகளிலும் தேர்ச்சி பெற்ற அந்தணர்கள் யாகத்துக்கு வந்திருந்தார்கள்.

பல தேசங்களிலிருந்து அழைத்த அரசர்கள் சிறந்த ரத்தினங்களையும் மற்றப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு யாகத்தைப் பார்ப்பதற்கும், சபையைக் காண்பதற்கும் வந்தார்கள். பீஷ்மர், திருதராஷ்டிரன், விதுரர், துரியோதனாதியர் அனைவரையும் நகுலன் அழைத்து வந்தான். கிருபர், துரோணர், சகுனி, கர்ணன், சல்லியன், அசுவத்தாமன், ஜயத்திரதன் முதலியோரும் வந்து சேர்ந்தார்கள். சிசுபாலனும் தன் மகனுடன் யாகத்துக்கு வந்தான். பலராமன், பிரத்தியும்னன் முதலியோரும் அங்கே வந்தார்கள். எல்லோருக்கும் தக்க மரியாதைகளுடன் விசேஷ உபசாரங்கள் நடந்தன. அவர்கள் இருக்கவும் அரண்மனைகள் கட்டிக் கொடுத்தார்கள். இவ்வாறு அனைவரும் சூழ்ந்த யாகசாலை தேவர் நிறைந்த வானுலகம்போல் இருந்தது.

இந்திரசேனன் முதலியோரை உணவுப் பொருள்களைக் கவனிக்கும்படி அரசர் ஏற்பாடு செய்தார். கிருஷ்ணரிடம், தேவருக்கும் பிதுருக்களுக்கும் செய்யக் கூடிய காரியங்களைக் கவனிக்கும்படி வேண்டிக்கொண்டார்; "அர்ஜுனன் கிருஷ்ணருக்கு அருகில் உதவியாக நிற்கட்டும்" என்றார். பீஷ்மரையும் துரோணரையும் எதிர்கொண்டழைத்துப் பணிந்தார். அவர்களையும் துரியோதனியரையும் நோக்கி, "இங்கே இருக்கும் பொருள் முதலியவை தங்களுடையவை. இஷ்டம்போல் உபயோகித்து எனக்கு அருள் புரியுங்கள்" என்றார். பிறகு தர்மர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காரியத்தைக் கவனிக்கும்படி கூறினார். அதனால் எல்லாக் காரியங்களும் குறைவின்றி நடந்தன. வருணனுக்குச் சமமான பொருளுடைய தர்மர் எல்லோரையும் மகிழ்வித்தார். சமித்து, நெய், சோம ரசம் இவற்றை மந்திரத்தோடு ஹோமம் செய்ததால் தேவர் அனைவரும் திருப்தி அடைந்தார்கள். தட்சிணை பெற்று அந்தணர் மகிழ்ந்தார்கள். எல்லா வர்ணத்தினரும் அவரவருக்கு வேண்டிய பொருளை அடைந்து இன்புற்றார்கள். இவ்வாறு ராஜசூயம் சிறப்பாக நடந்தது.

ரேடியோவில் இங்கிலீஷ் பாடம்

எஸ். எஃப். ஸ்டீஃபென்ஸ்

மொழிப் பிரச்னைபற்றி நாட்டிலே என்னதான் உக்கிரமான வாதங்கள் நடந்தாலும், சர்வதேச உறவுக்கும் ஸயின்ஸ் அறிவுக்கும் இங்கிலீஷ் இனியும் முக்கியமே என்பதில் அபிப்பிராய வேற்றுமையே இல்லை. ''இன்றைவிட இன்னும் விரிவாக ஆங்கில அறிவு இனி நம்மிடம் பரவவேண்டும்'' என்றுகூட நேரு சொல்கிறார். ஆயினும், இப்போதே ஆங்கிலப் படிப்பின் தரம் நம் நாட்டில் குறைந்துவிட்டது என்று பல கல்விமான்கள் வருந்துகிறார்கள். இந்த நிலையில் பி. பி. ஸி. ரேடியோ பாடங்களை நம் நாட்டினர் பெரிதும் பயன்படுத்திக் கொள்வது நலம். இந்தக் கட்டுரையை எழுதியிருப்பவர், பி. பி. ஸி. ரேடியோ மூலம் இங்கிலீஷ் பாட நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் அதிகாரி.

'வெளி மொழி ஒன்றை ரேடியோ மூலம் கற்பிக்க முடியும்' என்பதைக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களில் அநேகம் பேர் சாத்தியமில்லை என்றுதான் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் பார்க்கப் போனால் சென்ற பத்து ஆண்டுகளாக பி. பி. ஸி-யில் ரேடியோ மூலம் இங்கிலீஷ் கற்பிக்கும் இலாகாவைச் சேர்ந்தவர்கள், உலகத்தில் லட்சக்கணக்கான மக்களுக்கு அந்த மொழியைப் போதித்திருக்கிறார்கள்; இப்படிக் கற்றவர்களில் பெரும்பாலோர் புதிதாக அதைப் பயின்றவர்கள்! இவர்களில் பல பேர் திறம்பட இங்கிலீஷ் கற்று, ஆசிரியத் தொழிலிலும், வேறு பல துறைகளிலும் ஈடுபட்டு அந்த மொழியினால் ஜீவனம் நடத்தி வருகிறார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது இந்த இலாகாவைத் தொடங்கினோம். அப்போது, இன்று இருப்பதுபோல் அவ்வளவு ஆர்வமும் உற்சாகமும் எங்களுக்கு இல்லை. இப்படித் தொடங்கினதற்கு, ஜெர்மானியர் ஐரோப்பாவில் கைப்பற்றிய பிரதேசங்களில் இங்கிலீஷ் கற்றுவந்த மாணவர்கள் அதைக் கற்க முடியாதபடி தடை நேர்ந்துவிட்டதே முக்கியமான காரணம். அப்போது சுருக்கமாகவும் எளிமையாகவும் இருக்கும்படி இங்கிலீஷ் பாடங்களை ரேடியோ மூலம் போதித்தால் போதும் என்ற நோக்கந்தான் எங்களுக்கு. மகாயுத்தம் முடிந்ததும், ஏற்கனவே நாங்கள் போதித்த பாடங்கள் மிகவும் பயன்பட்டன என்றும், அவைகளை ஆவலுடன் அநேகம் பேர் கேட்டு வந்தார்கள் என்றும் தெரிந்தது. இந்தத் துறையில் அபிவிருத்திக்கான முயற்சிகள் செய்வதற்கு இதனால் ஊக்கம் ஏற்பட்டது. பலவிதமான பயிற்சிகளைக் கொடுத்துப் பரிசோதித்துப் பார்த்துக் கடைசியில் 'கேட்டுப் பேசுங்கள்' என்ற வரிசையில், ஆரம்ப மாணவர்களுக்குரிய பாடங்களைத் தொகுத்தோம். கேட்பவர்களுக்கு வசதியாக அவர்

காப்பிரைட்: இந்த ஆங்கிலக் கட்டுரையை 'மஞ்சரி'க்குப் பிரத்தியேகமாய் உதவியவர்: பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸஸ், கத்தோலிக் ஸெண்டர், தபால் பெட்டி 1614, சென்னை-1.

களுடைய மொழியிலேயே பாடம் போதிக்கும் முறை இது. இப்போது 38 மொழிகளில் - ஐஸ்லாண்டு மொழிமுதல் சீன மொழி வரையில் - இந்த மாதிரி முறையில் போதிக்கிறோம். இன்னும் எந்த எந்த மொழியில் போதிக்கலாம் என்றும் கவனித்து வருகிறோம்.

வட அமெரிக்காவைத் தவிர மற்ற எந்த இடத்தில் நாம் வாழ்ந்தாலும், உலகத்தில் உள்ள முக்கியமான மொழிகளில் இந்தப் பாடங்களை ரேடியோ மூலம் கேட்கலாம். இதிலிருந்து, 'ரேடியோ மூலம் உலகத்துக்கு இங்கிலீஷ் போதிப்போம்' என்பது எவ்வளவு பொருத்தமென்று தெரியும்.

கால் மணி நேரமே இந்தப் பாடங்களை நடத்துகிறோம். அதிலும், நடுநடுவே நிறுத்தி, ஒரே விஷயத்தை நிதானமாக மறுபடியும் சொல்லவேண்டி யிருக்கிறது. ஆனாலும், அதற்குள் 1450 சொற்களைப் பயன்படுத்துகிறோம். ஒவ்வொரு சொல்லும் மிகவும் கருத்தோடு தேர்ந்தெடுத்தது. அதோடு, கூடிய மட்டில் சரியாக இருக்கிறது என்று நமக்குத் திருப்தி ஏற்படும் வகையில் இந்தப் பாடங்களைச் சீர்திருத்தவும், அந்த அந்த மொழிகளுக்கு ஏற்றபடி மாற்றி அமைக்கவும் வேண்டியிருக்கிறது. இந்தக் கால் மணி நேரப் பாடத்துக்காகச் சுமார் 100 மணி நேரம் பாடுபட வேண்டி யிருக்கிறது.

ரேடியோ செட் ஒன்று ஒருவரிடம் இருந்தால் போதும்; இந்த மாதிரி பாடங்களைக் கவனித்துக் கற்றுக்கொள்ளலாம். இதற்கு அப்படி ஒரு செலவும் ஆகப் போவதில்லை; பட்டணத்தில் இருந்தாலும் சரி, மூலை முடுக்கிலுள்ள கிராமத்தில் இருந்தாலும் சரி, கவலை இல்லை. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், கூடிய மட்டும் நல்ல ஆசிரியர்களாகப் பார்த்து வரவழைத்து இந்தப் பாடங்களை அமைக்கச் சொல்கிறோம். கல்வித் துறையில் சிறந்து விளங்கும் பிரமுகர்கள், வெளிநாட்டு மாணவர் இங்கிலீஷ் கற்க வசதியாகப் பாடப் புத்தகங்கள் எழுதும் ஆசிரியர்கள் - இப்படி ஒருவர் பாக்கி இல்லாமல், எங்கள் திட்டத்தில் கலந்துகொண் டிருக்கிறார்கள்.

கேட்பவர்களுக்கு நன்றாகப் பதியும்படி இங்கிலீஷ் பேச்சுநடை வாசகங்களிலிருந்து சிறப்பானபகுதிகளை எடுத்துக் கொடுப்போம். எப்படிச் செய்தால் கூடிய மட்டில் நன்றாக இருக்கும் என்று பார்த்து அந்த மாதிரி முயற்சிகளை யெல்லாம் செய்வோம். அதாவது, நல்ல முறையில், கவர்ச்சியாக இருக்கும்படி ரேடியோ மூலம் பாடங்களைப் போதிப்போம். பலவகைப் பாடங்களை இப்படி ஒலி பரப்புவோம். கேட்பவருடைய சொந்த மொழியிலேயே ஆரம்பப் பாடங்களை விளக்கத்துடன் தருகிறோம்; இவை தவிர இங்கிலீஷிலேயுங்கூடப் பாடங்களைக் கற்பிக்கிறோம்.

இப்படி முன்னேற முன்னேறப் பாடங்களை முறைப்படுத்தி வெவ்வேறு வகையில் அமைத்துத் தருகிறோம். விஞ்ஞானம், வர்த்தகம் இந்தத் துறைகளில் ஈடுபாடுள்ளவர்களுக்கு ஏற்றபடி சில பாடங்களைத் தயார் செய்து வைத்திருக்கிறோம். இங்கிலீஷ் இலக்கியத்தில் ஈடுபாடு உள்ளவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் தகுதியான பாடங்களையும் கற்பிக்கிறோம். இந்தப் பாடங்களெல்லாம் நாலு பேர் கேட்கும்படி ரசமாக இருக்க வேண்டுமே; அதற்காகப் பலவகை முயற்சி எடுத்துக்கொள்கிறோம். உதாரணமாக, ஒன்று சொல்கிறேன்: லண்டனிலிருந்தும் சிங்கப்பூரிலுள்ள ரேடியோ நிலையத்திலிருந்தும் தொடர்கதைகளை ஒலி பரப்புகிறோம். அவற்றில் ஒவ்வொரு கட்டமும் சம்பூர்ணமாக அமைந்திருக்கும். முறையாக, மரபுப்படி இங்கிலீஷ் கற்பவர்களுக்கு இந்தத் தொடர்கதைகள் மிகவும் பயன்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்டம் முடிந்ததும் சம்பாஷணைகளை மொழிவாரியாக விளக்குவோம். பிறகு, சாதாரணமாகப் பேசும் ரீதியில் கொச்சை இங்கிலீஷைக்

கேட்டுப் பயிற்சி பெறும்படி விவாதங்களைத் திட்டமிட்டு நடத்துகிறோம்.

பல வகையில் பாடங்களைப் பாகுபடுத்தி யிருக்கிறோம் என்று முன்பே சொன்னேன். கேட்பவர்கள் பல ரகமானதால்தான் இப்படிப் பாகுபடுத்த வேண்டியிருக்கிறது. போப்பாண்டவர், நாடுகளை நிர்வகிக்கும் பல அரசாங்கத் தலைவர்கள், கல்வி சம்பந்தமான துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள், ஆயிரக்கணக்கான உபாத்தியாயர்கள், ஒவ்வொரு வகைத் தொழில் துறைக்கும் உரிய பிரதிநிதிகள் - இப்படிப் பலபேர் இந்த ஒலிபரப்புகளைக் கேட்டு வருகிறார்கள். மொத்தத்தில், வியாபாரம் போன்ற அலுவலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், பண்ணை ஊழியர்களுக்கும், 18 வயசுக்குக் கீழ்ப்பட்ட வாலிபர்களுக்கும் திருப்தி அளிக்கும்படி ஒரு பாடம் தயாரிப்பதென்றால், எவ்வளவு சிரமமாக இருக்கும், பாருங்கள்! கோடையில் நாங்கள் நடத்தும் 'ரேடியோ மூலம் இங்கிலீஷ் கற்பிக்கும்' பள்ளிக்கூடத்துக்கு, ஆண்டுக்கு ஒரு தரம் பலரை அழைக்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்குமுன் ஜெர்மன் சுரங்க ஊழியர் ஒருவரை அழைத்திருந்தோம். இவர் இரண்டு மூன்று ஆண்டுகளாக ரேடியோ மூலம் நடத்தும் இங்கிலீஷ் பாடங்களைக் கேட்டு வந்தவரே தவிர வேறு எங்கும் கற்கவில்லை. இவர் சரளமாக இங்கிலீஷ்காரர்களைப் போலவே பேசினார். சர்வகலாசாலையில் இங்கிலீஷ் படித்த ஜெர்மன்காரர்கள் பலரைவிட இவருடைய இங்கிலீஷ் உச்சரிப்பு நன்றாக இருந்தது. அதோடு பேச்சு வழக்கிலும் கொச்சையாகவும் அமைந்த இங்கிலீஷை நன்றாகப் புரிந்துகொண்டார்.

லண்டனிலிருந்து இந்தப் பாடங்களை ஒலிபரப்புவதுபோல், விரும்பி வேறு எந்த ரேடியோ நிலையத்தினர் கேட்டாலும் அவர்கள் ஒலிபரப்ப இவைகளைக் கொடுத்துதவ நாங்கள் தயார். அப்போது உள்ளூர் ரேடியோ நிலையத்திலிருந்து 'மீடியம் வேவ்லெங்த்'தில் அங்கங்கே இந்தப் பாடங்களைக் கேட்கலாம்; இது ஓர் அநுகூலந்தானே! ரேடியோவில் நடத்தும் பாடங்கள் மிகவும் பிரபலமாக இருப்பதால் இவை அடங்கிய கிராமஃபோன் ரிகார்டுகள் தேவை என்று பல இடங்களிலிருந்து விலைக்குக் கேட்டிருந்தார்கள். இப்போது பி. பி. ஸி-க்காரர்கள் இவைகளில் முக்கியமான பாட வரிசையைச் சாதாரண வேகத்திலும் நெடுநேரம் போட்டுக் கேட்கக்கூடியபடியும் பதிவு செய்து இந்த மாதிரி ரிகார்டுகளை விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள்.

இங்கிலீஷ் உபாத்தியாயர்கள், புதிதாகக் கற்பவர்கள் முதலியவர்களுக்கு இந்த ரிக்கார்டுகள் மிகவும் பயன்படும். தம் குரலை மட்டுமே - அதுவும் ஒரு வாரத்தில் ஏதோ சிற்சில 'பீரியட்'களில் மட்டுமே - மாணவர்கள் கேட்கவேண்டி யிருப்பதால், சொற்களை உபாத்தியாயர்கள் நன்றாக உச்சரிக்க எப்போதும் எவ்வளவு சிரமப்படவேண்டியிருக்கிறது! இப்படிப் பாடம் பதிவான ரிகார்டுகள் கைவசம் இருந்தால், சோர்வு இல்லாமல் இங்கிலீஷ் கற்பிக்கப் பெருந் துணையாக இருக்கும். வகுப்பில் எத்தனை தரம் வேண்டுமானாலும், இவைகளைப் போட்டு, சொற்களைக் கூடிய மட்டும் சரியான முறையில் உச்சரிக்கும்படி மாணவர்களைப் பழக்கலாம்.

கடைசியாக, இது சம்பந்தமாக என் சொந்தக் கருத்தைச் சொல்லி முடிக்கிறேன்: இன்னும் சுமார் பத்து ஆண்டுகளில் உலகத்தில் எங்கே பார்த்தாலும், இங்கிலீஷ் தெரிந்திருப்பது மிகவும் அவசியம் என்ற நிலை ஏற்படத்தான் போகிறது.

உண்மைக்கு ஒரே வழி

உண்மையைச் சொல்ல ஒரே வழிதான் உண்டு. அது உண்மையை அன்போடு சொல்லுவதுதான். —தாரோ

'மந்திரம் கால், மதி முக்கால்' என்பார்கள்;
அந்த மொழிக்கு உதாரணம்:

பயிர் காக்கும் மந்திரம்

நேனூரி கங்காதரம்

பயிர்கள் தளதளவென்று இருக்கும்; குடியானவர்கள் மனம் குளிரும். பயிர்களின் இடையில் களைகளும் குப்பை கூளங்களும் இருந்தால், பூச்சிகள் அரித்து விகாரமாய்த் தென்படும். களை களை எடுத்துவிடுவதோடு கீழ்க்கண்ட சுலோகத்தை அந்தக் காலத்தில் எழுதிக் கட்டுவார்கள். இதற்குப் பயிரை வளர்க்கும் மந்திரம் என்று பெயர்:

''யட்ச ராட்சஸ பட்சீணும்
கீடகை க்ரிமி கீடகை:
ஸர்வ பீடா விநாசாய
யாக்ஞா சுத்தி விபீஷுண:''

இதைப் பச்சைப் பனையோலையில் எழுதிச் சக்கரம்போல் சுற்றி, அதற்கு மஞ்சள் பூசித் தூபம் இட்டுப் பயிருக்கு நடுவில் கட்டினால், பயிர்களை எந்தவிதமான பீடையும் அணுகாது; பயிர் செழிப்பாக வளரும்.

56	66	3	7	சர்வ
6	3	63	62	பீடா
65	60	8	1	விநா
4	5	61	64	சாய

பயிர்களை மிருகங்கள் தின்று அழித்தால், அதைத் தடுக்கப் பயத்தை உண்டாக்கும் நீண்ட கோலைக் குடியானவர் நடுவார்கள். அதற்குத் தெலுங்கில் ஒரு பத்தியம் இருக்கிறது. அதன் கருத்து: ''இந்தக் கோலை ஹஸ்தம், ஆயில்யம், மிருகசீரிஷம் இந்த நக்ஷத்திரங்களில் நட்டால் காட்டெருமைகளும், ரோகிணி, மூலம் இவற்றில் நட்டால் பன்றிகளும், புனர்ப்பூசம், சுவாதி, கேட்டையில் நட்டால் புலிகளும், திருவோணம், விசாகம் இவற்றில் நட்டால் மான்களும் மகரத்தில் நட்டால் திருடரும், பூரம், பூராடம், பூரட்டாதியில் நட்டால் கலைமான்களும், பரணியில் நட்டால் பட்சிகளும் வருவதில்லை.''

எட்டி, கருவேல் போன்ற குறிப்பிட்ட சில ஜாதி மரங்களில் அந்த அந்த நட்சத்திரத்துக்குச் சாதகமான வகையை வெட்டி இந்தக் கோலைத் தயாரிப்பார்கள். குறித்த நட்சத்திரத்தன்று ஒரே வெட்டில் இற்று விழும்படி கோலை வெட்டி, அதற்கு மஞ்சள் தடவி, தூபம் இட்டுப் பயிருக்கு நடுவில் நட்டால் பட்சிகளும் மிருகங்களும் இச்சிப்பதில்லை.

பயிர் செழித்து வளர்வதற்குக் குடியானவர்கள் யந்திரம் அமைத்துக் கட்டுவதும் உண்டு. அதற்கு, 'ஸஸ்ய ஸௌபாக்கிய யந்திரம்' என்று பெயர். இந்த யந்திரத்தைப் பனை ஓலையிலோ, தாமிரத் தகட்டிலோ எழுதி, மஞ்சள் தடவிப் பயிர்களின் நடுவே கட்டிவைத்தால், செழித்து வளரும். இதே யந்திரத்தை மாட்டுக் கொட்டிலில் தலை வாயிலின்மேலே அடித்து வைத்தால், மாடுகளுக்கு நோய் நொடிகள் அணுகாமல் சௌக்கியமாய் இருக்கும்.

பயிர்கள் செழித்து வளர்ந்து கண்ணைக் கவரும் நிலையில் இருந்தால், வழியோடு போகிறவர்கள் எல்லாரும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே போவார்கள். அதனால் பயிர்களுக்குக் கண்ணடி தாக்கும். அதைப் போக்குவதற்கு ஒரு பரிகாரம் உண்டு. ஒரு சட்டிக்குச் சுண்ணம்பு பூசி,

மூலம்: பிரஜாமத (தெலுங்கு: 5-12-'57), பங்களூர்.

கிட்டக் கிட்டக் கரும்புள்ளிகள் வைத்து எல்லாருக்கும் தெரியும்படி வயலில் உயர்த்திக் கட்டிவைப்பார்கள். சிலர் துணியாலோ, வைக்கோலினாலோ விகாரமான முகத்துடன் பொம்மைகளைச் செய்து வயலின் நடுவே உயரத்தில் தூக்கிக் கட்டிவைப்பதும் உண்டு.

கீரை வகைகளுக்கும் காய்கறிச் செடிகளுக்குங்கூடக் கம்பளிப் புழுக்கள் போன்ற பூச்சிகள் பிடிப்பது உண்டு. அப்போது குயவர்கள் சூளைச் சாம்பலை எடுத்து வந்து இவற்றின்மேல் தெளிப்பார்கள்; பூச்சிகள் பட்டுப் போய் விடும். செடி, கொடிகள் 'மத மத' வென்று வளரும். 'சாம்பலைக் கொண்டுவரும்போது அதைக் கீழே இறக்கி வைக்கக் கூடாது; அதைச் சுமந்து வருகிறவன் பேசக் கூடாது' என்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இவைகளைச் செய்ய வேண்டும்.

காட்டு மிருகங்கள் வயல்களில் புகுந்து பயிர்களைத் தின்றும் அழித்தும் பாழ் செய்யும். இவை மந்தை மந்தையாய் ராத்திரி வேளைகளில் வயல்களில் நுழைந்து துவம்சம் செய்யும். காட்டுப் பன்றிகள் வயலில் நுழைந்துவிட்டால், அப்புறம் பயிர்கள் சர்வநாசந்தான். அதனால் அவற்றைத் தடுக்கக் குடியானவர்கள் வயலைச் சுற்றி வறட்டிகளையும் சுள்ளிகளையும் வறண்ட சாணங்களையும் அடுக்கி நெருப்பு மூட்டி வைப்பார்கள். அவை மிருகங்கள் வரும் வேளைக்குச் சரியாகக் கனிந்து, படலம் படலமாகப் புகையைக் கக்கும். அதைக் கண்டு திக்கு முக்காடி மிருகங்கள் எல்லாம் ஓடிவிடும்.

மரங்களில் பழங்கள் பழுக்கும் தறுவாயில் பல பறவைகளும் கிளிகளும் அவற்றை வந்து கொத்தித் தின்றுவிடும். அவை மரத்தை நெருங்காதபடி பயம் உண்டாக்குவார்கள். பல நிறங்களில் துணித் துண்டுகளைச் சேகரித்து அவற்றைக் கொடிகளைப் போல் கட்டிவைப்பார்கள். கயிறுகளில், அசையும்படி, பனை ஓலைகளையும் 'கர கர' வென்று சுழலும் கிலுகிலுப்பைகளையும் மரத்தின் மேலும் பக்கங்களிலும் கட்டுவார்கள். பழங்கள் தொங்கும் கிளைகளில் கற்களை நிரப்பிய டப்பாவைக் கட்டி அதனோடு நீண்ட கயிற்றைப் பிணைத்து வைத்திருப்பார்கள்; கீழே இருந்து கயிற்றை இழுத்தால் டப்பா சப்தம் கிளம்பும். பறவைகள் பயந்து ஓடிவிடும்.

பேச்சினும் பெரிய செயல்

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, ஸோல்ஜர்களை உற்சாகப்படுத்துவதற்காகப் போர் முனைக்குத் தளபதி ஐஸன்ஹோவர் சென்றார். ஓர் இடத்தில் ஏதோ சட்டங்களை வைத்துக் கட்டிய பலமில்லாத மேடை ஒன்றில் ஏறிப் பிரசங்கம் புரிந்தார். அதிலிருந்து இறங்கியபோது, என்னவோ கால் தடுக்கிச் சேற்றிலே விழுந்துவிட்டார். உடனே ஸோல்ஜர்கள் கொம்மாளமிட்டுச் சிரித்தார்கள்.

படைத் தலைவர் மட்டும் ஓடிவந்து, தளபதிக்குக் கை கொடுத்து உதவித் தூக்கிவிட்டார். தவிர, ஸோல்ஜர்கள் கொஞ்சங்கூட மரியாதை இல்லாமல் அப்படிச் சிரித்ததற்காக ரொம்பவும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

அப்போது தளபதி ஐஸன்ஹோவர், ''அதெல்லாம் பரவாயில்லை. என் பிரசங்கத்தைவிட இப்படி நான் விழுந்தது பெரும் பயன் அளித்துவிட்டது; ஸோல்ஜர்களுக்கு நல்ல உற்சாகம் வந்திருக்கிறது'' என்றார்.

—இ. இ. எட்கர்

'நாகரிகம்' என்னும் கேடு வந்து, அரும் பொருளான மஞ்சளை விரட்டி ஸோப்பைக் கொண்டுவந்து விட்டது சரியா?

மஞ்சளின் மகிமை

'பாவண்ணு'

மனிதருக்கு நான்கு பருவங்கள் வருகின்றன. அவை பாலம், கௌமாரம், யௌவனம், விருத்தம் என்பவை. பாலப் பருவத்தைத் தொட்டில் பருவமென்றும் கூறலாம். இந்தப் பருவத்தில், ஒரு குழந்தை துக்கம், வறுமை, வியாதி, பஞ்சம், பயம், அபாயம், மரணம் போன்ற பல தொல்லைகளைக் காண்பதில்லை. புன்முறுவல், சந்துஷ்டி, நிறைவு, குறைவு, சிரிப்பு, அழுகை, பிணக்கு, கோபம் முதலான குணப்படிகளைப் படிப்படியாகக் கடந்து அநுபவிக்கும் சுபாவம் தானகவே குழந்தைக்கு வருகிறது. இந்தக் காலத்தில் சிசுவின் தாய் படும் சிரமம் எதுவுமில்லை என்றே கூறலாம். 'நாலு மாதம் நாயும் பிள்ளை வளர்க்கும்' என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து நான்கு மாதம் வரையில் குழந்தை தன்னைப் பெற்றவர்களுக்கு அதிகத் தொந்தரவுகள் எதையுங் கொடாமல் பால் குடிப்பதும், உறங்குவதுமாகத்தான் இருக்கும்.

இந்தப் பருவத்தில் குழந்தைக்கு நோய் வருவதில்லையா என்று கேட்டால், 'வரும், பெற்றவளின் கவனக் குறைவால்' என்றே பதில் அளிக்கலாம். குழந்தையை எடுத்துப் பழகும் சமயங்களிலெல்லாம்-பாலூட்டும் சமயங்களிலுந்தான் - தாய் சர்வ ஜாக்கிரதையாக இருப்பாளானல், சிசுப்பிணிகள் பலவற்றைத் தடுத்துவிடலாம் சில தாய்மார் தங்களை எப்போதும் சுத்தமாக வைத்துசகொள்ளத் தவறிப் போவதுண்டு உடல் சுத்தமும் ஆடைச் சுத்தமும் பாலூட்டும் தாய்க்கு இன்றியமையாதவை. உடல் சுத்தத்துக்குத் தமிழ் நாட்டு மாதர்கள் மஞ்சளைப் பூசிக்கொள்ளும் வழக்கமே அடிப்படைக் காரணம்:

'நாகரிகம்' என்னும் கேடு பெண்கள் சமுதாயத்தில் புகுந்து இந்த உன்னதமான பழக்கத்தைக் கொள்ளைகொண்டு வருகிறது. கிராமப் பகுதியில்கூடப் பெண்கள் மஞ்சள் பூசிக்கொள்ளும் பழக்கம் படிப்படியாக மறைந்து கொண்டே வருகிறது 'மஞ்சள் ஏன் பூசவேண்டும்? யார், எந்தப் பருவத்தினர் கட்டாயம் பூசவேண்டும்? இதனல் பெண்களுக்கு என்ன நன்மை?' - இந்தக் கேள்விகளுக்குத் தமிழ்நாட்டு இந்த நாள் பெண்கள் சரியான விடை தர மாட்டார்கள்; விடையளிக்கக் கூடியவர்கள் பாட்டிகள். இந்தக் கேள்விக்குப் பெண்கள், 'என் தாய் சொன்னுள்; வாசனை ஸோப்பும், முகத்தில் பூசும் பரிமளத் தூளும் பெண்கள் சமுதாயத்துக்கு அறிமுகமாகுமுன், பெண்கள் - பெரும்பாலும் கிராமப் பெண்கள்தான்-மஞ்சள் பூசி வந்தார்களாம்'' என்பார்கள். இவை சரியான விடைகள் அல்ல.

சிறு பெண்களும், கன்னிப் பெண்களும், விதவைகளும் மஞ்சள் பூசக்கூடாது. பிள்ளை பெற்றவளே மஞ்சள் பூசவேண்டும். இது தமிழ் நாட்டுப் புராதனச் சுகாதார விதி. மஞ்சளுக்குக் கிருமிகளை நாசம் செய்யும் குணம் உண்டு. இதை ஆங்கிலத்தில் ஆன்டிசெப்டிக் (Antiseptic) என்று கூறுகிருர்கள். ஏன் பிள்ளை பெற்றவள் மாத்திரம் மஞ்சள் பூச வேண்டும்? சிறு பெண்களுக்கும் விதவைகளுக்கும் பாலூட்டும் கடமை இல்லை: அது பிரசவித்த பெண்களுக்கே உரியது. அவர்கள்

காப்பிரைட்: கத்தோலிக்கு சேவை (தமிழ்: 1-1-'58),
டி நொபிலி ப்ரெஸ், மதுரை.

குழந்தையை அடிக்கடி தூக்க, அணைக்க, அமுதூட்ட, முத்தமிடக் கூடியவர்கள். அவர்களுடைய உடலில் உண்டான வேர்வையும், அதனால் உண்டாகும் துர்க்கந்தமும், அதிலிருந்து உண்டாகும் நுண்ணிய கிருமிகளும் பாலூட்டும் காம்பில் சேர்ந்து நிற்கலாம். சிசு காம்பைச் சுவைக்கும்போது, சுவைக்கும் பாகம் அசுசியாகவும் கிருமியோடும் இருந்தால், பாலுண்ணும் சிசுவைத் தாக்க நோய்க்கு அச்சாரம் கொடுப்பதுபோல் ஆகும். உடலில் வேர்வை இருக்கும்போது, பிள்ளைக்குப் பாலூட்டுவது தவறு. இதனால் தான் தாய்மார் தங்கள் பிள்ளைகள் பால்குடி மறக்கும் வரையிலும் கட்டாயம் மஞ்சள் பூசவேண்டும் என்ற விதியைப் பெரியோர் ஏற்படுத்தினார்கள். நாள்தோறும் மஞ்சள் பூசுவது இருபத்து நான்கு மணி நேரத்துக்குப் பாதுகாப்பளிக்கும் சக்தி யுடையது. இதனால் தாய்க்கும் நன்மையுண்டு. சொறி, சிரங்கு போன்ற உபாதைகள் அவளை அணுகுவதில்லை.

அறியாமை காரணமாக இந்த அரிய நோய்த் தடுப்புப் பழக்கத்தைத் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் புறக்கணித்து விட்டார்கள். நாட்டிலே சிசுப்பிணி பெருகுவதற்கு முக்கியமான காரணம், மஞ்சளைப் புறக்கணித்ததே என்றால் தவறாகாது. மஞ்சள் பூசுவது ஒரு மதத்தின் சின்னம் அல்ல; பெண்களின் ஆரோக்கியத்துக்கு உரியது; அதிலும் சிசுப் பாதுகாப்புக்கு உரியது. ஒரு மஞ்சள் கிழங்கை எடுத்துக் கல்லில் நீர் விட்டுத் தேய்த்து, அதில் தோன்றும் மசியையே முகத்திலும் வேர்வை தங்குமிடங்களிலும் பூசிக் குளிக்க வேண்டும்.

வேலித் தகராறு

ஒரு மனிதன் புதிதாய் வாங்கிய தன் நிலத்தின் வேலியோரம் நடந்துகொண்டிருந்தான். அப்போது அண்டை நிலக்காரன் அங்கே வந்து, ''வேலியா பார்க்கிறாய்? இப்போது பார்க்காதே. நீ இந்த நிலத்தை வாங்கியபோதே என்னோடு ஒரு வியாச்சியத்தையும் விலைக்கு வாங்கிவிட்டாய். உன் வேலி என் வயலுக்குள்ளே பத்தடி தள்ளிப் புகுந்திருக்கிறது'' என்றான்.

அவனவனுக்கு அவனவனே வேலி போட்டுக்கொள்ளுவது தான், அண்டை அயல் மக்கள் ஒற்றுமையாய் வாழ வழி. ஆனால், அந்த வேலியைவிடப் பேச்சு, வார்த்தை எதிலுமே எல்லைக்கோடு அதிக முக்கியம்.

எனவே, புதிய நிலக்காரன் புன்சிரிப்புடன், ''இங்கே என் அண்டை நிலக்காரருடன் நேசமாக வாழவே வந்தேன். நிச்சயம் நேசமாகத்தான் வாழப் போகிறேன். நீங்கள்தான் எனக்கு உதவி செய்யவேண்டும். வேலியை நீங்களே தயை பண்ணிச் சரியான இடத்தில் தள்ளி வைக்கச் செய்யுங்கள். அதற்குரிய செலவை நான் கொடுத்துவிடுகிறேன்'' என்றான்.

அண்டை நிலக்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை; திகைத்து நடந்துவிட்டான். அப்புறம் வேலி ஏன் நகர்கிறது? நகரவே இல்லை. ஆனால், இரண்டு நிலக்காரர்களும் பின்னால் உற்ற நண்பர்கள் ஆகிவிட்டார்கள்.

—ஜே. பி. மிக்இவாய், 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'.

நம்ப முடியாத இந்த அற்புதத்தைப் போப் பாண்டவர் போற்றுகிருர்; உலகெங்கும் உள்ள பக்தர்கள் வியந்து துதிக்கிருர்கள்!

கண்ணீர் விடும் சிலே

★

அன்னே மேரியின் சின்னஞ் சிறு உருவம் அது, பாவம்! சுண்ணும்புக் காரையினுல் செய்தது. அதன் முகத்தில் எந்த விதமான களேயும் இல்லே. ரோஜாவை விடச் சிவப்பான நிறம். மொத்தையாக இருந்த அதன் வலது கையில் ரத்தம் வடிவது போல் இருதயம் ஒன்று; இதில் சிவப்பு வர்ணமும் தங்க நிறமும் பூசியிருந்தன. ஓர் அடி உயரமும் உட்புறம் காலியாகவும் இருக்கும் நூற்றுக்கணக்கான சுண்ணும்பு மேரி பொம்மைகள்போலவேதான் இருந்தது அது; சிசிலியில் பொம்மைத் தொழிற்சாலே ஒன்றில் தயாரித்து 3 டாலருக்கு விற்றது அந்தப் பொம்மை. அதைப் பெரும்பாலும் திருமணத்தின் போது பரிசாகக் கொடுப்பார்கள்; அதே மாதிரிதான் சைரக்யூஸிலுள்ள அண்டோனியெட்டாவுக்கும் ஏஞ்செலோ இயானுஸோவுக்கும் 1953 வேனிலில் மணம் நடந்தபோதும் இந்தப் பொம்மை பரிசாகக் கிடைத்தது. அப்புறந்தான் ஊரில் இது சம்பந்தமாக ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

அண்டோனியெட்டாவுக்கு வயசு 20 இருக்கும். அவள் கர்ப்பமாஞள். உடம்பில் ஒரே குடைச்சல் எடுக்கத் தொடங்கி, அது தாங்காமல் கண்கூடப் பஞ்சைடைந்தது போல் ஆகிவிடும்; அப்போது மிகவும் உருக்கமாக அவள் அன்னே மேரியைத் தியானித்து, ''இது தீராதா? எனக்கு விமோசனம் இல்லேயா?'' என்று வேண்டுவாள். 1953 ஆகஸ்ட் 29-இல் இப்படி அவள் ஒரு சமயம் வலி தாங்காமல் கதறிஞள். ''அப்போது பொம்மை மேரியின் கண்களிலிருந்து நீர் பெருகி முகத்தில் வழிந்தோடுவது தெரிந்தது. என்னுல் என் கண்களேயே நம்ப முடியவில்லே. 'நமக்கு என்ன, பைத்தியம் பிடித்து விட்டதா?' என்றுகூட எண்ணினேன். அன்னே மேரி குழந்தை போல் அழுதுகொண் டிருந்தாள். நான், 'சின்ன மேரி அழுகிருள்' என்று கூவத் தொடங்கினேன்.''- பின்னுல் இதைப்பற்றி விவரிக்கும் போது அண்டோனியெட்டா இப்படிச் சொன்னுள்.

அண்டோனியெட்டாவின் தாயும் நாத்தியும், 'இதென்ன, நம் மருமகளுக்குத் தேகம் தெரியவில்லேயா என்ன? இப்படி வெறி பிடித்தமாதிரி உளறுகிருளே!'

மூலம்: டைம் (ஆங்கிலம்: 6-1-'58), வாஷிங்டன் டி. ஸி., ஐக்கிய அமெரிக்கா.

என்றுதான் முதலில் எண்ணினர்கள். ஆனல் அன்னை மேரியின் பொம்மையைப் பார்த்ததும் விஷயம் புரிந்தது அவர்களுக்கு. நேரில் போய் இதைப் பார்த்து வந்த சந்நியாசி ஒருவர், ''கண்களில் நீர் நிரம்பி வழிந்தோடிப் பொம்மையின் கையில் இருந்த இருதயத்தில் சிந்தியது'' என்று தெரிவித்திருக்கிறார். அண்டோனி யெட்டாவின் புருஷன் ஒரு பண்ணையில் வேலை பார்க்கிறன். கம்யூனிஸ்ட் கட்சி அநுதாபி அவன். இதில் அவனுக்கு நம்பிக்கை விழவில்லை. நாலு நாள் சைரக்யூஸில் இருந்த ஜனங்களெல்லாம் இந்த அற்புதத்தைக் காணக் கும்பல் கும்பலாக வந்தார்கள். இப்படி நேரில் பார்த்த பலர், கண்ணீர் பெருக்கிக்கொண்டே இருந்தது இந்தப் பொம்மை என்றுதான் சொன்னர்கள். சந்தேகக்காரன் ஒருவன், ''நான் அந்தச் சிலையைச் சுவரிலிருந்து எடுத்துப் பார்த்தேன். சுவரில் ஈரம் இல்லை; காய்ந்துதான் இருந்தது. அடிப் பீடத்தைக் கழற்றிச் சிலைக்குள்ளே கவனித்தேன். உள்ளே ஈரம் இருக்குமே என்று அதைக் காய வைத்தேன். அப்படியும் மறுபடி முத்துப் போல் இரண்டு கண்ணீர்த் துளிகள் அன்னையின் கண்களிலிருந்து தோன்றின'' என்றன். சைரக்யூஸிலுள்ள போலீஸ்காரர்களும் இது உண்மைதான் என்று சொல்கிறர்கள். பொம்மையைப் போலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு எடுத்துப் போகும்போது கண்ணீர் சிந்தி ஒரு போலீஸ்காரன் உடுப்பு நனைந்துவிட்டதாம்! சின்னப் பாத்திரத்தில் அந்தக் கண்ணீரைப் பிடித்து வைத்து ரசாயன முறையில் சோதித்துப் பார்த்தார்கள். மனிதர்கள் விடும் கண்ணீர் எப்படி இருக்குமோ அப்படியே இருந்ததாம்!

பொம்மை மேரி அழத் தொடங்கினதும் அண்டோனியெட்டாவுக்கு உடம்பு வலி நின்றுவிட்டது. இன்னும் பல பேருக்கு இதே மாதிரி நோய் குணமாயிற்று. மொண்டி முடமானவர்களை இந்தக் கண்ணீரில் நனைத்த துணித் துண்டால் தடவிக் கொடுத்தால் போதும்; எல்லாம் சரிப்பட்டுவிடுகிறதாம்! 49 வயசான ஒருவனுக்கு இடது கைகெட்டு ஒன்றுக்கும் பயனற்றுப் போயிருந்தது; மூன்று வயசுப் பெண் குழந்தை ஒன்றின் கை இளம் பிள்ளை வாயுவினல் சூம்பி மரத்துக் கிடந்தது. இவர்கள் கை சரிப்பட்டுவிட்டது. 18 வயசுப் பெண் ஒருத்தி; பிறந்தது முதல் ஊமை. இந்தக் கண்ணீர் பட்டதும் பேசத் தொடங்கிவிட்டாள்!

இப்படிக் கண்ணீர் விடத் தொடங்கி ஒரு மாசத்துக்கெல்லாம் 'சின்ன மேரித் தாயாரை' 30,000 பக்தர்கள் ஊர்வலமாக அழைத்துப் போய் ரெயில்வே ஷெட் ஒன்றில், கண்ணடி போட்டு மூடிய ஒரு பெட்டியில் 'சீல்' போட்டுப் பத்திரப்படுத்திவிட்டார்கள். பெட்டியின்மேல் பித்தளையால் ஆன சிலுவை பதித்திருந்தது. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து அவளைத் தரிசிக்கக் குழுமினர்கள். 72 பிஷப்புகளும் ஆர்ச் பிஷப்புகளும் 3 கார்டினல் (பெரிய கிறிஸ்துவக் குருமார்)களும் வந்திருந்தார்கள்! சின்ன மேரித் தாயின்' இந்தக் கோயிலைச் சுற்றி நொண்டிகள் ஊன்றும் கட்டைகள் முதலியவை கிடந்தன. மொண்டி முடங்கள் கைகால் சரிப்பட்டுத் திரும்பும்போது இப்படி இவைகளை விட்டுவிட்டுப் போயிருக்கலாம். நாள் முழுவதும் பிரார்த்தனை நடந்தது. உள்ளூர்ப் பாதிரிமார்களுக்குத் துணையாக அண்டோனியெட்டாவின் புருஷனும் இருந்து அலுவல்களைக் கவனித்தான்.

இந்த அற்புதத்தை ரோமன் கத்தோலிக்கச் சம்பிரதாயத்தார் இன்னும் முறையாக ஏற்று அங்கீகரிக்காவிட்டாலும் போப்பாண்டவர் 12-ஆம் பயஸ், சிசிலி மக்களுக்கு விடுத்திருக்கும் ஒரு செய்தியில், ''உங்களுக்கு மேரித் தாயாரிடத்தில் இவ்வளவு பக்தி சிரத்தை ஏற்பட்டிருப்பதால் சைரக்யூஸ் நகரத்தில் இப்படி அவள் திருவருள் கூர்ந்ததும் அதிசயமோ?'' என்று அவர்களைப் பாராட்டியிருக்கிறர்.

பிரான்ஸில் லூர்தே என்று ஒரு விசேஷக் கிறிஸ்துவ ஸ்தலம் உண்டு. அதைப்போலவே சைரக்யூஸூம் பிரபலமாக விளங்க வேண்டும் என்று இத்தாலியர்களுக்கு ஆவல். ஆகவே, இந்த மேரித் தாயாருக்குப் புதிதாக ஓர் ஆலயம் எழுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சிசிலிக்கு அருகில் உள்ள பழைய கிரேக்க நாடக அரங்கு ஒன்றின் (வெளியூரிலிருந்து ஏராளமான பேர் வந்து அதைப் பார்ப்பது வழக்கம்) அருகில் 22 ஏக்கர் நிலம் இதற்காக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இதற்குக் 'கண்ணீர்க் கோயில்' என்று பெயரிடப் போகிறார்கள். இதற்காக வைத்திருந்த ஒரு போட்டிக்கு 17 நாடுகளிலிருந்து 200 சிற்பிகள் 'ஆலய பிளான்' அனுப்பியிருந்தார்கள். ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஃபிராங்க் லாயிட் வ்ரைட், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லே கோர்பூஸியர் போன்ற பிரபலஸ்தர்களும் இதில் கலந்து கொண்டார்கள். இவர்களில் இரண்டு பிரெஞ்சுச் சிற்பிகளுக்கு 13,000 டாலர் பரிசு அளித்தார்கள். தலை கீழாக அமைந்த ஐஸ்-க்ரீம் பணியாரம் போல் இருக்கும் அந்தக் கோயில்; சிறு கண்ணறைகள் வைத்து, உள்ளே சுற்றிலும் 400 அடி உயரம் உள்ள பிராகாரம்; 86 சின்னப் பூஜை அறைகள் பிராகாரத்தைச் சுற்றி இருக்கும். சென்ற கிறிஸ்துமஸின்போது பூங்கொத்துக்களைக் கையால் சுமந்து கொண்டு பக்தர்கள் ஊர்வலமாக வந்தார்கள்; அப்போது இந்தக் கோயிலுக்குக் காணிக்கையாக மொத்தம் சுமார் 5 லட்சம் டாலர் சேர்ந்தது.

கிழவியின் காரணம்

ஐக்கிய அமெரிக்க உப ராணுவ மந்திரி டொனால்டு குவாகல்ஸ் என்பவரின் மனைவி ஏழு பேரன் பேத்திகள் எடுத்த கிழவி. அவள் சமீபத்தில் ஆகாய விமானம் ஓட்டக் கற்று, பைலட் லைஸென்ஸ் வாங்கிக்கொண்டாள்.

அப்போது யாரோ ஒரு நண்பர், ''ஏன் இந்த வயசில் ஏரோப்பிளேன் ஓட்டக் கற்றுக்கொண்டாய்?'' என்று அவளைக் கேட்டார்.

''இளமையில் கற்பது இனி எனக்குச் சாத்தியம் இல்லை. அதனால்தான்'' என்று அவள் பதில் அளித்தாள்.

—'க்வோட்'

பதவிச் சுமை!

முதல் யுத்த காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ராஜாங்க தூதராகப் பிரிட்டனில் வால்டர் ஹைன்ஸ் பேஜ் என்பவர் இருந்துவந்தார். அவர் ஒரு சமயம் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரோடு விருந்துண்டார்.

அப்போது ஜார்ஜ் மன்னர், ''உங்கள் அமெரிக்க நாட்டில் ஜனாதிபதி எவ்வளவு காலம் ஆட்சி புரிவார்?'' என்று கேட்டார்.

''நான்கு வருஷ காலம்'' என்றார் தூதர்.

''நான்கு வருஷமா! எனக்குமட்டும் அந்த மாதிரி நான்கே வருஷத்தில் பதவி முடிந்தால், மறுபடியும் தேர்தலில் போட்டி போடவே மாட்டேன்'' என்று ஏக்கத்தோடு சொன்னார் மன்னர்.

—ஹார்ரி எமெர்ஸன் ஃபாஸ்டிக்

குடும்ப வாழ்க்கையில் பிரவேசிப்பது மனிதனுக்கு உலகெங்கும் எவ்வளவு பெரிய சடங்காக இருக்கிறது!

கல்யாண விசித்திரங்கள்

கே. ஏ.

உலகத்தின் பல பகுதிகளிலும் நடக்கும் கல்யாண முறைகள் விசித்திரமானவை. அவை வேடிக்கையும், விளையாட்டுமாக அமைந்து மனத்தைக் கவரக் கூடியனவாய் இருக்கின்றன.

ஸ்லாவ் தேசத்தின் தென் பகுதியிலும், பால்கன் பிரதேசத்திலும், கல்யாணப் பெண் முன்பின் அறியாத ஒருவனையே மணந்துகொள்ள நேரிடுகிறது சற்றும் பழக்கமில்லாத ஒரு வீட்டில் அவள் தன் மாமன், மாமிகளுக்குச் சேவை செய்ய வேண்டும். அதோடு எப்போதும் மிகவும் கீழ்ப்படிந்து நடந்துகொள்ள வேண்டும். கணவனிடங்கூட மனம் விட்டுப் பேசிப் பழக அவளுக்குத் துணிவு இராது. நாலைந்து குழந்தைகளைப் பெற்ற பின்னும் கணவனுடன் நாலு பேர் முன்னிலையில் பேசக் கூடாது. அப்படிப் பேசுவது மரியாதைக் குறைவு. விசித்திரம் என்னவென்ருல், கணவன் இறந்த பின்னும் மனைவி அவனிடம் உட்கார்ந்து அழுவது மிக இழிவு என்று அந்த நாட்டினர் கருதுகிருர்கள். தன் மைத்துனனுடன் தாராளமாக அவள் பேசலாம். கணவன் வெளியூருக்குச் சென்று திரும்பும்போது தன் மனைவிக்கென்று எந்தப் பொருளையும் வாங்கி வரக்கூடாது. ஆனல், தம்பி மனைவிக்கு அண்ணன் அப்படி வாங்கி வந்து கொடுக்கலாம். கல்யாணம் ஆனவுடன் கணவனையும் மனைவியையும் ஓர் அறையில் படுக்கவிட மாட்டார்கள். அன்று இரவுக்கு மைத்துனன் தான் துணைவன்.

ஸெர்பியா தேசத்து மருமகள் தனக்குக் கல்யாணமாகி ஒரு வருஷத்துக்குள் குழந்தை பெற்ருல், மற்றவர்கள் அவளைக் குறைவாக மதிப்பார்கள்.

அல்ஜீரியா, ஹொனேஷியா, சைப்ரஸ், யுட்ரிஷியா, லிடியா முதலிய தேசத்து மக்களுள் மணமகனுக்கு மணமகள் வரதட்சிணை கொடுக்க வேண்டும். இதற்காக அவள் கெட்ட வழியில் சம்பாதித்தாலும், அதை மற்றவர்கள் நியாயமாகவே கருதுகிருர்கள். இந்த நாடுகளின் சில பகுதிகளில் கல்யாணத்துக்கு முன் பெண் கன்னி கழிய வேண்டும் என்ற வழக்கம் இருந்துவந்தது.

பஸிபிக் தீவில் குழந்தைகள் தாய் வயிற்றில் இருக்கும்போதே அவற்றுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்துவிடுவார்களாம். நியூ கெலடோனியாவில் குழந்தைகள் பிறந்தவுடனேயே நிச்சயம் செய்துவிடுவார்கள். பிஜித் தீவில் குழந்தைகள் மூன்று நான்கு வயசு அடைந்தவுடன் கல்யாணம் நிச்சயம் செய்துவிடுவார்கள். ஆனல் தகுந்த வயசு வரும் வரையில் அவர்களை ஓர் இடத்தில் சேர்ந்து இருக்க விடுவதில்லை.

கிரீஸ் நாட்டவர்களுள் தங்கைக்குக் கல்யாணம் செய்விக்காமல் அண்ணன் கல்யாணம் செய்துகொள்ளுவதில்லை. சில சமூகங்களில் கல்யாணத்துக்கு முன் மணப் பெண்ணும் மணமகனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள அநுமதிப்பதில்லை.

எகிப்தில் கல்யாணம் ஆனவுடன் மணமகளின் கூந்தலை முடிந்துகொள்ளும் வழக்கம் இருக்கிறது. முன் காலத்தில் பிரிட்டனிலும் இதே பழக்கம் இருந்து

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: 21-1-'57), ஹுப்ளி.

வந்தது. கலியாணத்துக்குப் போகும்போது மணப் பெண் கூந்தலை விரித்துக்கொண்டு போவாள். கல்யாணச் சடங்குகள் தொடங்கியவுடன் கூந்தலை எடுத்துக் கட்டுவது வழக்கம். அதாவது, 'கல்யாணமாகு முன் பெண் சுதந்தரமானவள்; கல்யாணத்துக்குப் பின் அவள் முற்றும் கணவனுக்குக் கட்டுப்பட்டவள்' என்பது கருத்து.

ஜப்பானியர் கல்யாண சமயத்தில் பெண்ணின் புருவத்து மயிர்களை எடுத்துவிடுவார்கள். தம்பதிகளின் மேல் மங்களாட்சதை இறைப்பது முன் காலத்தில் எல்லாப் பகுதிகளிலும் வழக்கமாய் இருந்தது. அரிசி விளையாத இடங்களில் வேறு தானியங்களை இறைப்பார்கள். கிரீஸ் நாட்டில் மாவையும் மிட்டாய்களையும் இறைப்பார்கள். பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கோயிலிலிருந்து மணப் பெண் திரும்பியவுடனே அவள் தலைமேல் கோதுமையை வாரி இறைக்கும் வழக்கம் இருந்தது.

கிளஸ்டர்ஷயரில் பதினெட்டாம் நூற்றாண்டில் முதல் முதலில் மண மக்களின் தலை மேல் 'கேக்'கை உடைத்துக்கொண்டிருந்தார்களாம். ஸ்காட்லந்தில் மணமகனின் வீட்டு வாயிலுக்குப் பக்கத்தில் மணமகள் வரும் பொழுது, அவள் தலைக்குமேல் மூங்கில் கூடையைப் பிடிப்பார்களாம். அந்தக் கூடையில் ரொட்டி, வெண்ணெய், பாலாடை எல்லாம் இருக்கும். கல்யாணச் சடங்கு முடிந்தபின், அங்கே கூடியிருப்பவர்களுக்கு இவற்றை விநியோகிப்பார்கள்.

ருஷியாவில் கல்யாண சமயத்தில் வாயில்கள், ஜன்னல்கள் எல்லாவற்றின் கதவுகளையும் மூடிவிடுவார்கள். சுற்றிலும் இருக்கும் பேய், பிசாசுகளின் ஹிம்சை கல்யாணச் சடங்கின்போது அணுகக்கூடாது என்பதற்காகவே இப்படிச் செய்வார்களாம். தென் ஐரோப்பாவிலும் சீனாவிலும் கல்யாண சமயத்தில் வாணம் விடும் வழக்கம் உண்டு. சுற்றிலும் இருக்கும் பேய், பிசாசுகள் வெடியோசைக்கும் புகைக்கும் பயந்து ஓடிவிட வேண்டும் என்பது இதன் கருத்து. நம் நாட்டில்கூடக் கல்யாணத்தில் வாணம் விடும் வழக்கம் இருந்துவந்தது.

ஜப்பானில் கல்யாணச் சமயத்தில் விருந்தினர் எல்லாரும் ஒன்றாக உட்கார்ந்து மதுவைக் குடிக்கும் வழக்கம் இருந்தது. யூதர்களின் கல்யாணத்தில் மணப் பெண் முதலில் மதுவைக் குடித்துவிட்டு, அந்தக் கிண்ணத்தைச் சிறிது மதுவுடன் மணமகனிடம் கொடுப்பாள். அவன் அதில் சிறிது குடித்துவிட்டுக் கிண்ணத்தை எறிந்துவிடுவான். சில விஷயங்களில் கணவனும் மனைவியும் மட்டுமே பங்குதாரர்கள் என்பது இதன் கருத்து. மண மக்களின் தலைமேல் கையை வைத்து ஆசீர்வாதம் செய்யும் முறை தொன்று தொட்டு வந்துகொண்டிருக்கிறது.

ஹீப்ரு ஜாதியினருள் மணமக்களின் தலைக்கு மேல் நான்கு பேர் சேர்ந்துகொண்டு குடை பிடிக்கும் வழக்கம் இருந்துவருகிறது. நார்வே, ஸ்வீடன் தேசங்களில் சச்சதுரமான துணி ஒன்றை மணமக்களின் தலைக்கு மேலே விரித்துப் பிடித்துக்கொண்டு போவார்களாம்.

வட அமெரிக்காவில் ஒருவன் ஒரு பெண்ணை மணக்க விரும்பினால், பெண்ணின் தந்தைக்குப் பரிசு ஒன்றை அனுப்புவான். அவர் அதை ஏற்றுக்கொண்டால் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டதாக அர்த்தம். ஒரு முறை இந்தப் பரிசைப் பெற்றுக்கொண்ட பின், கல்யாணத்தை எந்தக் காரணம் கொண்டும் நிறுத்த முடியாது.

கல்யாணத்துக்கு நல்ல முகூர்த்தம் பார்த்து வைப்பார்கள். எல்லாக் கிழமைகளுள்ளும் புதன் கிழமை நல்லது. வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் மிகவும் கெட்டவை. திங்கள்கிழமை சம்பத்தைக் கொடுக்கும். செவ்வாய் ஆரோக்கியத்தைக் கொடுக்கும். புதன்கிழமை பாக்கியத்தையும், வியாழன் அடிதடியையும், வெள்

ளிக்கிழமை கேட்டையும் கொடுக்கும். சனி ஏழரை நாட்டான் கிழமை என்று நினைத்தார்கள். கல்யாணத்துக்குச் சிறந்ததும் சுபமானதும் ஜூன் மாதம் என்பது பொதுவான கொள்கை.

ஐரோப்பாவில் முன் காலத்தில் மணப் பெண்ணை வீட்டை விட்டுக் காதலன் அழைத்துக்கொண்டு ஓடிப்போவது வழக்கமாக இருந்தது. அப்படி ஓடிப்போன காதலர்கள் ஒரு மாதமாவது மறைந்திருக்க நேரிடும். ஏனென்றால், பெண்ணைச் சேர்ந்தவர்கள் சில நாள் வரையிலாவது அவனை வலை போட்டுத் தேடுவார்கள். பிற்காலத்தில் இதை அடிப்படையாகக் கொண்டுதான் புதிய தம்பதிகள் 'ஹனிமூன்' (உல்லாச) யாத்திரை போவது வழக்கம் ஆயிற்று. கல்யாணமான ஒரு மாதம் வரையில் புதிய தம்பதிகளுக்குத் தேனில் தயாரித்த ஒரு வகைப் பானத்தைக் கொடுப்பது ஐரோப்பாவில் இன்னும் வழக்கமாக இருந்து வருகிறது. பல்கேரியா தேசத்தில், புதிதாகக் கல்யாணமான தம்பதிகளைப் பிறர் கண்ணில் படாமல் எங்கேயாவது அனுப்பிவிடுவார்கள்.

கல்யாணம் தீர்மானம் ஆனவுடன், பெண்ணின் கையில் மோதிரம் அணிவிப்பது பழைய வழக்கம். அந்தக் காலத்தில் பேச்சை நம்பி எந்தக் காரியங்களிலும் இறங்க மாட்டார்கள். மோதிரம் இட்டே நிச்சயம் செய்வார்கள். இது பற்றிப் பைபிளிலேயே பிரஸ்தாபம் இருக்கிறது. அயர்லாந்தில் வரன், மனிதக் கூந்தலினால் வளை செய்து அதை ஒரு பெண்ணுக்குக் கொடுத்து, அவள் அதை ஏற்றால் கல்யாணத்துக்குச் சம்மதம் கொடுத்தமாதிரி ஆகும். இந்தக் காலத்தில் கூந்தலை லாக்கெட்டில் வைத்துக் கொடுக்கும் பழக்கம் இருக்கிறது. மோதிரமும் வளையும் வட்டவடிவமானவை. அவற்றின் இரு முனைகளும் ஒன்று சேர்ந்து விடுகின்றன; முடிவு என்பது இருப்பதில்லை. கலியாணத்துக்குப் பின் கணவனும் மனைவியும் மனம் ஒன்றிவிடுகிறார்கள். ஆயுட் காலம் முழுவதும் ஒற்றுமையாகக் காலம் கழிக்க வேண்டும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான், கல்யாணம் நிச்சயமாகும்போதே மோதிரம் கொடுக்கும் பழக்கம் ஏற்பட்டது.

இடைக் காலத்தில் கல்யாணம் நிச்சயம் ஆனவுடன், பெண்ணுக்கு மணமகன் மோதிரம் கொடுக்கும் வழக்கம் இருந்துவந்தது. இப்போது, இங்கிலாந்தில் கல்யாணம் நிச்சயம் ஆனவுடன், மணப்பெண், மணமகன் இருவருமே தங்கள் மோதிரங்களை மாற்றிக்கொண்டு விடுகிறார்கள்.

பிரிட்டனில் பெண்ணின் தந்தை மோதிரத்துக்குப் பதிலாகத் தம் மகளின் பாதரட்சைகளை மாப்பிள்ளைக்குக் கொடுப்பதுண்டு. செருப்பு அல்லது பூட்ஸ் அதிகாரத்தின் சின்னம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அஸிரியர், ஹீப்ரு இந்த இரண்டு ஜாதியாரும், எந்த விவகாரமும் ஒரு தீர்மானத்துக்கு வந்தவுடன் அதற்கு அடையாளமாகப் பாதரட்சையைக் கொடுப்பது வழக்கம். எகிப்து நாட்டில் பாதரட்சைகளைப் பரஸ்பரம் மாற்றிக்கொள்வதும் உண்டு.

மது மயக்கம்

''அடே! நீ அந்தப் பெரிய வீட்டு விருந்திலே ரொம்பக் குடித்துவிட்டாய். குடி மயக்கத்திலே கொள்ளிடம் பாலத்தை ஏலம் போட்டுவிட்டாய்.''

''அப்படியா! நிஜமாகவா?''

''அட நிஜந்தாண்டாங்கறேன். மேலும் கேளுடா; அப்ப அதை ஏலத்திலே நான் வாங்கிப் போட்டுட்டேன்.''

—'எக்ஸ்'

அன்புக் கலை

மூலம்: ஓ ஹென்றி
தமிழ்: டேவிட் மாசிலாமணி

இந்த ஆசிரியர் அமெரிக்கர். சிறுகதை உலகில் உலகப் புகழ் பெற்றவர். 1862-இல் பிறந்து 1920-வரை வாழ்ந்தவர். இவருடைய உண்மைப் பெயர் ஸிட்னி போர்ட்டர். பிரசித்தி பெற்ற பிரெஞ்சு மருந்துக் கம்பெனியின் பெயரைத் தமது புனைபெயராக வைத்துக் கொண்டார். 300-க்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருக்கிறார்.

கலை பயிலும் மாணவ மாணவிகள் தங்கள் ஆசிரியர்களுடைய கலைக் காட்சியைக் காண ஒன்று கூடும் ஓரிடத்தில் ஓவியக் கலை மாணவன் ஜோவும் சங்கீத மாணவி டேலியாவும் முதல் முதலில் சந்தித்தார்கள். தொடர்ந்து பல காலம் பழகியபின் உயிர்க் காதலர் ஆகி, முடிவில் மணமும் புரிந்து கொண்டார்கள்.

இந்தப் புதிய தம்பதிகள் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு குடித்தனம் செய்யத் தொடங்கினார்கள். இளைஞன் பணக்காரன். டேலியாவுக்காக - அவளுடைய ஆசைக் கலைக்காக - எல்லாச் சுகங்களையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தான். ஜோவின் கற்பனையில், அவனுடைய ஓவியங்கள் பாரீஸ் நகரச் சர்வதேசக் கலைக் கண்காட்சியில் சகல கலைஞர்களையும் பிரமிக்கச் செய்யும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்று தோன்றும்; டேலியாவின் சங்கீதத்தைக் கேட்க ஒருவரை ஒருவர் தள்ளி விலக்கி முட்டி மோதி அடித்துக்கொண்டு கூடும் கூட்டத்தில் காயம்பட்டுப் பலர் கலங்கப் போகிற நாளும் வெகு தூரத்தில் இல்லை என்று தோன்றும்!

நகரத்தில் பிரபலமான ஆசிரியர்களிடந்தான் இருவரும் தங்கள் கலைப் பயிற்சியைப் பெற்றுவந்தார்கள். கட்டணத்திலும் பிற செலவுகளிலும் ஏராளமாய்ப் பணம் போயிற்று. ஆனால் அதை யெல்லாம்பற்றிக் கவலைப்பட்டால் முடியுமா? ஆருயிர்க் காதலி டேலியாவுக்காக எதைத்தான் செய்யக் கூடாது?

அந்தச் சின்னஞ் சிறிய வீட்டில் ஜோ காதலித்த ஜீவன் டேலியா; பற்றுக்கொண்ட பொருள் அவளுடைய கலை. இது போலவே டேலியா காதலித்த ஜீவன் ஜோ; பற்றுக்கொண்ட பொருள் அவன் கலை. இவ்வளவே. இருவரும் திருப்தியோடு பூர்ண மகிழ்ச்சியில் திளைத்து வாழ்ந்து வந்தார்கள்.

யாராவது ஒரு பணக்கார இளைஞன் என்னிடம் அபிப்பிராயம் கேட்டால் நான் இப்படித்தான் பதில் சொல்வேன்: "உன்னிடமுள்ள எல்லாப் பொருளையும், ஜோவைப்போல் உன் சொந்தக் காதலிக்காகவும் அவளுடைய கலைக்காகவும் தியாகம் செய்து சொர்க்க போகம் அநுபவி!"

ஜோவின் வருமானம் வற்றத் தொடங்கும்வரையில் - டேலியா தான் ஏற்கனவே ஏழையாயிற்றே - தாங்கள் பொன் விளையும் பூமியில் பூரிப்போடு வாழ்வதாக இருவருக்குமே தோன்றியது. பிறகு?... கவலை. இருவருடைய

லட்சியங்களும் தெளிவும் அபிமானமும் நிறைந்தவையாக இருக்கும்போது, ஆயிரமாயிரம் கவலைகள் வாழ்க்கையைச் சூழ்ந்தால் என்ன? வாழ்க்கையின் சிரமங்கள், வற்றாத சுனையாக ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கும். தன் காதலியிடமும், அவளுடைய அபிமானக் கலையிடமும் பேரன்பு கொண்டவன், சிரமங்களைக் கண்டு பயந்தால் சரிப்படுமா?

சிறிது நேரம் சிந்திக்கவேண்டியதுதான் தாமதம்; உடனே உபாயம் உதயமாகிவிடும்!

ஒருநாள் காலை. பிறருக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப் போவதாக ஜோவிடம் டேலியா தெரிவித்தாள்.

இரண்டு மூன்று மாணவிகளைத் தேடி அவள் அலைந்தாள். ஒரு நாள் மாலை, அவள் மகிழ்ச்சியோடு சொன்னாள்: "ஜோ, எனக்கு மாணவி கிடைத்துவிட்டாள். அதுவும் ஒரு பெரிய குடும்பத்தில்! என் மாணவி ஒரு பனிநீர் மொட்டு; ஜெனரல் பிங்கேனி என்பவரின் மகள். ஒரே மகள்; வெண்மையான ஆடைகளையே அவள் அணிவாள். பதினாறு, பதினேழு வயசு இருக்கலாம். தினம் ஒரு மணி நேரம் சொல்லிக் கொடுத்தால் போதுமாம்! சம்பளமோ 'வள்ளிசாக' ஐம்பது பிராங்க்! நான் படிப்பை நிறுத்திக்கொள்ளப் போகிறேன்!..இன்னும் எவ்வளவு காலந்தான் படித்துக்கொண்டே இருப்பதாம்? இன்னும் இரண்டு டியூஷன்களும் கூடக் கிடைத்துவிட்டால், உங்கள் கலைக் கல்லூரிச் சம்பளத்தைச் சிரமம் இல்லாமல் கட்டிவிடலாம், பாருங்கள்..புருவத்தை ஒன்றும் சுளிக்க வேண்டாம்....வாருங்கள், டீ குடிக்கலாம்...."

"நீ ஒரு வழி கண்டு பிடித்துவிட்டாய், டேலி! ஆனால், நான் மட்டும் சளைத்தவனா? நீ வேலை செய்ய, நான் ஓவியக் கலைக் கற்பனைகளில் மிதப்பது சரியா? இல்லை, அது முடியாது. என்னாலும் ஏதாவது செய்யமுடியும்!" என்றான் ஜோ.

டேலியா தன் இரு கரங்களையும் அன்போடு ஜோவின் கழுத்தில் கட்டிக்கொண்டு சொன்னாள்: "அசட்டுத்தனமாகப் பேசாதீர்கள். நீங்கள் உங்கள் கலையைத் தொடர்ந்து பயிலவேண்டும்; நான் என் பயிற்சியை முடித்துக்கொண்டு மற்றவர்களுக்குச் சொல்லித் தந்தால்தானே, அது பூர்ண விரிவடையும்?..அதற்கு அதிகச் செலவும் தேவை யில்லை; அதோடு, நீங்கள் மேலே படிக்கவும் முடியும்!"

ஒருவாய் டீயைத் தொண்டைக்குள் இறக்கிக்கொண்டு ஜோ சொன்னான்: "நல்ல காரியந்தான். ஆனால், நீ பாட்டுச் சொல்லிக் கொடுக்கப்போவதை நினைத்தால்தான், என் உள்ளம் சகிக்க முடியாத வேதனையை அடைகிறது!"

டேலியா மிருதுவான குரலில் பேசினாள்: "காதலியின் கலை பிடித்தவர்களுக்கு எந்தக் காரியமும் துன்பந் தருவதாகவே இருக்காது!"

சிறிது நேரச் சிந்தனைக்குப் பிறகு ஜோ, "நான் முன்பு ஒரு தடவை ஓர் ஓவியம் வரைந்தேன் அல்லவா, டேலி - ஓர் இயற்கைக் காட்சி; அது என் பேராசிரியரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. அதை அவர் மிகவும் புகழ்ந்தார். அதை ஏதாவது ஒரு படக் கடையில் தொங்கவிட்டால், விரும்பிய யாராவது வாங்கிக்கொண்டு போவார்கள்!" என்றான்.

"நிச்சயமாக வாங்கிக்கொண்டு போவார்கள். இந்த நாட்டில் கலாபிமானிகள் அத்தனை பேரும் ஒரேயடியாய்ச் செத்துப் போய் விடவில்லை!"

அடுத்த மாதம் இருவருக்குமே வேலை கிடைத்துவிட்டது. காலை ஏழு மணிக்கு உணவருந்தி, ஜோ வீட்டை விட்டுப் புறப்படுவான். நடுப்பகல் ஆகாரத்தை டேலியா ஒரு பாத்திரத்தில் கொடுத்தனுப்பி விடுவாள். மாலையில் ஜோ வீடு திரும்பியதும் சொல்வான்:

''இன்று நான் இரண்டு ஓவியங்களை விற்றேன்!''

அந்த மாதத்தின் கடைசி நாள். டேலியா சோர்வோடு - ஆனால் ஆழ்ந்த அபிமானம் நிறைந்த குரலில் - சொன்னாள்: ''இதைப் பார்த்தீர்களா? ஐம்பது பிராங்க் 'வள்ளிசாக' இருக்கிறது. என் மாணவி என்னை இடையிடையே தொல்லைப்படுத்துகிறாள். ஆனால், அந்த ஜெனரல் பிங்கேனி இருக்கிறாரே, பாவம், அப்பாவி; அவர் என்னிடம் ராகங்களைப்பற்றி அடிக்கடி கேட்பார். அவர் தாடி வெண் பஞ்சைப் போன்றது. அவருடைய குருட்டுக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் நான் பல தடவை திணறிப்போய் இருக்கிறேன்....''

அப்போது ஜோ, புராதனச் சீனநாட்டின் இளவரசனை ஒத்த மிடுக்கோடும் ஜம்பமாகவும் தன் பையிலிருந்து ஐந்து பத்து பிராங்க் நோட்டுகளை எடுத்து, டேலியா பார்க்கும்படி முக்காலிமீது வைத்தான்.

டேலியா பெருவியப்புடன் அவனை நோக்கினாள்: ''என் படத்தை வாங்கிக்கொண்டவன் யார் தெரியுமா? பியேரியா நகரில் உள்ள ஒரு பெரும் புள்ளி. சித்திரத்தைக் கண்டவுடனேயே, அந்தத் தனவந்தன் தன் காரியதரிசியிடம், 'இந்தப் படத்தின் விலையை அவரிடம் கொடு' என்று உத்தரவிட்டான். அதன் மேல், 'ஐம்பது பிராங்க்' என்று முதலிலேயே எழுதி வைத்திருந்தேன். ஐந்நூறு பிராங்க் என்று நான் எழுதி இருந்தாலுங்கூட, அந்தப் பியேரியா நகரத்துப் பணக்காரன் கொஞ்சமும் தயங்கியிருக்கப்போவதில்லை!''

டேலியா ஆச்சரியத்தோடு, ''இந்தப் பியேரியா நகரம் எங்கே இருக்கிறது? நான் இது வரையில் கேள்விப்பட்டதில்லையே!'' என்றாள்.

''அதையெல்லாம் தெரிந்துகொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்; அவன் ஒரு கொழுத்த வியாபாரி; பெருத்த பணக்காரன். கழுத்தில் விலை உயர்ந்த 'மஃப்ளர்' சுற்றி இருந்தான்; அவனுக்குப் பின்னால் டஜன் வேலைக்காரர்கள் அவன் ஆணைக்கு எப்போதும் காத்து நிற்கிறார்கள். அவன் அந்தப் படத்தை வாங்கிக் கொண்டதோடு, மற்றொரு படத்துக்கும் 'ஆர்டர்' கொடுத்திருக்கிறான்!''

''என்ன, விளையாடுகிறீர்களா?''

''இல்லை, டேலி. இது விளையாடும் காரியமா? நீ இந்த டியூஷனுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, அந்தச் சங்கீதப் பயிற்சியைப் பூர்த்தி செய். கட்டணத்துக்கு இனிமேல் கவலைப்பட வேண்டியதில்லை!''

''காதலனின் கலைக்காகக் காதலி எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்த மாட்டாள் என்று நான் சொல்லவில்லையா? நீங்கள் உங்கள் பயிற்சியைத் தொடருங்கள். இருக்கட்டும்; இப்போது இதை மட்டும் செய்வோம். அடுத்த மாதம் முதல் என் பயிற்சியையும் ஆரம்பிக்கிறேன்'' என்று டேலியா தெளிவான குரலில் சொன்னாள்.

''ஆமாம், அப்படித்தான் செய்ய வேண்டும். நான் கடைக்குப் போய்ச் சாமான்கள் வாங்கிக் கொண்டு வருகிறேன்.''

அந்த மாதத்தின் கடைசி நாள். ஜோ வழக்கத்துக்கு முன்பே வீடு திரும்பிவிட்டான். அவன் தன் பையிலிருந்து ஐந்து பத்து பிராங்க் நோட்டுகளை எடுத்து முக்காலிமேல் இருந்த புத்தகத்துக்குள் வெளியே தெரியும்படி வைத்தான். பிறகு, கையில் ஒட்டியிருந்த கறுப்பு வர்ணத்தைக் கழுவுவதற்காகக் கிணற்றருகே சென்றான்.

அரைமணி நேரம் கழிந்தது.

டேலியாவும் வந்தாள். அவளுடைய இடது கையில் ஏதோ துணி சுற்றியிருந்தது.

திடுக்கிட்ட ஜோ கேட்டான்; ''இதென்ன, டேலி? என்ன நேர்ந்தது?''

உதடுகளில் மங்கிய புன்னகையை வரவழைத்துக்கொண்டு டேலி பதிலளித்தாள்: ''ஒன்றுமில்லை, ஜோ. பிரமாதமாக எதுவுமில்லை.''

ஜோ சோகம் ததும்பும் கண்களால் அவளை நோக்கினன்.

அவள் தொடர்ந்தாள்: "நல்ல பெண்! தான் தயாரிக்கப் போகும் உணவைச் சாப்பிடாமல் என்னை விடமாட்டேனென்று வம்பு செய்தாள். நானும் ஒப்புக்கொண்டேன். அடுக்களையில் அவளுக்கு உதவி செய்யச் சென்றபோது, அடுப்பிலிருந்து ஒரு நெருப்புத் துண்டு தெறித்து வந்து என் கையில் விழுந்துவிட்டது! பாவம், ஜெனரல் சார் மிகவும் பயந்து போனர்; மகளைக் கொஞ்சம் கோபித்துக்கொண்டார். உடனே கடையிலிருந்து மருந்தும் சல்லாத் துணியும் வாங்கிவரச் செய்து, அங்கேயே கைக்கு மருந்திட்டுக் கட்டியும் விட்டார்கள்."

காயமடைந்த டேலியாவின் கையைத் தன் கையால் மிருதுவாகத் தடவிகொண்டே ஜோ திகைப்போடு கேட்டான்: "இந்தச் சல்லாத் துணியை அவர் எங்கேயிருந்து வாங்கிவரச் செய்தார்?"

அவனுடைய கேள்வியைக் கவனிக்காமல், முக்காலிமீதிருந்த புத்தகத்துக்கு வெளியே தெரிந்த நோட்டுகளில் தன் பார்வையைப் பதித்தாள் டேலியா: "ஓஹோ! உங்கள் இரண்டாவது படமும் விற்பனையாகிவிட்டதா?"

"அந்தப் பணக்காரனின் காரிய தரிசியைப் போய்க் கேள்! அடுத்த படத்துக்குக்கூட ஆர்டர் கொடுத்திருக்கிருன். டேலி, இந்தக் கையில் எப்போது காயம் பட்டது?"

"அப்போது மூன்றரை மணி அடித்திருக்கும். உம்..இவ்வளவு அக்கறை கொள்ள இதில் என்ன இருக்கிறது? இப்படி ஒரு காயம் இருந்தால், குடி முழுகிவிடுமா?"

காயத்தை டேலியா பொருள் படுத்தியதாகவே தெரியவில்லை. அவளது கழுத்தில் தன் இரண்டு கரங்களையும் பின்னிக்கொண்டு, "சொல், டேலி; முழு விவரத்தையும் சொல். சென்ற இரண்டு மாதங்களாக நீ என்ன செய்து வருகிருய்?" என்ருன் ஜோ.

டேலி சந்தேகத்தோடு ஒரு நிமிஷ நேரம் ஜோவின் முகத்தைப் பார்த்து நின்ருள். உடனே அவளுடைய உதடுகள் விறைத்தன. கண்களிலிருந்து நீர் பெருகியது.

"சொல்கிறேன், என் அன்பே; முழு விவரத்தையும் சொல்கிறேன்" என்று அவள் தேம்பியபடி, பல நாளாக நான் தேடி அலைந்தும் ஒரு டியூஷனும் கிடைக்கவில்லை. வேலை இல்லாததால், ஊதியம் இல்லாததால், நீங்கள் சித்திரக் கலையைத் தொடர்ந்து பயில முடியாமல் விட்டுவிடப் போவதைக் காண என்னல் பொறுக்க முடியவில்லை. ஆகவே, ஒரு சலவைச்சாலையில் துணிகளுக்குப் பெட்டி போடும் வேலையில் அமர்ந்தேன். ஜெனரல் பிங்கேனி என்று நான் சொன்னவர் சலவைத் தொழிலாளிதான். அவருடைய மகள் - மூத்த மகள் - என் மாணவி-யாரென்ருல், இரும்பு இஸ்திரிப் பெட்டிதான்! இன்று தெரியாமல் சூடான இஸ்திரிப் பெட்டியின்மேல் கை வைத்துவிட்டேன்....நீங்கள் என்னை வெறுக்காதீர்கள். நான் இந்த வேலையை ஏற்றுக்கொண்டிராவிட்டால், உங்கள் ஓவியப் பயிற்சியை முடிப்பது எப்படி? ஜோ, என் அன்பே! உங்கள் அபிமானக் கலையின்மீது எனக்கும் பெரு விருப்பம் உண்டு!"

"உன் அபிமானக் கலைமீது எனக்கும் பெரு விருப்பம் உண்டு, டேலி! உன் வேலையைத்தான் இது வரையில் நானும் செய்தேன். இன்று மூன்றரை மணிக்கு, உன் கைக்குக் கட்டச் சல்லாத் துணி கேட்டுக்கொண்டு ஒருவன் வந்த கடையில்தான் நான் வேலை செய்கிறேன். அவனை நான் விசாரித்தேன். அவன் விவரம் தெரிவித்தான். நான்தான் இந்தச் சல்லாத் துணியை அவனுக்கு விற்றுக் காசை வாங்கினேன். அந்தத் துணியின் விளிம்பில் எங்கள் கடையின் பெயருள்ள முத்திரையும் விலாசமும் இருக்கின்றன, பார்!"

"ஆனல், அந்தப் படங்களை விற்றதாக நீங்கள் சொன்னது..?"

"உன் ஜெனரல் பிங்கேனியும் என் பணக்கார வியாபாரியும் ஒரே கலையின் ஈருருவங்கள், டேலி!"

டேலியா சிரித்துக்கொண்டே கேட்டாள்: "என்ன கலை அது?"

"அன்புக் கலை!"



விளம்பரப் பெண்

மூலம்: மதுராந்தகம் ராஜாராம்
தமிழ்: புது. சீனிவாசன்

ஆந்திரத்தில் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவர் ஆசிரியர். அவருடைய அனுமதி பெற்றுத் தமிழாக்கித் தந்திருக்கிறார் மொழிபெயர்ப்பாளர். (காப்பிரைட்)

"ரஹமத், வண்டி ஏன் நின்று நின்று இவ்வளவு மெதுவாகப் போகிறது? அங்கே மலையத்தனை வேலை என் தலைமேல் காத்துக் கிடக்கிறது. கொஞ்சம் வேகமாக ஓட்டப்பா.''

பின் சீட்டிலே சாய்ந்த வண்ணம் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்த வஜ்ரபாணி இப்படிக் கட்டளையிட்டான்.

''ஏதோ வண்டியில் ரிப்பேர் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச தூரந்தானே போகவேண்டும். அதனாலே மெதுவாகவே..'' என்று இழுத்தான் டிரைவர்.

வஜ்ரபாணி தலையை உயர்த்திக் கண்ணாடிக் கதவின் வழியாக வெளியே பார்த்தான். கார் ஏரிக்கரையில் காற்றாகப் பறந்துகொண்டிருந்தது. இளஞ்சூரியனின் பொற்கதிர்கள், மலையும் மருதநிலமும் சூழ்ந்த அந்த நிறை ஏரியின் நீர்த்தகட்டிலே பட்டுப் பிரதிபலித்துத் தேஜோமயமாகக் காட்சியளித்தன. நீர்ப்பரப்பில் அங்கங்கே அல்லியும் தாமரையும் இதழ் விரிதது இளநகை புரிந்தன. தன்னைப் போலவே இயற்கையணங்கும் இன்பத்தில் இறுமாந்திருப்பதைக் கண்டு வஜ்ரபாணி உள்ளம் பூரித்துப போனான். அந்தப் பூரிப்பில் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தான். பாடிக்கொண்டே ஆலோசனையில் ஆழ்ந்தான். லலிதாவின் பிறந்த நாள் விழாவுக்கு ஏற்ற இயற்கையான சூழ்நிலை. இந்த நேரத்துக்குள் அங்கே சமையல் வேலை ஆரம்பமாகியிருக்கும். தான்

அங்கே சென்றதும், வீட்டுக்குப் பின்புறமுள்ள தோட்டத்தில் நாற்காலிகளை ஒழுங்காகப் போடச் சொல்ல வேண்டும். பிற்பகல் தொடங்கினால் விருந்தினர்கள் ஒவ்வொருவராக வந்திறங்குவார்கள். அவர்களை வரவேற்பதற்குத்தான் நேரம் இருக்கும். அதனால் அதற்குள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிக்கவேண்டும்.

லலிதாவின் மனத்தில் அப்போதப்போது விசித்திரமான யோசனைகள் உதிப்பதும், அதற்கு வஜ்ரபாணி இந்தியில் சம்மதம் தெரிவிப்பதும் சாதாரணமாக நடக்கக்கூடிய சங்கதியே. கல்யாணத்துக்கு முந்திய விஷயங்கள் அவனுக்குத் தெரியாவிட்டாலும், அதன்பின் அவன் லலிதாவின் பிறந்தநாள் விழாவை நான்கு முறை கொண்டாடிவிட்டான். அந்தக் கொண்டாட்டங்களெல்லாம் நகரத்திலுள்ள அவனுடைய புதிய பங்களாவில் நூற்றுக்கணக்கான மக்களின் மத்தியில் ஆடல்பாடல்களோடு வேடிக்கையும் விமரிசையுமாய் நடந்தன. இந்த முறையும் அப்படித்தான் நடந்திருக்கும்! ஆனால் லலிதா குறுக்கிட்டதால் அவன் நினைவு ஈடேறவில்லை.

பிறந்த நாள் வர இன்னும் பத்து நாள் இருக்கும்போது பௌர்ணமி இரவில் இரவரசனைக் கண்டு உள்ளம் பொங்கிப்போன கடலின் அலைகளைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்த லலிதா, இருந்தாற்போல் தலையைச் சற்று உயர்த்தி, ''இந்த முறை பிறந்த நாள் விழாவை நம் ஊரிலேயே நடத்திக்கொள்ளலாம்'' என்றாள்.

''அந்தப் பட்டிக்காட்டிலா? அங்கே என்ன, லலிதா, கிடைக்கும்?'' என்று அவன் கேட்டான்.

''தேவையான சாமானையெல்லாம் இங்கிருந்தே எடுத்துக்கொண்டு போய்விடுவோமே?''

''எடுத்துக்கொண்டு போய்விடலாம் என்றே வைத்துக்கொள். ஆனால் அவ்வளவு தூரம் யார் வருவார்கள்? உன்னையும் என்னையும் தவிர, சமையற்காரனையும் பெட்ரோமாக்ஸ் லைட் சுமக்க நம்ம நாரியையும் தவிர, அங்கே யாருமே இருக்க மாட்டார்களே!''

''அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். இங்கே ஏதோ கடனைக் கழிப்பதுபோல் - கடமையை நிறைவேற்றுவதுபோல் - ஜனக்கூட்டம் வந்து ஆஜராகிவிட்டுப் போய் விடுகிறது. இவர்களில் எத்தனை பேருக்கு நம்மீது உள்ளன்பு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? போகட்டும்; இதை ஒரு பரீட்சை என்றே வைத்துக்கொள்ளுங்கள். உள்ளன்போடு வர விரும்புகிறவர்களுக்கு எழுபது மைல் ஒரு பெரிய தூரம் ஆகிவிடுமா?''

லலிதாவின் வாதத்தை அவனால் மறுக்க முடியவில்லை.

சம்பங்கி மலர்களின் வாடை கம்மென்று வீசியது. வஜ்ரபாணி எழுந்து நன்றாக உட்கார்ந்தான். கார் அவர்களுடைய மாந்தோப்பு வழியாகச் சென்றுகொண்டிருந்தது. நகரத்தின் நெரிசலில் ஆயிரக்கணக்கான அலுவல்களை எப்போதும் கவனிக்க வேண்டியிருந்தும், எப்படியோ தன்னை விடுவித்துக்கொண்டு சொந்தக் கிராமத்துக்கு அவன் வரும்போதெல்லாம் இந்த மாந்தோப்பிலுள்ள சம்பங்கி மலர்களின் மதுர சுகந்தந்தான் அவனுக்கு வரவேற்பிதழை வாசித்தளிக்கும். இந்தத் தோப்பு, தோப்பின் நடுவில் தோண்டிய கிணறு, கிணற்றைச் சூழ்ந்துள்ள நந்தியாவட்டை மலர்ச் செடிகள், அவற்றை அடுத்துச் சரமாரியாகக் காய்த்துக் குலுங்கும் கொய்யா மரங்கள் இவையனைத்தும் அவனுக்குப் பாலியத்திலிருந்தே பழக்கமானவை. இங்கே வந்து உட்கார்ந்தால் எப்படிப்பட்ட மனக்கவலையும் மாயமாய் மறைந்துவிடும். ஆனால் இந்த அமைதியான சூழ்நிலையில் அவனால் அதிக நாள் இருக்க முடியாது. இரண்டு மூன்று நாட்களிலேயே புளித்துப் போய்விடும். உற்சாகத்தோடு ஒரு கணமும் ஓயாது ஓடிக்கொண்டேயிருக்கிற வாழ்க்கைதான் அவனுக்கு வேண்டும். அது இங்கே கிடையாது.

ஊரின் எல்லையைக் கடந்து கார் பெரிய வீதியை அணுகியது. அந்தக் கிராமத்துக்கு அதுதான் ராஜவீதியும் பஜார் வீதியும். வஜ்ரபாணி சிறிது முன்னால் நகர்ந்து ஊரை உற்று நோக்கினான். ஊரை அடுத்துள்ள மலர் வனத்திலே இருக்கிறது அவனுடைய மாளிகை. பட்டணத்திலிருந்து வரும்போதும் போகும்போதும் தவிர, மற்றப்படி கிராமத்துக்குள் நுழையவேண்டிய அவசியமே இல்லை. ஒருவேளை தப்பித் தவறி நுழைந்துவிட்டால் போதும்; குழந்தைகள் கூட்டம் அவனை ஒரு விநோத ஜந்துவைப் பார்ப்பதுபோல் பார்க்கும். அதனால் ஊரில் நுழைவதே ஏதோ ஓர் அவமானச் செயல்போல அவனுக்குத் தோன்றும்.

பெரிய வீதியின் வழியாகக் கார் சென்றுகொண்டிருந்தது. வஜ்ரபாணி டின்னைத் திறந்து, இன்னொரு சிகரெட்டை வெளியே எடுத்தான். தீப்பெட்டியை எடுத்துப் பற்ற வைக்கப் போனான். அதற்குள் திடீர் பிரேக் போட்டு வண்டியை டிரைவர் நிறுத்தினான்.

''இங்கே என்னவோ கலாட்டா நடக்குதுங்க'' என்றான்.

''அதற்கெல்லாம் என்ன குறைச்சல்! வாழ வழி தெரியாவிட்டாலும் கட்சி கட்சிகளாகப் பிரிந்து அடித்துக்கொண்டு கோர்ட்டுக்குப் போகமட்டும் இவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீ ஒதுக்கிக்கொண்டு வண்டியை ஓட்டப்பா, அஹமத்'' என்றான் வஜ்ரபாணி.

ஆனால் ஒதுக்கி ஓட்டுவதற்காக அஹமத் செய்த முயற்சி எதுவும் பலிக்கவில்லை. வீதியில் இருநூறு பேருக்கு மேல் கூடிக் கிடந்தார்கள். அந்தக் கூட்டத்தில் எங்கே யார்மீது கை விழுகிற தென்பதை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. ஹார்னை முடிந்தமட்டும் அடித்தான். ஆனால் அதற்குப் பலன் இருந்தால்தானே!

இதற்குள் ஜனக்கூட்டம் காரையும் சூழ்ந்துகொண்டது. வானத்திலிருந்து இறங்கிய புஷ்பக விமானத்தைப் பார்ப்பதுபோல இதை அந்த மக்கள் பார்த்தார்கள். சச்சரவு செய்துகொண்டிருந்த ஜனங்களுக்கிடையே சமரசம் ஏற்படுத்த முயற்சி செய்த சில பெரியவர்கள், காரை அணுகி வந்து, ''நீங்கள் சமயத்துக்கு வந்தீர்கள். உங்களுக்கு ஆயிரம் ஆயுசு. பெரிய மனசு பண்ணி இங்கே கொஞ்சம் இறங்குங்களேன்'' என்று கூறிக்கொண்டே கரம் குவித்தார்கள்.

''இங்கே உட்கார்ந்து இந்தத் தகராறைத் தீர்த்து வைக்க எனக்கு இப்போது நேரமில்லை'' என்று கோபத்தோடும் அலட்சியத்தோடும் வஜ்ரபாணி பதில் அளித்தான்.

இரு கட்சிகளுக்குமிடையே ராஜி பேசுவதில் மேல்துண்டு பறிபோனதையும் அறியாத ஒரு பெரிய மனிதர் இவனுக்கு அருகில் வந்து, ''நீங்களே இப்படிச் சொன்னால் நாங்கள் யாரிடம் சொல்லிக்கொள்வது? பெரிய மணியகாரர் காலத்தில் கிராமத்தில் 'கீச்சு மூச்சு'ச் சப்தங்கூட இராது. அவர் சொர்க்கவாசலுக்குப் போய்விட்டார். இந்தச் 'சிறிசுகள்' நாங்கள் சொல்வதையே கேட்பதில்லை. என்ன செய்வது?'' என்றார்.

பெரிய மனிதர் விநயத்தோடு வேண்டிக்கொண்டதால், வஜ்ரபாணி தட்ட முடியவில்லை. காரை விட்டு இறங்கிக் கூட்டத்துக்குள் புகுந்து, ''ஏய்! என்ன கலாட்டா?'' என்று கேட்டான்.

கடல் அலையாக இரைந்துகொண்டிருந்த ஜனக்கூட்டம் கண நேரத்தில் அமைதியில் ஆழ்ந்தது. ''விஷயத்தைச் சொல்லுங்களேன்'' என்று துரிதப்படுத்தினான் வஜ்ரபாணி.

உண்மையில் அங்கே நடந்ததை வஜ்ரபாணிக்கு யாராவது சொல்லாமல் அவனுக்கு எப்படித் தெரியும்? அங்கே நடந்தது டிரைவர் சொன்னதுபோல அப்படி ஒன்றும் கலாட்டா இல்லை. இரு கட்சியும் சமமாக இருந்துகொண்டு அங்கே அடித்துக்கொள்ளவில்லை. ஒரு புறம் ஏழெட்டு முரடர்கள் கையில் தடியோடு நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு எதிராக ஒரே ஒருவன் இருந்தான். அவனும் தரையில் விழுந்து எழுந்திருக்கப் பிரம்மப்

பிரயத்தனம் செய்துகொண் டிருந்தான். அடிதடியில் சிக்கிச் சின்ன பின்னமாகியிருந்த அவனுடைய உடைகளிலே அவன் உடலிலிருந்து வெளிப்பட்ட ரத்தம் தோய்ந்து வெயிலில் மின்னியது. காலிலுள்ள காயத்திலிருந்து ரத்தம் இன்னும் பிரவாகமெடுத்து ஓடிக்கொண் டிருந்தது.

கார் அங்கே வந்து நிற்பதையும் அதிலிருந்து வஜ்ரபாணி இறங்கியதையும் கண்ட ஆயுதந் தாங்கிகள், தப்பியோட முயன்ருர்கள். ஆனல் அதற்கு இடங் கொடாமல் வஜ்ரபாணி ஸ்தலத்துக்கே வந்து நின்ருன்.

''யார் இவன்? ஏன் இப்படி இவனை அடித்தீர்கள்?'' என்று கூட்டத்தில் இருந்தவர்களை நோக்கி வஜ்ரபாணி கேட்டான்.

''தெரியவில்லையா, அண்ணு? நான்தான் ரங்கன்.''-அடிதடிகளுக்குச் சரீரத்தை அர்ப்பணம் செய்து வேதனைப் பட்டுக்கொண் டிருந்த அந்த மனிதன் வஜ்ரபாணியின் பக்கமாகத் தன் முகத்தைத் திருப்பினன்.

பாம்பை மிதித்தவன்போல் பதற்றம் அடைந்தான் வஜ்ரபாணி. அவன் ரங்கன்! அலட்சியமென்னும் ஆயுதமேந்தி இந்த உலகத்தை எந்த விதமான பயமும் இல்லாமல் ஏகாங்கியாக எதிர்த்துக்கொண் டிருக்கும் ரங்கன்!

ரங்கன்மீது வஜ்ரபாணிக்கு என்றுமே நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை. வாழ வகையற்றவர்கள்-சுகத்தை அநுபவிக்க வேண்டிய சொத்தற்றவர்கள்-இப்படி ஊதாரிகளாகத்தான் திரிவார்கள் என்பது வஜ்ரபாணியின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ரங்கனைப் பார்த்த பின்பு அங்கே அதிக நேரம் இருக்க வஜ்ரபாணிக்கு மனம் இடம் தரவில்லை. ரங்கன் எப்படிப்பட்டவன் என்பது அவனுக்கு ஆதியிலிருந்தே தெரியும். உள்ளங்கையில் இருக்கும் நெல்லிக் கனியைப் பார்க்க நிலைக் கண்ணுடி வேறு வேண்டுமா? இப்படி எல்லாரிடத்திலும் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ருல், எவ்வளவு பெரிய அயோக்கியத்தனத்தை ரங்கன் செய்திருப்பான்! எதுவாக இருந்தாலும் அதையெல்லாம் கேட்டுக்கொண் டிருக்க வஜ்ரபாணிக்கு நேரம் ஏது?

அவன் மளமளவென்று கார் அருகில் சென்று, ''நடந்தது போதும், இனி எல்லாரும் வீட்டுக்குச் செல்லுங்கள். இன்னும் ஏதாவது சச்சரவு ஏற்பட்டால் அப்புறம் போலீசுக்குச் செய்தி அனுப்பி விடுவேன். ஜெயிலுக்குப் போய் வந்தால்தான் உங்கள் ஆட்டம் அடங்குமா?'' என்று கூறிவிட்டுக் காரிலே அமர்ந்து, ''நீ வண்டியை ஓட்டப்பா'' என்ருன்.

ஒரு முறை அப்படி எச்சரித்து விட்டு அவன் நழுவிவிடுவான் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. அவன் அப்படி நழுவியது பலருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ரங்கன் வஜ்ரபாணியின் சிற்றப்பா மகன்தான். ஆனலும், ரங்கன் துன்மார்க்கன் என்பது அவன் கருத்து. அதனல்தான் ஒரு முறை எச்சரித்ததோடு போய்விட்டான்.

நந்தவனத்தில் விருந்து முடிவதற்கும் இரவு மணி பத்து அடிப்பதற்கும் சரியாக இருந்தது. எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே விருந்தினர்கள் வந்திருந்தார்கள். வராமல் என்ன செய்வார்கள்? வஜ்ரபாணியின் தொழில் அப்படிப்பட்டது. அவனுடைய மூலதனத்தை ஆதாரமாகக்கொண்டு ஒன்றிரண்டு பிலிம் கம்பெனிகள் வேலை செய்து வருகின்றன. பிரமாதமான முறையில் ஒரு சினிமாப் பத்திரிகை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் கூட நடந்துவருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் விருந்தினர்களின் தொகை கணக்கை மீறியிருந்தது ஆச்சரியப்படத்தக்க விஷயம் அல்ல. திரைப்பட வசன கர்த்தாக்கள், தயாரிப்பாளர்கள், மற்ற உறவினர்கள், நண்பர்கள் எல்லாருமே வந்திருந்தார்கள். வந்திருந்த எல்லாரும் விருந்து, வேடிக்கைகள் முடிவுற்ற பின்பு மாடியில் படுத்து உறங்கினர்கள்.

பெரியதோர் அசுவமேத யாகத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தது போன்ற திருப்தியோடு முன்தாழ்வாரத்தில் சாய்வு நாற்காலியில் வஜ்ரபாணி சாய்ந்தான். நிலவு பாலாகக் காய்ந்தது. 'எந்தக் கணம் எஜமானர் கூப்பிடுவாரோ' என்று எதிர்நோக்கிக் கொண்டு அவன் முன்னிலையில் நின்றுன் வேலைக்கார நாரி.

ஐந்து நிமிஷங்களை ஆலோசனையில் கழித்துவிட்டு, ''ஏய் நாரீ, இப்படிப் பக்கத்தில் வந்து உட்கார்'' என்று வேலைக்காரனை வேண்டினுன் வஜ்ரபாணி.

நாரி நெருங்கினுன். ஐயாவின் அந்தரங்கக் காரியதரிசித் தொழில் கிட்டியதில் ஏற்பட்ட பெருமகிழ்ச்சி அவன் முகத்திலே மலர்ந்திருந்தது.

''ரங்கனை ஒருமுறை வரச் சொன்னுயா?''

''வீட்டுக்குப் போனேன்; காயங்களைக் கட்டிக்கொள்ள அவன் ராமாபுரத்துக்குப் போய்விட்டதாகச் சொன்னுர்கள்.''

''யார் சொன்னது?''

''அவனையும் அவன் பெண்டாட்டியையும் தவிர அந்த வீட்டில் வேறே யார் இருக்கிறுர்கள்? அவனுடைய வீட்டுக்காரிதான் சொன்னுள்.''

வஜ்ரபாணி திடுக்கிட்டு எழுந்து, மீண்டும் அமர்ந்து, ''என்னடா நாரீ, ஊரில் அதற்குள்ளாக ஏதாவது நடந்ததா என்ன? ரங்கனுக்கு ஒரு வீட்டுக்காரியா! என்ன உளறுகிறுய்!'' என்றுன்.

அந்த வட்டாரத்தில் அனைவருக்கும் நன்றுகத் தெரிந்த ரங்கனின் காதல் கதை அதுவரையில் ஐயாவின் காதுக்கு எட்டாதது நாரிக்கு ஆச்சரியமாகவே இருந்தது. நாகரிகத்துக்கும் முற்போக்குக்கும் ரங்கனுடைய காதல் கதை எச்சரிக்கையாகவும் எடுத்துக் காட்டாகவும் ஏககாலத்தில் அமைந்திருந்தது. ரங்கன் வஜ்ரபாணியின் மாந்தோப்பைச் சில காலம் நிர்வகித்து வந்தான். அந்தச் சமயத்தில் அது அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் அரண்மனைபோல் உதவியது. ரங்கன் செல்வச் சீமானுகப் பிறக்காவிட்டாலும் இருக்கிற வரையில் அவன் கை தாராளமானது. தோப்பின் ஓரத்தில் நிற்பவர் எவரா யிருந்தாலும், 'ஒரு காயை இப்படிப் போடுங்க, ஐயா' என்று கேட்டால் போதும்; எந்தவிதமான சலிப்போ, கோபமோ, அகம்பாவமோ இல்லாமல் ஒரு காயை உடனே பறித்துப் போட்டுவிடுவான். ரங்கனின் தாராள மனத்தால் மாந்தோப்பின் மாண்பு பெருகியது; வஜ்ரபாணிக்கு வரவேண்டிய வரும்படி வற்றியது.

தோட்ட வேலை போன பின்பு நூல் அறுந்த பட்டம்போல் ரங்கன் தேசமெல்லாம் திரிந்தான். என்ன தான் சுற்றினுலும் திரும்பத் திரும்பத் தன் சொந்தக் கிராமத்துக்கே வரவேண்டி யிருந்தது. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்பார்கள். ரங்கனுக்குத் தாய் இல்லை; பிறந்த நாடுதான் இருந்தது.

ஒரு முறை ரங்கன் எங்கோ போய்விட்டான். எவ்வளவு தூரம் சென்றுனே, என்ன செய்தானே, யாருக்கும் தெரியாது. மூன்று மாதம் கழித்துத்தான் திரும்பி வந்தான். வரும்போதே கையில் ஒரு புல்லாங்குழலை எடுத்துக் கொண்டு வந்தான். அதில் அவன் புரிந்த சாதனை சுற்றுப்புறத்தில் உள்ளவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இரவு சாப்பிட்ட பின்பு பஜனை மடத்தில் போய் உட்கார்ந்துகொண்டு அவன் குழல் ஊதுவான். அந்த இசையில் அக்கம் பக்கமெல்லாம் கிறங்கி உறங்கிப் போகும். வாசித்தவண்ணமே அவனும் உறங்கிப் போவான்.

ரங்கன் எப்படி ஆதரவற்றுக் கிடந்தானே அதே போல அவனுடைய வேணுகானமும் அலட்சியத்துக்கு ஆளாயிற்று. பிறருடைய போற்றுதலுக்கும் புகழுக்குமாக அவன் வாசிக்கவில்லை. எனவே, அவனுடைய உற்சாகம் குன்றவில்லை. கோயிலுக்கு அருகிலுள்ளவர்களின் உறக்கத்துக்குத் தன்னுடைய கானம் இடைஞ்சலாக இருக்கும் என்று அவன் கவலை கொள்ளவில்லை. தன்மீது அவர்களுக்குள்ள

அபிமானம் அப்படி ஒன்றும் உயர்ந்ததில்லை என்று அவனுக்குத் தெரியும். அந்த அபிமானம் அவன் அவர்களுக்குத் தொண்டு செய்யும் வரையில்மட்டும் இருந்து, நாடக மேடையில் தோன்றும் கடவுளைப் போல் மாயமாய் மறைந்துவிடும். அதற்குமேல் அவன் செய்கிற ஒவ்வொரு காரியமும் அவர்களுடைய ஏளனத்துக்கும் சகியாமைக்குமே ஆளாகும். அதைப் பொருட்படுத்துவதால் என்ன லாபம்?

வறுமைக்கு ஆளாகிக் கஷ்ட நஷ்டங்களால் அவதியுறும் யாருமே தம் வாழ்க்கையில் எங்கேயோ ஓர் இடத்தில் ஒரு திருப்பம் இருப்பதாக எண்ணி, அதற்குப் பிறகு ஆனந்தம் எதிர்கொண்டழைக்கும் என்று ஆசைப்பட்டுக் கனவு காணத்தான் காண்பார்கள். அந்த நம்பிக்கையோடுதான் வாழ்வார்கள். ரங்கனுக்கு அதைப் போன்ற ஆசைகூட இருந்ததில்லை. ஆனாலும் ஆசை ஊற்றெடுக்க ஒரு கண நேரம் போதாதா?

ஒரு நாள் காலை ரங்கன் சற்றுத் தாமதித்து எழுந்து கண்களைத் தேய்த்துக்கொண்டே குடிசையிலிருந்து வெளியே வந்தான். அப்போது சூரியன் இரு பாகைகள் மேலேறியிருந்தது. தமுக்கு அடித்துக்கொண் டிருந்த லிங்கம் அவனைப் பார்த்து, "தெரியுமா, ரங்கா? நாடகம் வருது; நாடகம்! ராமப்பா கம்பெனி நாடகம்!" என்று சொன்னான்.

"வரட்டும், வரட்டும்! ஏதோ பணத்துக்காக அலைகிறானுகள்" என்று ரங்கன் அசட்டையாகச் சொன்னான்.

அவனுக்கு நாடகத்தின் மீது அப்படியொன்றும் அபிமானம் கிடையாது. ஆனால் அந்தப் பக்கத்திலே ராமப்பா கம்பெனி நாடகம் என்றால், எல்லாருமே சோற்று மூட்டையோடு சாரி சாரியாகப் போவார்கள். இருந்தாலும், பொழுது சாய்ந்ததிலிருந்து கோழி கூவும் வரையில் காலணாச் செலவு இல்லாமல் நடு வீதியில் நாடகம் பார்த்த பெரியவர்களால், "நாலு மணி ஆட்டத்துக்கு நாலணாவா? இந்தப் பணம் பிடுங்கல் எல்லாம் எங்கள் காலத்தில் இல்லை, அப்பா" என்று சொல்லிக்கொள்ளாமல் இருக்க இயலாது. காலில் சக்தியுள்ள காளைப் பருவத்தினர்களின் அபிப்பிராயமோ வேறு: "நாலணா அல்பக் காசுதானே! அந்தக் கம்பெனியில் இருக்கிறார்களே இரண்டு பெண்கள்; அவர்கள் எடுத்து வைக்கிற ஒவ்வோர் அடிக்கும், பாடுகிற ஒவ்வொரு பதத்துக்கும் நாலணாத் தரலாமே!" என்பார்கள்.

உண்மைதான்! அவர்கள் நடையை அளந்துதான் போடுவார்கள். பாட்டும் நன்றாக இனிமையுடனே பாடுவார்கள். அவர்களுடைய ஆடலும் பாடலும் கிராமத்திலே ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் சேமித்து வைத்திருந்த சில்லறைகளைக் காலி செய்துவிடக் கூடிய மாய சக்தி பெற்றிருந்தன.

தெருக்கூத்தாகவும் இல்லாமல் நகரத்தில் காட்டுகிற நாடகமாகவும் இல்லாமல் இரண்டும் இரண்டறக் கலந்த ஒரு புதிய கலா ரூபமாகப் பரிணமித்தது ராமப்பா கம்பெனியாரின் நாடகம். அதனால் தான் ரசிகர்களிடம், 'பார்த்தால் ராமப்பா கம்பெனி டிராமா பார்க்கவேண்டும். அப்பப்பா! எத்தனை டான்ஸ், என்ன சீன்!' என்ற ஏகோபித்த புகழுரையை அது பறித்துக்கொண்டது.

முதல் இரவு கிருஷ்ண லீலை நடந்தது. ரங்கன் டிக்கட் வாங்காமலே பாதி ஆட்டத்துக்குப் பின் காவல்காரனுக்குத் தெரியாமல் உள்ளே நுழைந்து ஒரு மூலையில் உட்கார்ந்தான். அப்போது கோபிகைகளுக்கு நடுவில் லீலைகள் புரியும் கிருஷ்ணன் குழல் ஊதிக்கொண் டிருந்தான். ரங்கன் சிறிது நேரம் அதைப் பொறுத்துக்கொண்டு கேட்டான். பிறகு காதுகளை மூடிக்கொண்டு, "தம்பீ, இது புல்லாங்குழல் இல்லை. சாவு மேளம் போல் இருக்கிறது. நிறுத்தி விடப்பா" என்று கூச்சலிட்டான். ஹார்மோனியத்தின் பின்னால் நின்றுகொண்டு ஜனங்கள் எப்படி ரசிக்கிறார்கள் என்பதை எட்டி எட்டிப் பார்த்துக்கொண் டிருந்த

ராமப்பா, இந்தக் கூச்சலைக் கேட்டு மேடைக்கு வந்து, ''யாரது? யாரது?'' என்று எரிந்து விழுந்தான். இப்படிப்பட்ட சமயங்களில் பின்வாங்கி விடுகிறவன் அல்ல ரங்கன். ''நான்தான் அப்படிச் சொன்னது'' என்று அவன் எழுந்து நின்முன்.

''மீரா சாயபு! நாயுடு!'' என்று ஆத்திரத்தோடு கண்ட்ராக்டர்களைக் கூவி அழைத்தான் ராமப்பா. கண்ட்ராக்டர்களுக்கு டிக்கட் விற்பதில் இருக்கும் சிரத்தை நாடகம் ஒழுங்காக நடக்கிறதா என்று பார்ப்பதில் இராது. சீட்டுகள் கொடுக்கும் அறையை மூடிவிட்டு அவர்கள் எப்போதோ ஊருக்குள் போய்விட்டார்கள். குழுமியிருந்த சில பெரியவர்கள் எழுந்து, ''உனக்கென்னடா தெரியும்? நீ சும்மா உட்காரடா'' என்று சொல்லி ரங்கனை அடக்கி, நாடகத்தைச் சுமுகமான முறையில் மேற்கொண்டு நடத்த வழி வகுத்தார்கள்.

ஐந்து நாள் நாடகம் நடந்தது. ஆறுவது நாள் கழுத்திலே ஹார்மோனியத்தை மாட்டிக் கொண்டு வசூலுக்காக வலம் வந்தார்கள் கம்பெனிக்காரர்கள். பெரிய வீதியைச் சுற்றிவிட்டுச் சந்துக்கு வருவதற்குள் இரவு எட்டு மணி ஆகிவிட்டது. ராமப்பா மலைத்தாற்போல் சட்டென்று ஓர் இடத்தில் நின்றுவிட்டான். நின்று, ''எங்கிருந்து இந்தப் புல்லாங்குழலின் நாதம் வருகிறது?'' என்று கேட்டான்.

ராமப்பாவின் பின்னுல் வந்து கொண்டிருந்த ஒரு சிறுவன், ''அன்னைக்கு நாடகத்தில் கூச்சல் போட்டான் பாரு; அவன் பாடுமுன்'' என்முன்.

ராமப்பா வசூலை விட்டுவிட்டு ரங்கனின் குடிசைக்கு முன்னுல் போய் நின்முன். குடிசைக்கருகில் இருந்த அரச மரத்தடியில் உட்கார்ந்திருந்த ரங்கன், ''என்ன, ராமப்பா. வசூலுக்கு வந்தாயா? நான் கொடுக்கிறவன் இல்லை. வாங்குகிறவனே'' என்று சொல்லிச் சிரித்தான்.

''அதற்கென்ன, வாங்கிக் கொள்ளலாம். எங்கே ஒரு பாட்டுப் பாடு கேட்கலாம்'' என்முன் ராமப்பா.

ரங்கன் குழலை ஏந்தி ஊதினுன். பாட்டு முடிந்தபின், ராமப்பா குடிசையைப் பார்த்துக்கொண்டே, ''விளக்கைக்கூடப் பொருத்திவைக்காமல் இங்கே ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிருய்?'' என்று கேட்டான்.

''விளக்கேற்ற இங்கே யார் இருக்கிருர்கள், ராமப்பா? இது தீபம் இல்லாத வீடு'' என்முன் ரங்கன்.

ரங்கனின் முகத்தை ராமப்பா கூர்ந்து கவனித்தான். ஒற்றை நாடி; நல்ல உயரம். ஓடுகிற பாம்பை மிதிக்கக் கூடிய வாலிபப் பருவத்தின் நிகுநிகுப்பு நிறைந்த உருவம். நீலமேக வர்ணம். தலையில் அந்தப் பிறைச் சந்திரனின் அரை ஒளியில் ராமப்பாவின் கண்களுக்குச் சாட்சாத் ஸ்ரீ கிருஷ்ணனுகவே ரங்கன் காட்சியளித்தான்.

''உன்னேடு ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். இப்படிக் கொஞ்சம் வருகிருயா?'' என்று அவனை ராமப்பா அழைத்தான்.

அவன் அருகில் ரங்கன் சென்முன். மறு நாள் நாடகக் கம்பெனி ஊரைவிட்டுப் போய்விட்டது. அவர்களோடு ரங்கனும் போய்விட்டான்.

ஆறு மாத காலம் திரும்பாமல் இருந்த ரங்கன் ஒரு நாள் திடீரென்று ஊருக்குள் பிரவேசித்தான். அவன் அயலூர் சென்று திரும்பி ஊருக்கு வரும்போதெல்லாம் வெறுங் கையுடன் வருவதில்லை. இந்த முறையும் அதில் தவறவில்லை. நாடகக் கம்பெனியில் இருந்த ஒரு சின்னப் பெண்ணையே கூட்டிக்கொண்டு வந்துவிட்டான்.

ரங்கன் அவளை அழைத்து வந்தானு அல்லது அவள்தான் அவனை இழுத்துக்கொண்டு வந்துவிட்டாளா என்ற சர்ச்சையில் சிலர் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, ரங்கனுக்குச் சம வயசுடைய வேறு சிலர் தங்களுக்கு 'வீடு வாசல்' என்றும், 'சொத்துச்

சுகம்' என்றும் 'தோட்டந் துரவு' என்றும் எவ்வளவோ இருந்த போதிலும், ரங்கனுக்கு அல்லவா அவள் கிட்டினுள் என்று உள்ளுக்குள் வேதனைப்பட்டார்கள். அந்த வேதனையை மறப்பதற்காக ரங்கனைக் கேலி செய்வதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழி? தன் சோற்றுக்கே வக்கில்லாதவன் அவளை எங்கே காப்பாற்றப் போகிருன்? ஆடப் பிறந்த அவள்தான் அவன் கூடவாழ்வாளா?.. அவர்களுடைய கேலிக் கேள்விகள் பெருகின. இப்படிக் கேலி பேசியவர்களும் ரங்கன் வீட்டைச் சுற்றியே வளைய வளைய வந்துகொண் டிருந்தார்கள். அவன் வீட்டில் இல்லாதபோது சிலர் சுந்தரியோடு பேசவும் துணிந்தார்கள். ஒருவன் ஒரு புஸ்தகத்தில் இருந்த காதல் கடிதத்தை 'ஈ அடித்தான் காப்பி' அடித்துச் சலவைக்காரி மூலமாகச் சுந்தரியிடம் சேர்ப்பித்தான். ''முட்டாள் பயல்! எழுதினுல் என்ன வந்துவிட்டது!'' என்று சொல்லி, ரங்கன் அதைக் கிழித்து அடுப்பில் போட்டான். பலாத்காரம் நடக்கும் அளவுக்குக் கதை வளர்ந்துவிட்டது. ரங்கனுக்குச் சாதாரணமாகக் கோபமே வராது. வந்துவிட்டால் அவன் மனிதனே அல்ல. அந்தக் கோபத்தோடு, கடிதக்காரனை நடுவீதியில் வழிமறித்து நிறுத்தி, ''உனக்கு உடன்பிறந்த சகோதரிகள், மனைவி மக்கள் யாருமே இல்லையா? அவர்களை யாராவது பலாத்காரம் செய்வதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பாயா? இருப்பா யென்ருல், நீ உப்புக்காரம் இல்லாத கோரைப் புல்லையா தின்கிருய்?'' என்று காரசாரமாகக் கேட்டான். பணப்பலத்தோடு ஆள் பலமும் பெற்றிருந்த அந்த ஆசாமிக்கு ரங்கனின்மீது ஒரே புகைச்சல்.

ரங்கனின் இந்தக் கதையையெல்லாம் நாரியிடம் கேட்டுக்கொண்டே வந்த வஜ்ரபாணி, ''கதை இன்னும் முடியவில்லையா?'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்.

''இது இதோடு முடியாது. தொடர்ந்து நடந்துகொண்டேயிருக்கும்'' என்ருன் நாரி.

வஜ்ரபாணி பற்றவைத்த சிகரெட்டை அப்போதே அணைத்தெறிந்துவிட்டு, மாடிக்குப் போய்த் தன் அறையில் படுத்துக்கொண்டான். தூங்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் படுத்துக்கொண்டான். ஆனுல் உறக்கந்தான் வரவில்லை. வீதியில் அடிபட்டு விழுந்து எழுந்திருக்க முடியாமல் கிடந்த ரங்கனின் உருவம் அவன் மனத் திரையிலிருந்து அகலவே இல்லை. கண்களை இறுக மூடினுன். தன் தொழில் விஷயங்களைக் குறித்து ஆலோசிக்க முயன்ருன். மூன்று ஜாம நேரமும் விழிப்பிலேயே கழிந்து போயிற்று. இறுதியில் சிறிது உறக்கம் வந்தது. அதில் ஒரு கனவு. அந்தக் கனவிலுங்கூட ரங்களு தென்பட வேண்டும்?

ரங்கனைக் கடுமையாக எச்சரிக்க நினைத்தான் வஜ்ரபாணி: ''டேய் ரங்கா, நீ நேர்வழியில் நடக்காமல் வீணுக அலையும் சோம்பேறிக் கூட்டத்திலே முதல்வனுக நிற்கிருய்! இந்த உலகில் எல்லாருமே பேரரசர்கள் ஆகிவிட முடியாது. வறுமையில் உழலுபவர்களும் இருக்கத்தான் இருப்பார்கள். ஆனுல் அந்த ஏழைகளும் தங்கள் வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொள்ளாமல் இல்லை. அப்படிப்பட்ட ஒரு வழியை நீ வகுத்துக்கொள்ளவில்லை. இருந்தால் சாப்பிடுகிருய்; இல்லாவிட்டால் பட்டினி கிடக்கிருய். விரும்பினுல் வேலை செய்கிருய்; விரும்பாவிட்டால் காலை நீட்டிப் படுத்துக்கொள்கிருய். இதுவும் ஒரு வாழ்க்கைப் பாதைதான் என்று நீ வாதாடலாம். ஆனுல் வாழ்க்கையை இவ்வளவு சுலபமாக எண்ணுகிறவர்களுக்கு வேறு எந்த விதமான உறவும் இருக்கக்கூடாது. நீயோ எங்கேயோ நாடகத்தில் ஆடிக்கொண் டிருந்த பெண்ணை இழுத்துக்கொண்டு வந்து வீட்டிலே வைத்திருக்கிருய். உனக்கே வகை இல்லையே! இதில் அவளை வேறு ஏன் கட்டிப் போட்டுக்கொண்

டாய்? சுத்தப் பைத்தியக்காரத் தனம்! இல்லே, அவள் உன்னிடமே இருந்து வாழ்ந்துவிடப் போகிருளா என்ன? இப்போதே ஊரில் ஒரே சண்டையும் சச்சரவும் எழுந்து விட்டன. இத்தனைக்கும் காரணம் அவளே என்று நான் மட்டும் சொல்லவில்லே; ஊரே சொல் கிறது. சாக்கடையில் விழவே கூடாது. விழுந்துவிட்டாய். இனி யாவது போய்க் குளித்துவிட்டுச் சுத்தமாய் இருக்கக்கூடாதா?''

இந்த வார்த்தைகளைக் கேட்டு வஜ்ரபாணியின் அருகில் வந்து ரங்கன் நின்ருன். தாழ்ந்த குரலில், ''அண்ணு'' என்று அழைத்தான். வஜ்ரபாணி திடுக்கிட்டுத் தலையை அவன் பக்கம் உயர்த்திஞன். ''எனக்கு அப்போதப்போது அறி வுரைகள் வழங்குவது உங்கள் வழக்கம். நீங்கள் என்மீது சாட் டிய குற்றச்சாட்டுகளை நான் ஒப்புக்கொள்கிறேன். குற்றவாளி யான என் வாக்குமூலத்துக்கும் நீங்கள் தயை செய்து காது கொடுக்க வேண்டும். என் வாழ்வுக் கான வழியை வகுத்துக்கொள்ள வில்லே என்கிறீர்கள். அன்ருடச் சோற்றுக்கு வழி வகுத்துக் கொள்வதே என் வழக்கம்; என் னுடைய அரைகுறைப் படிப்பை வைத்துக்கொண்டு எந்த உத்தி யோகத்துக்குப் போக முடியும்? 'இருந்தால் சாப்பிடுகிருய்; இல்லா விட்டால் பட்டினி கிடக்கிருய்' என்கிறீர்கள். உண்மைதான்; கிடைத்தால்தானே சாப்பிட முடியும்? இல்லாவிட்டால் எப்படிச் சாப்பிடுவது? நான் சோம்பேறி இல்லே; வேலே கிடைத்தால் செய் யச் சித்தமா யிருக்கிறேன். வேலே கிடைக்காதபோது காலே நீட்டிப் படுத்துக்கொள்ளாமல் வேறே என்ன செய்வது? 'வாழ்க்கையை இவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு ஏன் பெண் டாட்டி?' என்று நீங்கள் கேட் கிறீர்கள். எனக்கு நன்ருகத் தெரி யும்; தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டு அலேபவர்கள்கூடப் பெண்டாட்டி பிள்ளைகளோடு வாழ்கிருர்கள். அவர்களை நீங்கள் பார்க்காவிட்டாலும் நான் பார்த் திருக்கிறேன். ஆனுலும், ஒன்று: இவளை நாஞகவே இழுத்துக் கொண்டு வரவில்லே. இவள் என் மீது நம்பிக்கை வைத்தாள். இருந்த இடத்திலேயே இருக்க வழியில்லாமல் இங்கே வந்து விட்டோம். இந்த இடத்தில் எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. நீங்கள் கல்லூரியில் படித்துக்கொண் டிருந்தபோது ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்றீர்கள். பெரியப்பா அதற்குச் சம்மதிக்க வில்லே. ஆனல் ஒரே பிடிவாதமாக இருந்து அவளைக் கல்யாணம் செய்துகொண்டீர்கள். நீங்கள் கலப்பு மணம் செய்துகொண்டதற் காக ஆயிரம் பேர் உங்களைப் புகழ்ந்தார்கள். என்னை அப்படி யாரும் புகழ வேண்டாம்; ஏளனம் செய்யாமலாவது இருக்கலாம் அல்லவா? அவளை நானே போஷிக்க வேண்டுமென்பதுகூட இல்லே. நான் செய்கிற எந்த வேலேயையும் அவளும் துணையாய்ச் செய்வாள். இந்த உலகத்தில் கோடானுகோடி மக்கள் வாழவில்லேயா? எங்களால் மட்டும் வாழ முடியாமல் போகாது. எங்களைப் பிறர் வாழ விட்டால் அதுவே எவ்வளவோ பெரிய உபகாரம். நான் சாக்கடை யில் விழுந்துவிட்டதாகச் சொன் னீர்கள். நான் சாக்கடையில் விழவே இல்லே. அதனுல் நான் எந்த விதமான பரிகாரமும் தேட வேண்டிய அவசியம் இல்லே.''

கதவை யாரோ தட்டுவது கேட்டு வஜ்ரபாணி விழித்துக் கொண்டான். சூரிய கிரணங்கள் ஜன்னல் வழியாக அவன் படுக்கை யில் பாய்ந்தன. நாரி கதவருகில் நின்றுகொண்டு, ''ஐயா, ரங்கையா காத்துக்கொண்டு நிற் கிருர்'' என்ருன்.

''இப்போது நான் பட்டணம் போக வேண்டும். நேரமில்லே. அவனை அனுப்பிவிடு'' என்று வஜ்ரபாணி அவசர அவசரமாகப் பதில் அளித்தான்.

மூன்று மாதம் கழித்து மீண்டும் ஒரு முறை வஜ்ரபாணி தன் சொந் தக் கிராமத்துக்குத் திரும்பி

வரநேர்ந்தது. குளிர் காலம். ஆண்டு தோறும் பனித் துகள் பூமியில் விழ ஆரம்பிப்பதும், லலிதா இரும ஆரம்பிப்பதும் ஒன்ருகவே நிகழும். பட்டணத்தில் இருந்த டாக்டர்கள் அந்த இருமலுக்குப் பெயர் கொடுப்பதில் மட்டும் கெட்டிக் காரர்களாக இருந்தார்களே ஒழிய, அதைப் போக்க யாராலும் முடியாமல் போய்விட்டது. இறுதி யில் பனிக்காலம் முழுவதும் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என் ருர்கள். ஓய்வு என்பது நகரங் களில் காசு கொடுத்து வாங்கி விடக்கூடிய ஒரு பொருளா என்ன? லலிதா கிராமத்திலேயே தங்க நேர்ந்தது.

காரிலிருந்து இறங்கிக் கொண்டே, லலிதாவின் உடல் நிலையைக் குறித்து வஜ்ரபாணி விசாரித்தான். சிற்றுண்டி உண்ட பின்பு பாலியப் பிராய உறை விடமான தோட்டத்திலே உலவிச் சற்று நேரம் மௌனமாகக் கழித்துவிட்டுத் திரும்பவும் பிற் பகல் உணவை ஏற்றுக்கொண்டு நித்திரையில் ஆழ்ந்தான். டணர் டணரென்று ஒலித்த கடிகாரத்தின் ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தான். மேஜையில் இருந்த பிளாஸ்கைத் திறந்து காபியைக் கிளாஸில் ஊற்றிக் குடித்தான். படுக்கையிலிருந்து எழுந்திருக்க அவனுக்கு மனமே இல்லை. படுத் துக்கொண்டே செய்திப் பத்திரி கையைப் புரட்டினன்.

ஹாலில் காலடி ஓசை கேட்டது. லலிதாதான் வருகிருளோ என்று எண்ணித் தலையை உயர்த்தினன். ஆனல் அந்தக் காலடி ஓசை லலிதா வுடையது அல்ல. ஜன்னலுக்கு அப்பால் கண நேரம் ஒரு மின்னல் கொடி படர்ந்தாற்போல அவனுக் குத் தோன்றியது. அவன் கட்டிலி லிருந்து இறங்கி ஜன்னலருகே சென்ருன். யாரோ ஒரு யுவதி! முற்றும் தனக்குப் பரிசய மில்லாத ஒரு யுவதி! ஆனல் அவள் ஒரு பெண்ணுகத் தோன்றவே யில்லை; மின்னல் கொடியாகவே தோன்றினள். படிகளின் வழியாக ஏறி மாடிக்குப் போனுள்.

யார் இந்தப் பெண்? இந்த வீட்டுக்கு நன்ருகப் பழக்கமானவள் போல் அல்லவா தோன்றுகிருள்? 'லலிதா வந்தவுடன் இவளைப் பற்றிக் கேட்டுவிட வேண்டும்' என்று எண்ணிக்கொண்டே லலிதாவை எதிர்நோக்கிக் கொண்டு வஜ்ரபாணி படுக்கையில் அமர்ந்திருந்தான்.

சரியாக ஐந்து மணி இருக்கும். லலிதா பிரசன்னமானுள். இருவ ரும் கை கோத்துக்கொண்டு பின்னு லிருந்த தென்னங் கொல்லையில் உலவினுர்கள். 'லலிதா, அவள் யார்?' என்ற கேள்வி நாலைந்து முறை அவன் தொண்டை வரையில் வந்து நின்று போய் விட்டது. அவளைப்பற்றி அவ்வளவு அக்கறை காட்டுவது நல்லதா? இப்படி அவன் ஆலோசனை செய்து கொண் டிருந்தபோது லலிதாவே அவளைப்பற்றிப் பிரஸ்தாபித்தாள்.

''என்னுங்க? இங்கே ஒரு பெண் வந்திருக்கிருளே; அவளைப் பார்த் தீங்களா?'' என்ருள்.

ஒன்றுமே தெரியாதவன்போல, ''எவளை?'' என்று வஜ்ரபாணி கேட்டான்.

''சுந்தரியை! அவள் பெயர் சுந்தரி.''

''சுந்தரியா?''

''ஆமாம். ஏன் அப்படிப் பார்க் கிறீங்க? புரியவில்லையா? உங்கள் தம்பியின் மனைவிதான்'' என்ருள் லலிதா.

''எனக்கு ஒரு தம்பி; அவனுக்கு ஒரு மனைவியா? ஏதாவது கதை சொல்கிருயா, லலிதா?''

''கதை ஒன்றும் இல்லை. அவள் உங்கள் ரங்கனின் மனைவி.''

வஜ்ரபாணிக்கு இப்போது கோபம் வந்துவிட்டது. ''லலிதா, நீ மனைவி என்ற மாகாத்மியமான சொல்லுக்கு மாசு கற்பிக்கிருய். ரங் கன் அவளை இழுத்துக்கொண்டு ஓடிவந்தான். ரங்கனுக்கு அவள் எந்த உறவாக வேண்டுமானுலும் இருக்கலாம்; ஆனல் ஒருகாலும் மனைவியாக மாட்டாள்.''

இந்த வாதம் லலிதாவுக்குப் புரியவே இல்லை. ''இழுத்துக் கொண்டு வந்தது என்னவோ உண்மைதான். ஆனல் அவர்கள்

ஒரு கோயிலுக்கு முன்னிலையில் நின்றுகொண்டு கணவனும் மனைவியுமாக வாழ்வதாகச் சத்தியம் செய்துகொண்டவர்களாமே! அப்படியிருக்கும்போது, மனைவி என்று சொல்வதிலே என்ன தவறு?''

''நன்றாக இருக்கிறது! அவர்கள் தற்சமயத் தம்பதிகளாக்கும்!'' என்று கூறிக்கொண்டே வஜ்ரபாணி சிரித்தான்.

''போகட்டும். அவள் ஏன் நம் வீட்டில் இருக்கிறாள் என்று நீங்கள் கேட்கவே இல்லையே!''

''பேஷ்! அவள் நம் வீட்டிலேயே இருக்கிறாளா? மேற்கொண்டு ஏதாவது கதை நடந்துவிட்டதோ? அவள் என்னவாவது வேலையாக வீட்டுக்கு வந்திருப்பாள் என்றல்லவா நினைத்தேன்!''

''இல்லை. நம் வீட்டிலேயே தான் இருக்கிறாள்.''

''ஏன்?''

''உங்கள் தம்பி இப்போது ஊரில் இல்லை. அதனால்தான்.''

''என்ன ஆனான்?''

''இரண்டு வருஷம் கிடைத்தது.''

''என்னது?''

''தண்டனை.''

''கொஞ்சம் புரியும்படி விவரமாகச் சொல், லலிதா. எனக்கு ஒன்றுமே தெரியாது.''

''நீங்கள் ஊருக்குப் போய்ப் பத்து நாள் ஆகியிருக்கும். அதற்குள் ஒரு சச்சரவு ஏற்பட்டது. யாரோ ஒருவருடைய தலையை ரங்கன் உடைத்துவிட்டான்.''

''உயிருக்கு ஒன்றும் ஆபத்து ஏற்படவில்லையே!''

''உயிர் போகவில்லை. ஆனால் கண் போயிற்று. போலீஸ்காரர்கள் வந்து ரங்கனைக் கைது செய்து கொண்டு போய்விட்டார்கள்.''

''நான் நினைத்தபடி நடந்திருக்கிறது. இவளை நடுத் தெருவில் நிறுத்திவிட்டு அவன் ஜெயிலுக்குப் போய்விட்டானாக்கும்!''

''பாவம்! சுந்தரியைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.''

''இருக்காது பின்னே! 'கண்ணல்ல, பால் குடி; மிட்டாய் தின்னு' என்று கொஞ்சுவதற்கு உனக்குத் தெரியாதா என்ன?''

''ஆண்களுக்கு எல்லாமே விளையாட்டாகத்தான் இருக்கும். 'இந்த இரண்டு வருஷத்தையும் என்னுடனேயே கழித்துவிடு' என்று அவளிடம் சொன்னேன்.''

''உம், அப்புறம்.''

''அவள் இல்லாவிட்டால் இங்கே என்னால் இருக்கவே முடியாது போங்கள். அவள் பாடுவதை நீங்கள் கேட்டதில்லையே; அவள் பாடினால் இன்றைக்கெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாம்.''

''கணவன் சிறையில் இருக்கும் போது இங்கே பாடிக்கொண்டிருக்க, வாழ்க்கை என்ன ஒரு சினிமாப் படமா, லலிதா?''

''இல்லைங்க. அவள் என் கட்டாயத்தின் பேரில்தான் பாடுகிறாள். நீங்கள் அவளைப் பார்த்தீர்கள் அல்லவா? உங்கள் கண்ணுக்கு அவள் எப்படித் தென்பட்டாளோ?''

''நட்சத்திரமாக மின்னுகிறாள்.''

இருவரிடையேயும் வேண்டாத அமைதி ஒன்று நிலவியது. மீண்டும் லலிதாவே பேச ஆரம்பித்தாள்.

''என்னங்க; உங்களிடம் ஒரு வார்த்தை.''

''ஒன்றென்ன? நிறையச் சொல்.''

''நம்மால் முடிந்தபோது பிறரை முன்னுக்குக் கொண்டுவருவதில் தவறு ஒன்றும் இல்லையே?''

''இதென்ன கேள்வி, லலிதா? அது மிக மேலான காரியம்.''

''அப்படியானால் நான் சொல்கிறபடி கொஞ்சம் கேட்கிறீர்களா?''

''கைகேயி கேட்ட வரம் போல் இல்லாவிட்டால் சரி.''

''சுந்தரியைச் சினிமாவில் சேர்த்துவிடலாம் என்று நினைக்கிறேன்.''

இந்த யோசனை வஜ்ரபாணியின் மனத்திலும் உதிக்கத்தான் உதித்தது. ஆனாலும் சற்றுச் சந்தேகப்படுகிறவன்போல் மனைவியிடம் பேசினான்: ''வெள்ளித் திரையில் மின்னுவதற்குப் பாட்டுமட்டும்

தெரிந்திருந்தால் போதாது, லலிதா; வேறு சில யோக்கியதைகளும் வேண்டும்.''

''நாடகத்தில் அவள் நன்ருக நடித்தவள்தானே!''

வஜ்ரபாணி ஆலோசித்தான். அவனுடைய ஆலோசனைகள் இரு துருவங்களாகப் பிளந்து போயின. ஒரு முறை சுந்தரியின் நிலையைக் குறித்து அநுதாபப்பட்டான். அடுத்த கணம் அவளை இந்த நிலைக்குக் கொண்டுவந்த ரங்கன் மீது எரிந்து விழுந்தான். அவள் ஆதரவற்ற அநாதையாக இருக்கிருள். அவனே அண்ணன் பெயரை நிலைநாட்டுகிறவனுக இல்லாமல் ஊதாரியாகத் திரிகிருன். என்ருே ஒரு நாள் அவன் அதோகதியாகப் போகிருன். அவளைக் காப்பாற்றத்தான் வேண்டும். இதற்கு லலிதா கூறிய யோசனை சிறந்ததாகவே அவனுக்குத் தோன்றியது.

சூரியன் அஸ்தமித்து ஊரெங்கும் மின்சார விளக்குகள் ஜகஜ்ஜோதியாக ஒளி வீசிக்கொண்டிருந்த மாலை வேளையில் ஜனக் கூட்டத்தோடு ரங்கனும் சாலையில் நடந்தான். அன்று பிற்பகல்தான் அவனுக்கு விடுதலை கிட்டியது. அப்படி விடுதலை கிட்டும் என்று அவனுக்கே தெரியாது. மாதங்களையும் தேதிகளையும் நினைவில் வைத்துக்கொள்ள அவன் முயன்றதே இல்லை. பத்துப் பதினைந்து நாட்கள் என்ருல் நினைவில் வைத்திருப்பான்; நகர்ந்துபோன நாட்களை எண்ணிக்கொண்டே வந்து மகிழ்ந்திருப்பான். ஆனுல் எழுநூறு நாட்களுக்கும் மேலாக அல்லவா சிறையில் தங்க நேர்ந்தது? செடிகளின் வேரை அரித்துத் தின்னும் பூச்சியைப் போல் இவ்வளவு நாட்களை இந்த இருண்ட அறையில் எப்படிக் கழிப்பது என்ற கேள்வியே அவனுடைய உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்தது. தன்னைச் சுற்றிலும் இருந்த கல் சுவர்களைத் திரும்பத் திரும்பப் பார்ப்பான். அந்தச் சுவர்களிலே முட்டிக்கொண்டாலாவது தன் மனவேதனை மங்குமா என்று எண்ணிக்கொள்வான். மரக் கிளைகளை உற்றுப் பார்ப்பான். அவற்றை வளைத்து ஒடித்துச் சின்னபின்ன மாக்கவேண்டும் போல அவனுக்குத் தோன்றும். அவற்றினின்றும் ஆகாயத்துக்குப் பறந்தோடும் பறவைகளைப் பார்ப்பான். அவற்றைப்போல் தானும் ஒரு பட்சியாக மாறிச் சிறைக் கூடத்திலிருந்து தப்பி ஓடிச் சுந்தரியின் மடியில் விழுவது போலவும், சுந்தரி அவனை மார்போடு அணைத்துக்கொண்டு முத்தமிடுவது போலவும் மனத்திலே எண்ணி மகிழ்வான். உடனேயே உண்மை நிலை நினைவுக்கு வந்துவிடும். 'எல்லாம் வீண் பிரமைதானு! இன்னும் இந்தச் சிறையிலே தானு இருக்கிறேன்? என் சுந்தரி எங்கே?' என்று ஏங்குவான். இந்த ஏக்கத்துடனேயே இத்தனை நாளும் வாழ்ந்து வந்தான்.

ரங்கன் சிறையிலே மனிதனுக வாழவில்லை; யந்திரமாக வாழ்ந்தான். யந்திரத்துக்கு வேலை செய்ய வேண்டுமென்ருே வேண்டாமென்ருே தெரியாது. 'ஸ்விட்'சை இப்படித் திருப்பினுல் ஓடும்; அப்படித் திருப்பினுல் ஓடாது. ரங்கனும் அப்படித்தான் இருந்தான். மேலதிகாரிகள் எழுந்திருக்கச் சொன்னுல் எழுந்திருப்பான்; படுக்கச் சொன்னுல் படுத்துவிடுவான். சாப்பிடச் சொன்னுல் சாப்பிடுவான்; இல்லாவிட்டால் பட்டினி கிடப்பான். எல்லாம் சரியாக இருக்கும் வரையில்தான் யந்திரம் ஓடும். ஏதாவது ஒரு மரை கழன்று போனுலும் அவ்வளவுதான்; அதற்கப்புறம் அது ஓடாது. ரங்கனுடைய வாழ்வும் அப்படித்தான் ஆயிற்று. ஒரு நாள் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தபோது அவன் திடீரென்று கீழே விழுந்தான். காவல்காரன் அங்கே ஓட்டமாய் ஓடிவந்தான். ரங்கனின் உடலைத் தொட்டுப் பார்த்தான். அது அனலாய்க் காய்ந்தது. மேலதிகாரிக்குச் செய்தி ஓடியது. காய்ச்சலாய்க் கிடந்த கைதியிடம் வேலை வாங்கியதற்காகக் காவல்காரன்மீது அந்த அதிகாரி எரிந்து விழுந்தான். தனக்குக் காய்ச்சல்

என்று ரங்கன் சொல்லிக் கொள்ளவே இல்லை. பெற்ற தாயாக இருந்தபோதிலும் குழந்தை கேட்காதபோது பாலூட்டுகிறாளா? கைதிக்கு ஜுரம் என்று ஊகித்து அதற்கான சிகிச்சை செய்யவேண்டுமென்ற துடிப்பு, காவல் போலீஸ்கார னுக்கு எப்படி ஏற்படும்? கீழே விழுந்த பின்பு எத்தனை நாள் கழித்துத் தனக்குச் சுயநினைவு வந்தது என்பது ரங்கனுக்குத் தெரியாது. சுயநினைவு வந்தபின் விழித்தெழுந்து தன்னைத் தானே ஒருமுறை பார்த்துக்கொண்டான். அவன் பழைய ரங்கன் அல்ல. வாடிப்போன இந்த உடலா அவ னுடையது? அவனிடமிருந்து சுந்தரியைப் பிரித்த அந்தப் பாவி கள் இப்போது அவன் உடலையும் பிரித்துவிட்டார்களோ?

ஜுரம் நின்றபிறகு மீண்டும் சிறைக்கூடத்துக்கே ரங்கன் சென் ருன். நோயாளியாக இருந்த காலத் தில் அவனை ஆட்கொண் டிருந்த அமைதி அவனைச் சாசுவதமாகவே ஆட்கொண்டுவிட்டது. வாழ்க் கையில் வெறுப்புற்ற வயோதிக னைப்போல், நட்ட இடத்திலே இருக்கும் கல்லுப் பிள்ளையாராக இருந்தான். வேலை செய்ய ஆரம் பித்தால் உழைத்து உழைத்து உருக்குலைந்து கீழே விழுந்து விடுகிற வரையில் வேலை செய்வான். தன் தண்டனைக் காலமான இரண்டு வருஷமும் எப்போதோ தீர்ந்து போய்விட்டதாகவும், தன்னுடைய வேலைத் திறமையைக் கண்டே மேலதிகாரிகள் தன்னை இருத்திக் கொண்டதாகவும், தன் உடலில் உயிர் இருக்கும் வரையில் அவர் கள் தன்னை வாட்டி வதைத்து விடுவார்கள் என்றும் சில இரவு களில் விபரீதமாக எண்ணிக் கொண்டு கண்ணீர் விட்டிருக் கிருன். ஆனாலும் அதெல்லாம் வீண் பிரமை என்று அவனுக்குத் தெரியாமலும் இல்லை. வேதனைத் தீயில் வெந்துகொண் டிருப்பவர் களுக்கு நிமிஷமெல்லாம் யுகமாகத் தானே தோன்றும்? ரங்கனுக்கு இரண்டு வருஷங்களும் கோடாநு கோடி யுகங்களாகத் தோன்றிய தில் ஆச்சரியமில்லை. அன்று காலை யில் காவல்காரன் வந்து கதவைத் திறந்து, ''உன் தண்டனைக் காலம் முடிந்துவிட்டது'' என்ருன்.

ரங்கன் திரும்பவும் இந்த உல குக்கு வந்து சேர்ந்தான். மெல்லக் காலை இழுத்துக்கொண்டே ரெயில்வே ஸ்டேஷன் வரை நடந் தான். அவன் ஏறவேண்டிய வண்டி அரைமணி நேரம் முன்னதாகவே போய்விட்டது. திரும்பவும் நள் ளிரவு பன்னிரண்டு மணிக்குத்தான் வண்டி. ஊர்ப்புறமாக மீண்டும் நடந்தான்.

அவன் இரண்டு பர்லாங்கு நடந்திருப்பான். அங்கே ஒரு சின்ன வீதி பெரிய சாலையில் கலந்தது. அந்த வீதி முகப்பில் அவன் அப்படியே நின்று விட் டான். அதற்குக் காரணமாக இருந்தது, ஒரு சினிமா விளம் பரம். அந்த விளம்பரத்தில் கோமளமான ஒரு பெண் நடு வீதியை நோக்கிச் சிரிப்பு மழை பொழிந்துகொண் டிருந்தாள். அந்த விளம்பரத்தை அவன் தற் செயலாகத்தான் பார்த்தான். ஆனால் அதைப் பார்த்தவுடனே அவன் மரமாக நின்றுவிட்டான்.

அந்தப் புன்னகையை அவன் புதிதாகப் பார்க்கவில்லை. பாழடைந்த அவன் வாழ்விலே அந்தப் புன்னகை அடைமழையாக அல்லவா பெய்தது! அந்த இள நகைக்காக, அந்தச் செங்கொழுந் தான இதழ்களிலிருந்து தவழ்ந் தோடும் இன்சொல்லுக்காக அல்லவா அவன் உயிர் வாழ்வதே!

'பாம் பாம்' என்று கத்திக் கொண்டு சாலையிலிருந்து வீதிக்குத் திரும்பிய காரில் அடிபட இருந்து மயிரிழையில் தப்பினுன். தப்பித் துக்கொண்டு மேலும் ஓடினுன். ஓடி, வீதியின் ஓரத்திலிருந்த மற்ருெரு விளம்பரத்தைப் பார்த்து அப்படியே நின்றுவிட் டான். விளம்பரம் வேறு யிருந்தபோதிலும் அதில் இருந்த அந்த வனிதையும் அவளேதான். அந்த வனிதையை மற்ருெரு நிலையில் வரைந்த படம் அது. இப்போது அவள் ஒரு வாலிப னேடு ஜோடியாக அமர்ந்து

கொண்டு ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தாள்.

ரங்கன் கண்களை இறுக மூடிக்கொண்டான். இதயத்தின் ஆழத்தில் தோன்றியிருந்த அந்த எண்ணத்தை வேரோடு பிடுங்கி எறிய முயன்றான். அவள் அவனுடைய சுந்தரியல்ல; சுந்தரியாக இருக்க முடியாது. அவனுடைய சுந்தரி மாற்றானோடு அமர்ந்து ஊஞ்சலில் ஆடுவாளா?

''ஓரமாய்ப் போ, அப்பா. வழி விடப்பா'' என்று கூவிய ரிக்ஷாக்காரர்களின் கூவலைக் கேட்டுத் திடுக்கிட்டு மேற்கொண்டு கொஞ்ச தூரம் நடந்தான். இந்தச் சாலையுடன் இன்னொரு சாலை கலந்தது. சந்தித்த சாலையின் முகப்பில் ஒரு பெரிய ஹோட்டல் இருந்தது. அந்த ஹோட்டலின்மீது ஒரு பெரிய விளம்பரப்படம் இருந்தது. அதைப் பார்த்து அவன் மீண்டும் நின்றுவிட்டான். இதுவரைக்கும் அவள் சிரித்துக்கொண்டிருந்தது போல அதில் சிரிக்கவில்லை. ஊஞ்சலாடவும் இல்லை. வீணை வாசித்தாள். அதே வாலிபன் அவள் பின்னால் நின்றுகொண்டு அவள் கொண்டையில் ஒரு ரோஜா மலரை வைத்துக்கொண்டிருந்தான்.

தன் இதய வீணைக் கம்பிகளை யாரோ அறுத்தெறிந்தது போல ரங்கனுக்குத் தோன்றியது. இந்தச் சினிமா விளம்பரங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள வழியே இல்லையா? அவன் நாலு பக்கங்களிலும் ஓடினான். எங்கே ஓடினாலும் அவன் மனம் மட்டும் அந்தச் சந்தேகத்தைச் சுற்றியே வட்டம் இட்டது. ஆயிரம் பெண்களுக்கிடையில் சிக்கிக் கொண்டாலும் அவன் சுந்தரியைச் சடாரென்று அடையாளம் கண்டுபிடித்துவிடுவானே? அந்தப் பெண் சுந்தரிதான்; இல்லாவிட்டால் அந்தப் படம் ஏன் அவன் இதயத்தை இடியாகத் தாக்குகிறது? 'இல்லை. இல்லை! அவள் சுந்தரி இல்லை. நான் குற்றவாளியாகக் கூண்டுக்குள் நுழைந்த பின்பு சுந்தரிதான் ஆதரவற்ற அநாதை ஆகிவிட்டாளே! அவள் எங்கேயோ ஓர் இடத்தில் கூலி வேலை செய்து தன் வயிற்றைக் கழுவிக்கொண்டு, வைத்த கண் வாங்காமல் என்னை எதிர்பார்த்துக்கொண்டல்லவா இருப்பாள்! சினிமா நட்சத்திரமாக ஒளி வீசிக்கொண்டிருக்கும் இவள், 'சுந்தரியாக - வாழ்க்கைப் பாரத்தை ஏற்றுக்கொண்டு ஆனந்தத்தையும் அமைதியையும் இழந்துநிற்கும் அபாக்கியவதியான சுந்தரியாக-இருக்கவே முடியாது' என்றுதான் எண்ணினான்.

இரவு எட்டு மணி இருக்கும். தூண்களாக மரத்துப் போயின அவன் கால்கள். நடக்க முடியாமல் ஒரு மரத்தடியில் அமர்ந்தான். அங்கே படுத்துக்கொண்டு சிறிது நேரம் தூங்கினால் எவ்வளவோ ஆனந்தமாக இருக்கும் போல் அவனுக்குத் தோன்றியது. ஆனால் துரதிருஷ்டந்தான் எங்கே போனாலும் அவனைத் துரத்திக்கொண்டே வருகிறதே! அந்த மரத்துக்குச் சிறிது தூரத்தில் விளக்கொளியின் வெள்ளத்தில் தெப்பமாக ஒரு சினிமா தியேட்டர் மிதந்துகொண்டிருந்தது. அணைந்தணைந்து எரியும் மின்விளக்குகளின் ஒளியில் சுந்தரியின் உருவம் தோன்றித் தோன்றி மறைந்தது. ரங்கனுக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. தியேட்டருக்குச் சென்று ஓர் எட்டணாக் காசை வீசி எறிந்து டிக்கெட்டைக் கேட்டான். எட்டு மணி சுமாருக்குச் சினிமா பார்க்க வந்திருக்கும் அந்த அபூர்வ மனிதனை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டு கிளார்க் டிக்கெட்டைக் கொடுத்தான்.

எந்த மகத்தான காதலோவியத்தைச் சினிமா ரசிகர்கள் ஆவலோடு உற்றுப் பார்த்தார்களோ அதே காதலோவியத்தை அவனால் ஆறு நிமிஷங்களுக்குமேல் பார்க்க முடியவில்லை. கதாநாயகியின் ஓரக் கண் பார்வையை ரசித்த ரசிகர்கள் கைகொட்டினார்கள். அது ரங்கனுக்கு யாரோ அவன் தலையில் சம்மட்டி கொண்டு தாக்குவது போல் இருந்தது. கதாநாயகன் சிரித்ததைக் கண்டு ரசிகர்கள் எல்லாரும் 'கொல்' என்று சிரித்தார்கள். அந்தச்

சிரிப்பு அவனைப் பார்த்து ஏளன மாகச் சிரித்த சிரிப்பாக அவன் மனத்தை வாட்டியது. திடீரென்று, ''போதும்; நிறுத்துங்கள்!'' என்று கூச்சலிட்டான். எல்லாரும் பைத்தியக்காரனைப் பார்ப்பது போல அவனைப் பார்த்தார்கள். இரண்டு முரடர்கள் அவனை அலாக்காகத் தூக்கி வெளியே கொண்டு வந்து வழியைக் காட்டினார்கள்.

ஒரு குறிக்கோளும் இல்லாமல் ரங்கன் மீண்டும் வீதிகளில் அலைந்தான். பத்து மணி ஆகும் போது, சினிமாவுக்குப் போவதும் வருவதுமாக ஜனக் கூட்டம் அலைந்தது. அந்த ஜனக்கூட்டத்தில் இருந்த சில நட்சத்திர அபிமானிகள் நட்சத்திரங்களின் அந்தரங்க வாழ்க்கையைப்பற்றிப் பேசிக் கொண்டு சென்றார்கள். கதாநாயகியைப்பற்றிய பேச்சு வந்தது. 'அவளுக்கு வந்த அதிருஷ்டந்தான் அதிருஷ்டம்! எங்கேயோ நாடகம் ஆடிக்கொண் டிருந்த அவளை எவனோ இழுத்துக்கொண்டு போய் இறுதியில் அவளையும் நட்டாற்றில் விட்டுவிட்டுத் தானும் எங்கோ ஓடிப் போனான். அப்படி ஆதரவில்லாமல் கிடந்த அவளுக்கு எப்படியோ சினிமாக்காரர்களின் ஆதரவு கிட்டியது. அப்புறம் அவள் நட்சத்திரமாகவே மாறிவிட்டாள்' என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

ரங்கனின் அநுமானம் மேலும் சிறிது ஊர்ஜிதமாயிற்று; முழு நம்பிக்கை ஏற்பட்டது என்று கூடச் சொல்லலாம். ஆனாலும் அவனுக்கு ஏதோ ஒரு மூலையில் ஒரு சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது. தன் காதுகளையும் கண்களையும் மட்டும் நம்பி விட முடியுமா?

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு ரங்கன் தலையை உயர்த்தினான். தூரத்தில் இருந்த ரெயில்வே ஸ்டேஷனில் புகை விட்டவண்ணம் ரெயில் நின்றுகொண் டிருந்தது. அவன் ஏறுவதற்காகவே காத்திருந்தது போல, அவன் ஏறியதும் ரெயில் புறப்பட்டது.

செய்திப் பத்திரிகையில் விசித்திரமான ஒரு செய்தி வெளி வந்தது. கட்டங் கட்டிக் கொட்டை எழுத்தில் 'நடிகை தேடும் பித்தன்' என்ற தலைப்பில் இந்தச் செய்தி வெளியாகியிருந்தது: ''ஊர் பேர் இல்லாத தேசாந்தரி ஒருவன், ஒரு சினிமா நடிகையின் வீடு எங்கே என்று விசாரித்துக்கொண்டே நகரத்தில் சுற்றுகிறான். ஆளைப் பார்த்தால், கண்ணை மூடிக் கொண்டு காட்டிலே கடுந்தவம் புரிந்த சந்நியாசி போலத் தோன்றுகிறான். சினிமா நடிகையை ஒரு முறை கண்ணால் பார்ப்பதைத் தவிர, தனக்கு வேறு எந்தக் கெட்ட எண்ணமும் கிடையாதென்கிறான்.''

இந்தச் செய்தி பிரசுரமாகிக் கொண் டிருக்கும்போது, அந்தச் சினிமா நடிகையின் வீட்டில் ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தது.

சினிமா நடிகையின் வீட்டைக் காவல் புரிந்துகொண் டிருந்த கூர்க்காவை, அவனும் ஒரு மனிதன் தானே என்று எண்ணிக்கொண்டு ரங்கன் நெருங்கினான்.

''யார் நீ? என்ன வேண்டும்?'' என்றான் கூர்க்கா.

ரங்கன் பயந்து போனான். ஆனாலும் பயந்து என்ன லாபம் என்று எங்கிருந்தோ தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, பையில் கையை விட்டு நான்கு பீடிகளை எடுத்துக் கூர்க்காவிடம் கொடுத்து, ''ஒண்ணும் நினைத்துக் கொள்ளாதே. ஒரே ஒரு முறை உள்ளே போய்விட்டு வந்து விடுகிறேன்'' என்றான்.

''உள்ளேயா! அடே பைத்தியம், போடா தூர''. என்று கர்ஜித்தான் கூர்க்கா.

''இரண்டே நிமிஷத்தில் திரும்பி வந்துவிடுகிறேன்'' என்று கெஞ்சினான் ரங்கன்.

கூர்க்காவின் கண்கள் நெருப்புக் கோளங்களாக மாறின. இடுப்பிலே இருந்த தோல் பையிலிருந்து பளபளக்கும் பிச்சுவாவை உருவினான்.

துடை நடுங்கிப் போய் ரங்கன் அங்கிருந்து ஓடியே போனான்.

கூர்க்காவைச் சாந்தப்படுத்துவதற்கான வழிகள் என்ன என்பதைச் சற்று நேரம் கழித்து ஆலோசிக்கத் தொடங்கினன். அவன் கையில் காசில்லை; இருந்தால் அது எவ்வளவாக இருந்தாலும், அந்தக் கூர்க்காவிடம் கொடுக்க அவன் தயங்கியிருக்க மாட்டான். அப்படிக் கொடுப்பதாக இருந்தாலும் அந்தக் கூர்க்கா பணத்துக்கு மசிகிறவனுகத் தெரியவில்லையே! கெஞ்சிக் கேட்கலாம் என்றால், வாயைத் திறக்கு முன் எரிந்து விழுகிறனே! இன்னும் என்னதான் செய்வது?....ரங்கன் மதில் சுவர்களை ஒரு முறை பார்த்தான். ஊஹூம்; பயம் இல்லை. சுவர் உயரமாயிருப்பதுடன், கண்ணுடித் துகளை வேறு அதில் பதித்திருக்கிறர்களே!

சாலையில் பறந்துகொண்டிருந்த கார் ஒன்று சட்டென்று மாளிகைக்குள் பிரவேசித்தது. அவனுடைய ஆலோசனைகள் இதைப் பார்த்ததும் அலுத்துப் போயின. கார் வேகமாக அவன் முன்பு சென்றது. ரங்கன் கணநேரந்தான் காருக்குள் பார்வையைச் செலுத்தியிருப்பான். தன் சுந்தரியைக் கண்டுகொள்ள அந்தக் கணநேரம் போதாதா? அந்த நிமிஷத்திலேயே தனக்கும் சுந்தரிக்குமுள்ள தற்சமய வேற்றுமையை மறந்துவிட்டு, "சுந்தரீ! சுந்தரீ!" என்று கூவிக்கொண்டே முன்னல் ஓடினன்.

மாடி வீட்டுக்கு முன்னே நின்றுகொண்டிருந்த காரிலிருந்து இறங்கியபடி டிரைவரைப் பார்த்து, "கேட் அருகில் எவனே காரைத் தொடர்ந்து ஓடி வந்தாற்போல் இருக்கிறதே!" என்றாள் சுந்தரி.

"அப்படிங்களா? நான் கவனிக்கவில்லையே!" என்றான் டிரைவர்.

"நீ காரை ஷெட்டுக்கு எடுத்துக்கொண்டு போ" என்று சொல்லிவிட்டு, சுந்தரி கேட்வரை நடந்தாள். கூர்க்கா எழுந்து நின்று சலாம் செய்தான்.

"யாரவன்? எப்படிப் போனன்?" என்று விசாரித்தாள் சுந்தரி.

"எவனே ஊதாரி. இனிமேல் இங்கே வர முடியுமா? போலீஸ்காரங்களோடு போயிட்டான்."

சுந்தரி தலையைத் தாழ்த்திக்கொண்டு திரும்ப மாளிகையை நோக்கி நடந்தாள். எதிரில் தென்பட்ட வஜ்ரபாணி, "எங்கே போயிருந்தாய், சுந்தரி, இந்த வெயிலில்?" என்று கேட்டான்.

"எங்கேயும் இல்லை. பூந்தோட்டத்துக்குப் போய் வரலாமென்று.."

"என்ன கதைக்கிறய்! பூந்தோட்டத்துக்கு இதுவா வழி? அப்படியல்லவா போகவேண்டும்?" என்று சொல்லிக்கொண்டே சிரித்தான் வஜ்ரபாணி.

சுந்தரி சில சமயம் சுயநினைவை இழந்து வருவது வஜ்ரபாணிக்குத் தெரியாமலில்லை. அப்படி மனத்தைப் பறிகொடுப்பதற்கான மூல காரணமும் அவனுக்குத் தெரியும். மனிதன் எவ்வளவுதான் உன்னத நிலையை அடைந்துவிட்டபோதிலும் அவனுடைய ஆலோசனைகள் அனைத்தும் வேறோர் உலகத்தைச் சுற்றிச் சுழல்வதைக் கண்டு அவன் தன்னைத்தானே நொந்துகொண்டான்.

சுந்தரியை முதல்முதலாகத் திரைவாணிக்கு அறிமுகப்படுத்தும்போது, வஜ்ரபாணி அவள்மீது பெருநம்பிக்கை வைத்திருக்கவில்லை. அவள் அவனிடம் காட்டிய பயபக்திமட்டும் அவன் உள்ளத்திலே திருப்தியை உண்டாக்கியது. தான் காட்டிய பரோபகாரத்தை அவள் ஒரு நாளும் மறக்கமாட்டாள் என்று நம்பினன். ஆனல் சுந்தரியைப்பற்றிய அவனுடைய அபிப்பிராயங்கள் சிறிது காலத்திலேயே தாறுமாருயின. அவளிடம் முன்னுக்கு வரக்கூடிய சக்தி இருப்பதை அறியக் கூடியவர்கள் அறிந்துகொண்டார்கள். அவர்கள் வஜ்ரபாணியிடம் விஷயத்தைச் சொன்னர்கள். அதிலிருந்து சுந்தரியிடம் அவன் அதிகமான சிரத்தை காட்டத் தொடங்கி

ஞன். தினம் அவளைப்பற்றிய ஆலோசனையில் ஆழ்ந்தான்.

ஆறு மாதத்துக்கு முந்திய ஒரு சங்கதி: அப்போதுதான் சுந்தரி திரைவானிலே பிரகாசிக்க ஆரம்பித்தாள். இரவு பகலாக அவளுக்கு ஷூட்டிங் இருந்துகொண்டே இருந்தது. ஒருநாள் வஜ்ரபாணி அவளைப் புறக் காட்சி எடுப்பதற்கு அழைத்துக்கொண்டிருந்த போது, தபால்காரன் அவளுக்கு ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். இரண்டு வாரத்துக்கு முன்பு தபால் ஆபீஸில் சேர்த்த அந்தக் கடிதம் அவளைத் தேடித் தேசமெல்லாம் சுற்றிவிட்டு வந்து சேர்ந்தது. ரங்கன் சாவுக்கும் வாழ்வுக்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தும், நெருங்கிய உறவினர்கள் யாராவது இருந்தால் அவனை வந்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டும் ஜெயில் அதிகாரிகள் எழுதிய கடிதம் அது.

''படப்பிடிப்பை ஒத்திப் போடுங்கள். நான் அங்கே போக வேண்டும்'' என்ருள் சுந்தரி.

வஜ்ரபாணிக்கு ஒரே கோபம். பல லட்ச ரூபாய்ச் செலவில் ஆரம்பமாக இருந்த படப்பிடிப்பை, கேவலம் ரங்கனைப் பார்ப்பதற்காகவா ஒத்தி வைக்க வேண்டும் என்கிருள்? அவளுக்கு எப்படி இந்த மாதிரி எண்ணங்கள் தோன்றுகின்றன? - அவனுல் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

''உங்களைத்தான், கேட்கிறேன்: எனக்கு எப்படியாவது நான்கு நாள் லீவு வாங்கித் தாருங்கள்'' என்று மன்ருடிஞள் சுந்தரி.

அவன் சுந்தரியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் அந்த விஷயத்தில் கண்டிப்பாக இருப்பதை உணர்ந்துகொண்டான். அதைப் புரிந்துகொண்டு, ''சுந்தரி, ரங்கன் என் தம்பிதான். அவன் மீது உனக்கு இருக்கும் அக்கறை எனக்கும் இருக்கிறது. இங்கே பல்லாயிரம் ரூபாயை நஷ்டப் படுத்திவிட்டு அவனைப் போய்ப் பார்ப்பதால் என்ன வந்துவிடும்? உனக்குப் பதிலாக நான் போகிறேன். முடிந்தால் அதிகாரிகளிடம் பேசி அவனை அழைத்துக் கொண்டே வந்துவிடுகிறேன். சரி தானே!'' என்று தோரணையை மாற்றிக்கொண்டான்.

சுந்தரி அதற்கு ஒப்புக்கொண்டாள்.

தன் வாழ்வில் சிறிதுகூட இஷ்டமில்லாத ஒரு காரியத்தை வஜ்ரபாணி செய்தானென்ருல், அது ரங்கனைப் பார்க்கச் சென்றது தான். அவன் அங்கே சென்ற போது, ரங்கன் சுயநினைவற்றுப் படுக்கையில் கிடந்தான்.

''நோயாளியின் நிலை எப்படி இருக்கிறது?'' என்று நர்ஸை வஜ்ரபாணி கேட்டான்.

''என்னமோங்க. இப்படிப்பட்ட கேசுகளை நான் நிறையப் பார்த்திருக்கிறேன். நூற்றுக்கு ஏதோ இரண்டொருவர்தான் பிழைக்கிருர்கள்'' என்ருள் நர்ஸ்.

டாக்டரிடமும் வஜ்ரபாணி இதே கேள்வியைக் கேட்டான்.

''மதில்மேல் பூனையாகத்தான் இருக்கிறது. ஒன்றும் சொல்வதற்கில்லை'' என்ருர் டாக்டர்.

''இப்படிப்பட்ட கேசுகளில் இரண்டொருவர்தான் பிழைக்கிருர்கள் என்று சொல்கிருர்களே; வாஸ்தவந்தானு, டாக்டர்?'' என்று கேட்டான் வஜ்ரபாணி.

''யார் சொன்னது?'' என்று டாக்டர் சற்றுக் கடினமாகக் கேட்டார்.

''உங்கள் நர்ஸ்தான், டாக்டர்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. பத்துப் பதினைந்து பேர் வரையில் தப்பித்துக்கொள்கிருர்கள்.''

ஏனே வஜ்ரபாணிக்கு மட்டும் டாக்டரைவிட நர்ஸே அதிக அநுபவம் வாய்ந்தவள் என்று பட்டது. டாக்டர் சொன்னதை வைத்துக்கொண்டு பார்த்தால்கூட, அவன் பிழைப்பதற்கான அவகாசம் இருப்பதாகத் தெரியவில்லை. பிழைக்கும் பதினைந்துபேரை விடப் பிழைக்காத எண்பத்தைந்து பேரில் ஒருவனுக ரங்கனை எண்ணிக்கொள்வதில் நியாயம் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

அன்று மாலையே வஜ்ரபாணி பட்டணத்துக்குத் திரும்பினுன்.

முகத்தைச் சோக மயம் ஆக்கிக் கொண்டு, ''சுந்தரி, இனி நமக்கு அவன் இல்லையம்மா'' என்று ரங்கன் இறந்து போனதுபோலவே படும்படி வஜ்ரபாணி அந்தச் செய்தியைச் சொல்லிவிட்டான்.

என்னவோ திடீரென்று ஆச்லேஷா பிக்சர்ஸ்காரர்களுக்குப் பிச்சைக்காரர்கள் தேவைப்பட்டார்கள்.

இரண்டொரு பிச்சைக்காரர்களைத் தேடுவதில் அவர்களுக்கு அவ்வளவு கஷ்டம் ஏற்படாது. கேட் கீப்பரையோ மற்றப்படி அங்கே வந்திருக்கும் நடிகர்களின் உறவினர்களையோ அவர்கள் அந்த வேஷத்துக்கு ஆளாக்கிக் கொள்வார்கள். ஆனால் இப்போது அவர்களுக்குச் சுமார் நூறு பிச்சைக்காரர்கள் அல்லவா தேவை? அதுவும் நிஜமான பிச்சைக்காரர்களாக இருந்தால் நல்லது என்று சிலர் யோசனை வேறு கூறியிருந்தார்கள்.

தயாரிப்பாளர் டைரக்டரைப் பார்த்தார். டைரக்டர் மானேஜரைப் பார்த்தார். மானேஜர் சாலையோரங்களைத் தேடி நடந்தார். மறுநாள் காலையில் ஸ்டுடியோவுக்கு இரண்டு லாரிகள் நிறையப் பிச்சைக்காரர்களின் கூட்டம் வந்திறங்கியது.

புன்னகை புரியும் பூந்தோட்டத்தினிடையே அமைந்திருந்த அரச மண்டபத்தைக் கண்டு பிச்சைக்காரர்கள் வியப்புற்றார்கள்.

''அடேயப்பா, பிரம்மாண்டமான மாளிகை!'' என்றான் ஒருவன்.

''இதென்ன வெறும் கடுதாசி அட்டை!'' என்றான் மற்றொருவன்.

''அப்படியானால் இதெல்லாம் வெளிவேஷந்தானா?'' என்று சந்தேகப்பட்ட மூன்றாம் பிச்சைக்காரன் கேட்டான்.

''உஷ்! சப்தம் போடாதீர்கள். நீங்கள் எல்லாரும் ஒவ்வொருத்தராக இந்த வழியாக மேலே போக வேண்டும். போய் ராணியின் முன்னால் நின்று நமஸ்காரம் செய்து அவள் தருகிற தானங்களைப் பெற்றுக்கொண்டு திரும்பி வர வேண்டும். என்ன தெரிந்ததா?'' என்றார் டைரக்டர்.

ஒரு சந்தேகப் பேர்வழி டைரக்டரை மறித்து, ''மகாராணிக்கு இன்று இவ்வளவு தயை தோன்றக் காரணம் என்னங்க, ஸார்?'' என்று கேட்டான்.

''அட என்னடா சந்தேகம்! சொல்கிறேன், கேள்: ராஜா அண்டை நாட்டோடு சண்டை போடுகிறார். யுத்தத்தில் ராஜா ஜயிக்க வேண்டுமென்று கோரியே தர்மம் செய்கிறாள்'' என்று டைரக்டர் விளக்கினார்.

பிச்சைக்காரர்கள் ஒவ்வொருவராக ராணியிடம் தர்மம் பெற்றுக்கொண்டு திரும்பினார்கள்.

''இன்னும் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?'' என்று சலிப்போடு காமிராமேன் கேட்டான்.

''இதோ கடைசி ஆள்!'' என்றார் டைரக்டர்.

அந்தக் கடைசிப் பிச்சைக்காரன் மகாராணியின் முன்பு நின்றான். தோழி எடுத்துக் கொடுத்த நூதன வஸ்திரத்தை மகாராணி அவனுக்கு வழங்க வந்தாள். பிச்சைக்காரன் கரங்களை முன் நீட்டினான். மகாராணி பிச்சைக்காரனைப் பார்த்தாள். பிச்சைக்காரன் மகாராணியைப் பார்த்தான். ''சுந்தரீ! சுந்தரீ!'' என்று அவன் கத்தினான். ராணி, ''ரங்கா! ரங்கா!'' என்று கத்திக்கொண்டே எழுந்து, ''ரங்கா! இந்தக் கோலத்திலா?.. உங்களை இந்தக் கோலத்திலா..'' என்று கதறி அதற்கு மேல் ஏதும் சொல்ல வாயெழாமல் திணறியபடி ஓடி வந்து அவனுடைய கழுத்தை வளைத்து அவனை அணைத்துக்கொண்டாள்.

டைரக்டர் பயத்தோடு, ''கட்! கட்! கட்!'' என்றார்.

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

முயலும் ஓநாயும்



பட்டினியாகக் கிடந்த ஓர் ஓநாய், கெட்டிக்கார முயல் ஒன்றைப் பிடித்துக்கொண்டது. ''நீ என்னை நீண்ட நாளாக ஏமாற்றி வருகிறாய். உன்னைத் தின்னாமல் விடப் போவதில்லை'' என்று ஓநாய் உறுமியது.

''நான் மிகவும் சின்னவன். என்னைப்போல மூன்று முயல்கள் கிடைத்தாலும் உன் பசி அடங்காதே'' என்றது முயல்.

''எப்படி இருந்தாலும்உன்னை நான் தின்னத்தான் போகிறேன்'' என்று உறுதியாகக் கூறியது ஓநாய்.

''ஓர் ஆட்டு மந்தை முழுவதையும் உனக்குக் காண்பித்தால், நீ என்னை விடமாட்டாயா?'' என்று முயல் கேட்டது.

''ஓ! ஆட்டு மந்தையைக் காட்டு!'' என்று அவசரப்பட்டது ஓநாய்.

அந்தச் சிறு முயல் ஓநாயை ஒரு பெரிய மரத்தின்மேல் அழைத்துச் சென்று, அதன் இடுப்பிலே ஒரு கயிற்றின் முனையைக் கட்டி, மறு முனையை மரத்தில் இறுகக் கட்டியது. ''நாளைக் காலையில் மந்தை மந்தையாக ஆடுகள் ஆற்றில் நீர் குடிக்க இந்த மரத்தின் கீழே போகும். நீ மேலே தொங்குவதனால் உன்னை அவை பார்க்க முடியாது. சிரமமின்றி அப்படியே தாவிப் பிடித்து அவற்றைத் தின்னலாம்'' என்று கூறி, முயல் ஓடிவிட்டது.

ஓநாய்க்கு இந்தத் திட்டம் மிகவும் பிடித்தது. மறுநாள் பொழுது விடிந்ததும், ஆட்டு மந்தைகள் அந்த வழியே போயின. ஆனால் கயிறு மிகவும் சிறியதாக இருந்ததனால், ஓநாய் அவற்றைத் தாவிப் பிடிக்க முடியவில்லை. அது பசி தாங்காமல் நாக்கைத் தொங்கப் போட்டபடியே, காற்றில் ஊசலாடியது.

—திபேத்தியக் கதை, 'சைனீஸ் லிட்டரச்சர்.'

Manjari - Feb. '58 **Regd. No. M. 4975**

(Regd. as a Newspaper in Ceylon)

மஞ்சரி

பொருளடக்கம்

ஹேவிளம்பி - மாசி **பிப்ரவரி 1958**

ஊரும் உலகமும் ..	.. ..	1
மலை வாழ் மக்கள் ..	சுதேசமித்திரன்	3
பூபௌதிக ஆண்டு ..	.. ..	9
நகைப்பூட்டும் சோஷலிஸ நாடு	ரா. ஸ்ரீ. தேசிகன்	15
வண்டிச் சக்கரம் ..	.. மாத்ருபூமி	19
பயிற்சி விமானப் பொம்மை ..	.. தினமணி	21
சிலந்தி உலகம் ..	.. வித்யாதனம்	25
அடைகாக்கும் யந்திரம் ..	மேழிச்செல்வம்	28
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	33
சுகம் தரும் சூரியன் ..	.. யுவர் ஹெல்த்	37
தன் பெயரில் மோகம் ..	.. ..	40
வெள்ளைக்கரடி வேட்டை ..	அமிர்த பஜார் பத்திரிகை	41
விவேகானந்தரும் கலையும் ..	வேதாந்த கேசரி	47
ராஜசூயம் ..	.. ..	50
ரேடியோவில் இங்கிலீஷ்ப்பாடம்	பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன்	54
பயிர் காக்கும் மந்திரம் ..	பிரஜாமத	57
மஞ்சளின் மகிமை ..	கத்தோலிக்கு சேவை	59
கண்ணீர் விடும் சிலை ..	.. டைம்	61
கல்யாண விசித்திரங்கள் ..	.. கர்மவீர்	64
அன்புக் கலை (ஆங்கிலக் கதை)	ஓ ஹென்றி-டேவிட் மாசிலாமணி	67
விளம்பரப் பெண் (தெலுங்குக் கதை)	ராஜாராம்-சீனிவாசன்	71
முயலும் ஓநாயும் ..	..	(3-ஆம் அட்டை)